www.padippakam.com

கூரியர்

நவம்பர் 1987—தனிப்பிரதி ரூ. 2-00

புதுமைக் கலை

படிப்பகம்

www.padippakam.com



வாழவேண்டிய காலம்...

காங்தோம்பிளே வழிபாடு

இன்றைய பிரேசில் பல்வேறு இன, பண்பாட்டுக் கலப்பினால் உருவானது. போர்ச்சுக்கலிலிருந்து வந்த புதுமைக் கலை ஓவியரும் கட்டிடக்கலையும் பிரேசிலின் சூழ்நிலைக்கேற்ப மாறிய போது இக்கலப்புதொடங்கியது. ஆஃப்ரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட அடிமைகள் கத்தோலிக்க சமயத்தை ஏற்குமாறு வற்புறுத்தப்பட்டனர். ஆயினும் அவர்கள் தம் பண்டைய கொள்கைகளையும் சடங்குகளையும் ஓரளவு மாற்றிப் பேணிவந்தனர். பண்பாடுகளின் கலப்பினால் தோன்றிய சில சமரச வழிபாடுகளும் சடங்குகளும் இன்றும் பிரேசிலின் சில பகுதிகளில் காணப்படுகின்றன.

மேலே: சால்வடோரிலுள்ள பொன்மயமான சாவ் டொமிங்கோ புதுமைக்கலை ஆலய பலிபீடத்தின் முன் நான்கு காங்தோம்பிளே மகளிர் வழிபடுகின்றார்.

படிப்பகம்

www.padippakam.com

யுனெஸ்கோ கூரியர்

- தமிழ் உட்பட 32 உலக மொழிகளில் வெளிவந்து அறிவுப் புரட்சி செய்து வரும் ஒரே சர்வதேச மாத இதழ்!

- சர்வதேசக் கண்ணோட்டத்துடன் அறிவியல், பொருளாதாரம், கல்வி கலை, பண்பாடு, தொழில் நுட்பம் போன்ற துறைகளைப் பற்றி உலக அறிஞர்கள், எழுதும் கருத்துக் களஞ்சியமான கட்டுரைகள்!

- எல்லா வயதினருக்கும் ஏற்ற, ஆவலைத் தூண்டும் அரிய செய்திகள், படங்கள், விளக்கங்கள், வண்ணப் படைப்புகள்!

- தமிழின் தனிப் பெரும் ஆற்றலைத் தரணிக்குணர்த்தி, 'தமிழ் ஓர் அறிவியல் மொழி' என்பதை செயல்பூர்வமாக நிலைநாட்டிவரும் தனிப் பெரும் தமிழ் ஏடு!

- சர்வதேசக் கண்ணோட்டத்தில் உலகைக் காட்டும் பலகணியாக தமிழில் வெளிவந்து கொண்டிருக்கும் இவ்விதழ் இக்லந்தோறும் இடம்பெற வேண்டிய சிந்தனைக் கருவூலம் ஆகும்.

கூரியர்

இதழின் விலை ரூ. 2/-

தனிப்பட்டவர்களுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 21/-

கல்வி நிலையங்களுக்கும் நூலகங்களுக்கும் ரூ. 19/-

தமிழகமெங்கும் ஏஜெண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதுக :

யுனெஸ்கோ கூரியர்
தென் மொழிகள் புத்தக நிறுவனம்
18, கிழக்கு ஸ்பர்டாங்க் சாலை,
சேத்துப்பட்டு, சென்னை-600 031

I-IV பக்கங்கள் தமிழ்ப் பதிப்பில் மட்டும் வருவன

படிப்பகம்

www.padippakam.com

உங்கள் உறவினர்களையும் அன்பு நண்பர்களையும் மகிழ்ச்சியிலாழ்த்த வேண்டுமா? இதோ ஓர் வழி!

அன்புள்ள சந்தாதாரர்களே!

சர்வதேசக் கண்ணோட்டத்துடன் அறிவியல், பொருளாதாரம், கல்வி, கலை, பண்பாடு தொழில்நுட்பம் போன்ற துறைகளைப்பற்றி உலக அறிஞர்கள் எழுதும் கருத்துக் களஞ்சியமான கட்டுரைகளையும் கண்கவர் படங்களையும் விளக்கங்களையும் கொண்ட யுனெஸ்கோ கூரியர் இதழ்களை மாதந்தோறும் படித்து மகிழ்ந்து பயனடைந்து வருகிறீர்களல்லவா?

இம்மகிழ்ச்சியையும் பயனையும் உங்கள் உறவினர்களும் நண்பர்களும் பெறவேண்டாமா? இதோ அதற்கு மிக எளிதான ஒரு வழி.

உங்கள் நெருங்கிய உறவினர்களின் நண்பர்களின் முகவரியோடு ஆண்டுச் சந்தாவான ரூ 21/ஐ அனுப்பினால் போதும் உங்கள் அன்புப் பரிசாக ஓராண்டுக்கு கூரியர் இதழ்கள் அவர்கள் முகவரிக்குப் போய்ச் சேரும்.

நண்பர்களுக்கு மட்டுமா? நூலகங்கள், பள்ளிகள், சங்கங்கள் போன்ற பொது அமைப்புகளுக்கும் நீங்கள் நன்கொடைச் சந்தா செலுத்தலாம். அதுவும் சலுகைச் சந்தா ரூ 19/-ஐ மட்டும் முகவரியோடு அனுப்பினால் போதும். மாதாமாதம் ஓராண்டுக்கு இதழ்கள் போய்ச் சேரும்.

இதற்கு நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் கீழேயுள்ள பகுதியை பூர்த்தி செய்து சந்தாவுடன் 'யுனெஸ்கோ கூரியர்' தென்மொழிகள் புத்தக நிறுவனம், 18 கிழக்கு ஸ்பர்டாங்க் சாலை, சேத்துப்பட்டு, சென்னை-600031 என்ற முகவரிக்கு அனுப்பினால் போதும். மற்றவைகளை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்.

அன்பளிப்புச் சந்தாப் படிவம்

அன்பளிப்புச் சந்தா அனுப்புவர் முகவரி ....

....

....

....

அன்பளிப்புச் சந்தாவுக்கு உரியவர் முகவரி

1 ....

....

....

....

2 ....

....

....

....

3 ....

....

....

....

படிப்பகம்

www.padippakam.com

ஆசிரியர் மடல்

புதுமைக்கலைக் காலம் மேற்கு ஐரோப்பாவில் ஏறக்குறைய 1600இல் தொடங்கி 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை நீடித்திருந்தது. அப்போது ஒரு புதிய பண்பாடு பூத்தது. அது பெரும்பாலும் லத்தீன் நாடுகளில் வளர்ச்சியுற்றபோதிலும், கிழக்கு ஐரோப்பாவிற்குப் பரவி, தென் அமெரிக்காவில் ஸ்பானிய, போர்ச்சுக்கீசிய குடியேற்ற நாடுகளில் பெருமளவு வேரூன்றியது. அங்கு தான் முக்கியமான கலப்பினப் புதுமைக்கலை உருவானது.

புதுமைக்கலைப் பண்பாடானது பெரும் பொருளாதார, சமூக நெருக்கடி நிறைந்த காலத்தின் விளைவாகும். அப்போது வரம்பற்ற முடியாட்சிகளின் ஆடம்பரமும், எதிர் சமயச் சீர்திருத்தத்தின் சடங்குகளும் ஐரோப்பாவின் மனத் தளர்ச்சியை மறைக்க முடியவில்லை. அன்றைய ஐரோப்பாவின் மத நம்பிக்கைகளை லூத்தரின் சமயச் சீர்திருத்தமும், பகுத்தறிவுவாதம், தற்கால அறிவியல் ஆகியவற்றின் முதல் வெற்றிகளும் உலுக்கிவிட்டன.

150 ஆண்டுகள் கழித்து தோன்றிய அறிவு மலர்ச்சிக் காலத்தின் நம்பிக்கையார்வமுள்ள மனித நலப்பண்பு இக்கடுமையான நெருக்கடி உணர்வை அழித்தது. இந்நெருக்கடி உணர்வு புதுமைக்கலைக் கால ஓவிய, இலக்கிய இயல்புகளை வகுத்தது. தெளிவு, தோற்றங்களின் மாய இயல்பு, வாழ்வை நாடகமாகக் கருதுதல், காலப் போக்கின் விரைவை உணர்தல், சாவின் உறுதியை அறிதல், கைத்திறனிலும் கவர்ச்சியிலும் ஈடுபாடு, கலையில் உணர்ச்சிகளை மிகைபட வெளிப்படுத்துதல் போன்றவை அவ்வியல்புகளாகும். ஆயினும் இதற்கு மாறாக தொய்வூட்டும் இப்போக்குகள் உணர்ச்சிகளை வெடித்தெழச்செய்து, வாழ்விலும் இன்பத்திலும் ஆர்வத்தை எழுப்பின. இதை நாம் புதுமைக் கலைக் காலக் காட்சிக் கலைகளின் செழிப்பிலும், வியத்தகு இசையிலும் காணலாம்.

17, 18ஆம் நூற்றாண்டுகளின் ஐரோப்பிய புதுமைக்காலக் கலையும் பண்பாடும் அமெரிக்காவின் ஸ்பானிய, போர்ச்சுக்கீசிய குடியேற்றங்களிலும் காணப்படுகின்றன. அங்கு அது காலப்போக்கில் மாற்றமடைந்தது; ஐபீரியத் தீபகற்ப வகைகள் நுட்பமான மாற்றங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பெற்று, தன்மயமாக்கப்பெற்றன. இன, பண்பாட்டுக் கலப்பு கலையிலும் எதிரொளித்தது. லத்தீன் அமெரிக்க புதுமைக்கலை மெக்ஸிக்கோவிலுள்ள குடியேற்ற நாட்டுக்கலையில் 'சிஸ்டைன் ஆலயம்' எனப்படும் டோனான்ட்ஸின்ட்லா ஆலயம் போன்ற அரும்படைப்புகளில் பிரதிபலித்தது.

புதுமைக்கலை என்பது ஐரோப்பிய, ஐபீரிய—அமெரிக்க கலை மட்டுமல்லாமல், கலை வரலாறு முழுவதும் காணப்படும் "பண்பாட்டு நிலை எண்" எனச் சில திறனாய்வாளர் கருதுகின்றனர். ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் வெளியே, பாரசீகம், சீனா, ஜப்பான், கம்பூச்சியா போன்ற வெவ்வேறு பண்பாட்டுப் பகுதிகளில் புதுமைக்கலையையொத்த கலை தோன்றியுள்ளதென்பது உண்மைதான். நெருக்கடிகளும், கிளர்ச்சிகளும், தளர் நம்பிக்கைகளும் மலிந்த நமது நூற்றாண்டும் 17ஆம் நூற்றாண்டின் கலை, பண்பாட்டு வகைகளை ஏற்பதும் இயல்புதான். ஆகவே புதுமைக்கலையை ஓர் அழகுணர்வாகவும், உலகளாவிய இயல்பாகவும் கருதுவது நியாயமே.

'யுனெஸ்கோ கூரிய'ரின் இவ்விதழ் புதுமைக் கலையை முற்றிலும் விளக்க முயலவில்லை; அதன் மிகச் சிறப்பியல்புகளையும், சில அரும் சாதனைகளையுமே இங்கு விளக்க முயன்றிருக்கியோம்.

தலைமை இதழாசிரியர்: எதுவார்து கிளிசான்.

நவம்பர் 1987
NOVEMBER 1987

கலைவளமும், நாடகமும், உள்ளத் தெளிவும் செழித்த காலம் 4
-பீட்டர் ஸ்கிரீன்

முப்பெரும் குவிமாடங்கள் 10
-கியூலியோ கார்லோ ஆர்கன்

இசைப் படையல் 11
-ஆல்பெர்ட்டோ பாசோ

பொன்வண்ண, துன்பியல் கலை 14
-ஜூலியன் காலகோ

புதுமைக்கலை-ஓர் உலகத் தத்துவம் 18
-எதுவார்து கிளிசான்

சிற்பம், விழுமிய நாடகக் கலை 20
-ஃபிரான்சுவா சூஷால்

போர்ச்சுகீசிய புதுமைக்கலையின் மாண்புறு மரபுச் செல்வம் 27
-ஜோஸ்-அகஸ்டோ ஃபிரான்சுவா

இத்தாலி-பெரும் மாயத் தோற்ற ஓவியர்கள் 30
-ஆர்னால்டு பிரஷோன் தெ/லா வெர்க்னீ

லத்தீன் அமெரிக்கா: புதியதொரு தன்வெளிப்பாட்டு வடிவம் 34
-லியோப்போல்டோ ஜியா

துப்பாக்கி ஏந்திய வானதூதன் 36
-மிகேல் ரோஜாஸ் மிக்ஸ்

பிரேசில்: ஓ அலெயாதினோவின் வெற்றி 39
-அகஸ்டோ சி. டாசில்வா டெல்லஸ்

ஆர்வமூட்டும் கலை 42
-கிறிஸ்டியன் நார்பெர்க் ஷுல்ஸ்

மத்திய ஐரோப்பா: ஸ்லாவ் நாடுகளில் புதுமைக்கலை 46
-ஜார்ஜ் டி. காட்சேவ்

வாழவேண்டிய காலம்...
காந்தோம்பிளே வழிபாடு (பிரேசில்)

அட்டை: 8ஆம் அர்பன் போப்பாண்டவரின் மாட்சிமை' (1633-1639): ரோமில் பளாசோ பார்பரினியில் நடுமன்றக் கூரையில் பியத்ரோ தா கோர்தோரை இதைத் தீட்டினார் (30ஆம பக்க கட்டுரையையும், வண்ணப் பக்கங்களையும் பார்க்க)
ஒளிப்படம் © ஸ்காலா, மாசினோத் பதிப்பகம், பாரிஸ்

பின் அட்டை: மெக்ஸிக்கோவில் பியூப்ளா அருகிலுள்ள சாந்தா மரியா டோனான்ட்ஸின்ட்லா ஆலயக் கூரையின் ஓவியப் பகுதி (34 ஆம் பக்க கட்டுரை காண்க).
ஒளிப்படம்: கால் முல்லர் © செத்ரி, பாரிஸ்

ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ மாதந்தோறும் 33 மொழிகளில் வெளியிடும் இதழ்.

7. பிளேஸ் தெ பொந்தனே, 75700 பாரிஸ்

தமிழ்
ஆங்கிலம்
ஃபிரெஞ்சு
ஸ்பானிஷ்
ரஷ்யன்
ஜெர்மன்
அராபிக்
இத்தாலியன்
ஹிந்தி
ஹீப்ரு
பெர்சியன்
டச்சு
போர்ச்சுகீஸ்
துர்க்கீஸ்
உருது
கட்டலான்
மலேசியன்
கொரியன்
சுவாஹலி
கிரோடே-செர்ப்
ஸ்லாவேன்
ஜப்பானிஸ்
மாசிடோனியன்
செர்போ-கிராட்
சீனம்
பல்கேரியன்
கிரீக்
சிங்களம்
ஃபின்னிஷ்
ஸ்வீடிஷ்
பாஸ்க்
தாய்
வியத்நாமிஸ்

தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியர்
மணவை முஸ்தபா

ISSN 303 40
No.11

படிப்பகம்

www.padippakam.com

கலைவளமும், நாடகமும், உள்ளத் தெளிவும் செழித்த காலம்

பீட்டர் ஸ்கிரீன்

'பரோக்' எனப்படும் புதுமை பாணிக்கலை என்றால் என்ன? இதற்கு ஒன்றையொன்று ஒத்திருக்கும் பல பொருள் விளக்கங்கள் கூறப்படுகின்றன இது பற்றி நிறைய எழுதியுள்ள சில அறிஞர்களும், கலை வரலாற்றாசிரியர்களும், இந்தப் புதுமை பாணிக்கலை, ஐரோப்பிய ஓவியக்கலையின் ஒருவகைப்' பாணி என்றும், கட்டிடக் கலையின் ஒரு வகை உத்தி என்றும், ஒருவகைப் பண்பாட்டு நிகழ்வு என்றும், அது நுண்கலைகளிலும், பயன்முறைக் கலைகளிலும் மிக நேர்த்தியாக வெளிப்படுகிறது என்றும் கூறுகின்றனர். அது கட்புலன் காட்சிக்கு அப்பாற்பட்டது என்றும் அவர்கள் கருதுகின்றனர்.

ஆனால், புதுமை பாணிக்கலை என்பது, வாழ்க்கையின் ஒரு விதப் போக்கு என்றும், மறுமலர்ச்சி என்ற பெயரில் பண்பாட்டு ஆற்றலும். அழகியல் நெறிமுறைகளும் புத்துயிர் பெற்றதிலிருந்து அது தோன்றியது என்றும், புரோட்டஸ்டெண்டு சீர்திருத்த இயக்கத்துடன் தொடர்புடைய ஆழ்நத ஆன்மிக மற்றும் சமய நெருக்கடிகள் காரணமாக அது மறுமலர்ச்சியிலிருந்து தனித்து விலகி விட்டது என்றும் பெரும்பாலான அறிஞர்களும், இலக்கிய வரலாற்றாசிரியர்களும் கூறுகின்றனர்.

இதன் விளைவாக, 1620களிலும் *1630*களிலும் மலர்ச்சியுற்ற புதுமை பாணிக்கலை இலக்கியம், *1660* வாக்கில் உச்சநிலையை எட்டியது. இந்த வகை இலக்கியம் சில முரண்பட்ட அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. இந்தப் பாணி எழுத்தாளர்கள், பொருள்களின் புலனுணர்வு அழகினை வளமான சொற்களில் நேர்த்தியான நடையில் உற்சாகமூட்டும் முறையில் வருணிப்பதில் ஆர்வங்காட்டினர். அதே சமயம், இம்மை மறுமை வாழ்வின் மர்மங்கள் குறித்து அவலக்குரல் எழுப்பவும் தவறவில்லை. இந்தப் பாணி நாடகாசிரியர்கள் வீரத்தையும் நேர்மையினையும் போற்றினர்; வியந்தனர். அதே சமயம், நெறிமுறைகளுக்கும் உணர்ச்சிகளுக்குமிடையிலான மோதல்களையும், தீவிரமாகவும், சொல்வன்மையோடும், உயிர்த்துடிப்போடும் சித்திரித்துக்காட்டினர். ஜெர்மானியக் கவிஞர் காஸ்பர் வான் லோகன்ஸ்டீன் *(1635-1683)*, அவரது சம காலத்து ஃபிரெஞ்சுக் கவிஞர் ஜீன் ரேசின் *(1639-1699)* ஆகியோரின் படைப்புகளில் இந்த அம்சங்களைக் காணலாம்.

வாழ்க்கை பற்றிய புதுமை பாணிககலையின் அணுகுமுறையை இலக்கியத்திலும், இசையிலும், கட்டிடக்கலையிலும், ஓவியங்களிலும் தெளிவாகக் காணலாம் இந்தக் கலைகள் அனைத்திலும், வடிவக் கட்டுப்பாடு, இயக்கவுணர்வைப் படைக்கும் ஆர்வம், எழில்நுட்பங்களை எடுத்துரைக்கும் வேட்கை ஆகியவற்றுக்கிடையிலான இயக்காற்றல் வாய்ந்த உறவுநிலை வாயிலாக மனப்போக்கு வெளிப்படுகிறது இது தனது ஆழ்ந்த அழுத்தமான தெளிவான முத்திரைகளை விட்டுச்சென்றுள்ள நாடுகளில், இதனை மிக உயர்வாக மதித்துப்போற்றி, 17ஆம் நூற்றாண்டின் மிகச் சிறந்த கலை மற்றும் இலக்கியப் படைப்புகளை புதுமை பாணிக்கலைப்படைப்புகள் என வலியுறுத்திக் கூறும் மனப்போக்கு காணப்படுகிறது. இம் மனப்போக்கினைப் பெரும்பாலும் இத்தாலியிலும், ஸ்பெயினிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், ஆஸ்திரியாவிலும், கிழக்கு, மேற்கு ஜெர்மனிகளிலும், செக்கோஸ்வாக்கியாவிலும் மிகுதியாகக் காண்கிறோம்.

எனினும், இங்கிலாந்திலும், ஃபிரான்சிலும், இந்தக் கொள்கையை அப்படியே ஏற்றுக்கொள்வதில் மிகுந்த தயக்கம் காட்டப்படுகிறது. இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற புரோட்டஸ்டண்டுக் கிறித்தவ மரபுகள் செல்வாக்குப் பெற்றுள்ள நாடுகளில், புதுமைபாணிக்கலை என்பது, முற்றிலும் ரோமன் கததோலிக்க பாணி என்றும், அது தங்கள் பண்பாட்டுக்குப்புறம்பானது என்றும் கருதப்படுகிறது ஃபிரான்சைப் பொறுத்தவரையில் நிலைமை மேலும் சிக்கலடைந்துள்ளது. ஏனெனில், அங்கு, ஃபிரெஞ்சுக்காரர்கள பெருமிதங்கொள்ளும் ''தூய இன்னெளிமை மரபு யுகத்துடன்'' ஒருங்கியல்வதாக இந்தப் பாணி அமைந்தது. எனவே, அவர்கள் இந்தப்பாணியை, சரியாகவோ தவறாகவோ, தங்கள் தூயஇன்னெளிமை மரபுக்கு முரணானது எனக் கருதினர்.

புதுமைபாணிக்கலை, பல்வேறு இடங்களில், பல்வேறு வேகங்களில், பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்தது. கலை-இலக்கியத்தின் சிலதுறைகள் இந்தப் பாணியினால் மற்றத துறைகளை விட அதிக அளவில் பாதிக்கப்பட்டிருக்கலாம். சில சமயங்களில், அது உள்நாட்டு மரபுகளுடனும், வாழ்க்கை முறைகளுடன் மிக எளிதாகவும், இயல்பாகவும், ஒருங்கிணைந்து இயங்கக்கூடும். மறுமலர்ச்சி இயக்கத்தின் தாயகமாகிய இத்தாலி, இந்தப் பாணியின் வளர்ச்சியிலும், அதனை ஐரோப்பாவின் மற்றப்பகுதிகளுக்குப் பரப்புவதிலும் பெரும் பங்கு கொண்டது. ஆனால், அதன் பிறப்பிடமாக இத்தாலியை மட்டுமே கூறலாமா? உலகெங்கிலும், ஐரோப்பாவின் பல பகுதிகளிலும், ஈரான், சீனா, ஜப்பான் போன்ற தொலைதூர நாடுகளிலும் ஒரே சமயத்தில் தோன்றிய ஒரு மனநிலையின். ஒரு மனப்போக்கின் - வெளிப்பாடுதான் புதுமை பாணிக்கலை என்ற வாதத்தினையும் புறக்கணிப்ப

ஒளிப்படம் © சிக்காந்ரு ப்ளிக்; தேசிய நூலகம், பாரிஸ்

புதுமைக்கலையின் காலத்தைக் ''கடிகாரக் கலையின் பொற்காலம்'' என்பர். காலம்கடப்பதைஅறியும் உணர்வு அக்கால இலக்கியங்களான ஷேக்ஸ்பியரின் நாடகங்களிலும், ஸ்பானியக் கவிஞர் ஃபிரான்சிஸ்கோ குவேவதோவின் செய்யுள்களிலும் திரும்பத்திரும்ப வெளிப்படுகின்றது. மேலே: 'கடிகாரம் செய்வோரின் உடை' எனும் இந்த 18ஆம் நூற்றாண்டுச் சித்திரம் புதுமைக்கலைக் காலக் கண்டுபிடிப்பான ஊசலிக் கடிகாரத்தைக் காட்டுகிறது.

புதுமைக்காலக் கலையில்கிளர்ச்சியும் இயக்கமும் இருந்தன. ஆனால் பண்டைக்காலக் கலையில் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருந்தன. பண்டைக் கால கிரேக்க, ரோமானியக் கலையின் விறைப்பான நீள்சதுர வடிவத்தை மறுமலர்ச்சிக் காலம் பெற்றிருந்தது அதனின்று விடுபடுவதற்காகப் புதுமைக்கலைக் காலக் கட்டடக் கலைஞர் திருகிய தூண்களைப் பயன்படுத்தினர். இத்தாலியக் கட்டடக் கலைஞரும், சிற்பியும், ஓவியருமான கியான் லொரன்சோ பெர்னீனி (1598—1680) ரோமிலுள்ள புனித பீட்டர் பேராலய நடுப் பீடத்தின் மேலுள்ள வெண்கல விமானத்திற்காக அமைத்த தூண்கள் இவற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். 34 மீட்டர் உயரமுள்ள இவ்வியத்தகு விமானத்தை அமைக்குமாறு உர்பன் போப்பாண்டவர்பணித்தார். மைக்கிள் ஆஞ்செலோ வகுத்த குவிமாடத்தின் கீழ் இது 1624—1633இல் கட்டப்பெற்றது.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

உலகம் ஒரு நாடகமேடை

ஒளிப்படம் ஹோரேஸ் © எதிமேதியா, பாரிஸ்

ஷேக்ஸ்பியரின் 'ஆஸ் யூ லைக் இட்' எனும் இன்பியல் நாடகத்தில் ஒருவர் 'உலகமே ஒரு நாடகமேடை'' என்கிறார். ஸ்பானிய நாடகாசிரியர் கால்தரோன் தெ லா பார்க்கா தம் முதல் நாடகங்களுள் ஒன்றுக்கு 'உலகமெனும் பெரியஅரங்கு' எனப்பெயரிட்டார். புதுமைக்கலை மனித வாழ்வை அவ்வாறு நாடக உருவில் காட்டியது. அக்காலத்தில் நாடகக்கலை மலர்ந்தது; கத்தோலிக்க சமயச் சடங்குகள் மாண்புற்றன; வரம்பற்ற முடியரசுகள் சிறப்புற்றன. ஷேக்ஸ்பியரையும் கால்தரோனையும் தவிர ஃபிரான்ஸில் கோர்னீலும், ரசீனும், மோலியரும் ஸ்பெயினில் லோப் தெ வேகாவும் போன்ற நாடகாசிரியர் மேற்கு ஐரோப்பாவில் 17ஆம் நூற்றாண்டில் தோன்றினர். இவ்வரிய நாடகங்களை அரங்கேற்ற புதுமைக்கலை நாடகமேடைகளும் புதிய வகை அரங்குகளும் அமைக்கப் பெற்றன. மேலே: கோர்னீயின் 'ஆந்திரோமேத்' எனும் துன்பியல் இசை நாடகத்தை அரங்கேற்ற இத்தாலிய மேடையமைப்பாளர் கியாக்கோமோ தோரலி வகுத்த அரங்கமைப்பு. இடப்புறம்: ஃபிரெஞ்சு நாடக விழாவில் இடம்பெற்ற கால்தரோனின் லா விதா எ சுவனோ' (வாழ்க்கை ஒரு கனவு) எனும்நாடகத்தில் ஒரு காட்சி:

படிப்பகம்

www.padippakam.com

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்கில்லை.

எனினும், கிறித்தவ மேற்கு ஐரோப்பாவை மட்டும் கவனத்தில் எடுத்துக்கொள்வோம். அங்கு இரு முக்கிய அம்சங்கள், புதுமை பாணிக் கலையின் எழுச்சிக்குக் காரணமாக இருந்தன. ஒன்று, வரம்பற்ற முடியாட்சி, மற்றொன்று, நாடக நடிப்பு, நாடக அரங்கு ஆகியவற்றுக்கு ஏற்பட்ட செல்வாக்கு. இந்த இரண்டு அம்சங்களையும் பண்டைய ரோமானியப் பேரரசுக் காலத்திற்குப் பின்பு 1000ஆண்டுகளாக ஐரோப்பா காணவில்லை. வரம்பற்ற முடியாட்சியும், நாடகக் கலையும் ஒருங்கே செல்வாக்குப் பெற்று, 17ஆம் நூற்றாண்டில் வல்லமை வாய்ந்த அரசர்கள் தங்களின் மாபெரும் புதிய அரண்மனைகளில் நாடகக்கலைஞர்களை அழைத்து நாடகங்களை நடத்திக் காட்டும்படி செய்து மகிழ்வதில் ஆர்வம் காட்டியபோது, புதுமை பாணிக்கலைக்குத் தனிப் பெருமையும் சிறப்பும் கிடைத்தது. ரோமன் கததோலிக்கத் திருச்சபையினரின் கட்டிடங்களில் புதுமை பாணிக் கலை ஆதிக்கம் பெற்றதும், அதற்குச் சமய ஆதரவு கிடைதத்து. புதுமை பாணி ஓவியர்களுக்கும், இசைக்கலைஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் மன்னர்களின் அவைக் களங்களில் பேராதரவு அளிக்கப்பட்டது. இவ்வாறு சமயத்தின் ஆதரவும், அரசர்களின் போற்றுதலும்பெற்று ஐரோப்பாவில் புதுமைபாணிக்கலைஎழுச்சிபெற்றது

புதுமை பாணிக்கலையின் மானுடக் கொள்கைகளும், நாடக ஆர்வமும், உலகமென்னும் நாடக மேடையில் உற்சாகத்துடன் அரங்கேறின் இதன் அம்சங்களை சேக்ஸ்பியர் நாடகங்களில் ஆங்கிலேயர் கண்டனர். ''நீ விரும்பியபடி'' என்ற அவரது இன்பியல் நாடகத்தில் இந்த அம்சங்களை மிகுதியாகக் காணலாம். ஐரோப்பிய இலக்கியங்கள் அனைத்திலுமே இந்தக் கொள்கைகளைக்காண முடிகிறது. துறைமுக நகரமாகிய ஆம்ஸ்டர்டாமில் 1638இல் நகராட்சி நாடக அரங்கு திறக்கப்பட்டது. இதன் முகப்பில், ''உலகமே ஒரு நாடக மேடை; அதில் ஒவ்வொருவரும் தங்கள் பாத்திரங்களை நடித்துக் காட்டுகிறார்கள்; அதற்குரிய நியாயமான சன்மானத்தையும் பெறுகிறார்கள்'' என்று பொருள்படும் வான்டல் என்ற டச்சுக்கவிஞரின் கவிதைவரிகள் பொறிக்கப்பட்டிருந்தன

இதற்கிடையில், ஹாலந்தின் அரசியல் மற்றும் வாணிகப்போட்டி நாடாகிய ஸ்பெயினில், வாண்டலின் சமகாலத்தவராகிய கால்டரான் டி லா பார்கா தமது தலைசிறந்த படைப்பாகிய ''எல் கிரான் டியாட்-ரோ டெல் மண்டோ'' என்ற நாடகத்தை எழுதினார். இதில் இறைவனையே நாடகாசிரியராகவும், இந்த உலகத்தை நாடகமேடையாகவும், அன்றாட மனிதர்களையே நாடக மாந்தர்களாகவும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையே நாடகக் காட்சிகளாகவும் சித்திரித்திருக்கிறார். இந் நாடகத்தை நாடகக் கலைஞர்கள் எழுத்துவடிவமின்றியே நடிக்கிறார்கள். பேராசை கொண்ட மன்னன், அழகியபெண், கடுமையாக உழைக்கும் தொழிலாளி, துன்புறுத்தப்படும் பிச்சைக்காரன், அறிவாற்றல் வாய்ந்த சமயவாதி, மெத்தனம் வாய்ந்த பணக்காரன் போன்ற கதை மாந்தர்கள் அன்றாட வாழ்வில் காணும் இயல்பான மனிதர்களாகக் காணப்படுகிறார்கள்.

இறைவனின் கண்களும், உலகின் கண்களும் தங்களையே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருப்பதை புதுமை பாணிக் கலையின் ஆடவரும் பெண்டிரும் நன்கு உணர்ந்திருந்தார்கள். ஆனால், இது, நவீன வீரகாவிய உணர்வினை தாங்களே பெறுவதற்கு வழிவகுக்கவில்லை. மாறாக, ஒரு வகை தற்பெருமையை வளர்த்துக் கொள்வதற்கு ஓவியங்களிலும், சிற்பங்களிலும், நாடகங்களிலும் சித்திரிக்கப்படும் மாந்தர்களைப் போன்ற ஓர் உருக்காட்சியை உருவாக்கிக் கொள்வதற்கு இது வழி வகுத்தது. இதனால் புதுமை பாணிக் கலைக்கால அளவின்போது கலைப் படைப்புகளில் காணப்பட்ட இயல்பு நவிற்சி நாளடைவில் மறைந்து விட்டது

ஓவிய உருவங்களைப் போலவே, புதுமை பாணிக்கலை அரண்மனைகளும், அவற்றை எழுப்பியவர்களின் கண்ணோட்டத்தையே பிரதிபலித்தன. இவை கல்லில் அமைந்த புகழ் மொழிகள். வாழ்ந்தவர்களின் பெருமைகளையும் வெற்றிகளையும் போற்றிப்புகழ்வதே இவற்றின் நோக்கம். தங்களையும், தங்கள் செயல்களையும் போற்றிப் புகழ்வதற்காக அரசர்களுக்கு எழுத்தாளர்கள் தேவைப்பட்டார்கள், எழுத்தாளர்கள் அரசர்களின் சேவைக்குத் தங்கள் திறமைகளைப் பயன்படுத்த ஆர்வத்துடன் முன்வந்தார்கள் அவர்கள் அரசர்களைப் பாராட்டி. ஆடல் சார்ந்த பாடல்களையும், மன மகிழவைக்கும் திருமணப் பாடல்களையும், வானளாவப் பாராட்டும் புகழ்மாலைகளையும் அரசர்களின் ஆணைப்படி இயற்றினார்கள். இதனால் அவர்களுக்கு நிறையப் பொருள் கிடைத்தது. எனினும் அந்தப் படைப்பாளர்கள், தங்களை அச்சுறுத்தி வந்த பாதுகாப்பின்மை உணர்வினைப் புறங்காண்பதற்காகவே இத்தகைய தனிநபர் புகழ்ச்சியில் ஈடுபட்டார்கள் என்பது ஓர் அடிப்படை உண்மை.

புதுமை பாணிக்கலையில் தொடக்கத்திலிருந்த ஒருவகை மருள் நீக்கம் இழையோடுகிறது. நாடக நடிப்பிலும், மேடை உருவகத்திலும் இக கலை காட்டும் ஆர்வம், தோற்றங்கள் யாவும் ஒருவகைத் திரிபுக்காட்சி தான் என ஆழவேரூன்றிய கொள்கையை வலியுறுத்துகிறது. சான்றோர்களையும், மாவீரர்களையும் இக்கலை வானளாவப் புகழ்வது, உலகிலுள்ள அனைத்தையும் - புகழ் வாய்ந்த பொருள்களைக் கூட - இறுதியில் சூனியம் சூழ்ந்து கொள்வதை இயன்றவரைத் தள்ளிப் போடும் ஒரு முயற்சியேயாகும். ஃபிரெஞ்சு நாடகாசிரியர் கார்னைல், ஆங்கிலேய நாடகாசிரியர் டிரைடன், ஜெர்மன் நாடகாசிரியர் கிரைஃபியஸ் ஆகியோரின் நாடகங்களில் இந்தப் போக்கினைக் காணலாம். புதுமை பாணிக் காலத்தியச் சிறப்பியல்பாக விளங்கும் வண்ணம், வனப்பு, வாழ்வில் மகிழ்ச்சி ஆகிய வற்றுக்குமத்தியில், இலக்கியத்தின் இருண்ட, சோதனையான அம்சங்களும் உண்டு. இதனைக் கார்னைல் தமது கடைசி நாடகத்தின் (1670) இறுதி அங்கத்தில் பேரரசர் டைட்ஸ் வாயிலாக உணர்த்துகிறார்.

ஆனால், நாடகம் முடிந்த பின்னர் நடப்பதென்ன? புதுமை பாணிக் கலையுலகைச் சார்ந்த மக்கள், மனித வாழ்வில் மரணம் இறுதியானது உறுதியானது என்பதால், மனித வாழ்வு குறுகியது நிலையற்றது என்பதை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ''மரணங்கூட ஒரு வெறுமைதான். அது எங்கு, எப்படி வருகிறது என்பதை அறியாததால்தான், நாம் மரணத்திற்கு அஞ்சுகிறோம்'' என்று ஜான்டிரைடன் ''ஔரங்கசீப்'' நாடகத்தின் 1675 இந்தியக் கதாநாயகன் வாயிலாகக் கூறுகிறார்.

அந்தநாளில் போர், பஞ்சம், கொள்ளைநோய் மக்களை அன்றாடம் அச்சுறுத்தி வந்தன. உதாரணமாக, முப்பதாண்டுப்போர் (1618—1648) ஐரோப்பாவில் ஜெர்மன் மொழிபேசிய மக்களை பெரிதும் பலிகொண்டது. லண்டனிலும் வேறு பல நகரங்களிலும் 1665இல் கொள்ளை நோய்க்கு ஏராளமான மக்கள் பலியாயினர் சில ஆண்டுகளுக்குப் பிறகு, முப்பதாண்டுப் போரில் ஒரு போர்வீரராகப் பணியாற்றிய ஹான்ஸ் ஜேக்கப் கிறிஸ்டோபர் வான் கிரிம்மல்ஷாசன் என்ற ஜெர்மானியர் ''சிம்பிளிசிஸ்மஸ்'' என்ற தலைசிறந்த விசித்திர பாணி உரைநடைப்புதினத்தை எழுதினார். இது பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் செல்வச் செழிப்பின் கோலாகலத்தை

புதுமைக்கலைக் கால சமய நாடகங்களிலும், ஓவியத்திலும், குறிப்பாக சிற்பத்திலும் துன்பமும் துயரமும் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஸ்பானிய புதுமைக்கலைச் சமய சிற்பங்கள் கிறிஸ்து பெருமானையும் அவரது சிலுவைத் துன்பங்களில் பங்குபெற்ற கன்னிமரியையும் பிறரையும் கடுந்துன்பக் காட்சிகளாகக் காட்டுகின்றன. கீழே: கார்டோபச் சிற்பி ஜுவான் தெ மெசா செதுக்கிய புனித திருநீராட்டு அருளப்பரின் வெட்டப்பட்ட தலை (செவில் பேராலயம்).



ஒளிப்படம் © மாஸ், பார்ஸிலோனா

படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படம் © புலோஸ், தேசிய நூலகம், பாரிஸ்

ஒளிப்படம் © ரோஜர் வியோல், தேசிய நூலகம், பாரிஸ்

ஒளிப்படம் © எதிமேதியா, தேசிய நூலகம், பாரிஸ்

ஷேக்ஸ்பியரின் (இடப்புறம்) படைப்புகள் புதுமைக் கலையைச் சாராதிருப்பினும், அக்கால வன்மையையும், தோற்றம், உண்மை நிலை ஆகியவற்றையும், நாடக மருட்சியையும் பிரதிபலிக்கின்றன. ஸ்பானியக் கவிஞர் லூயி தெ கோங்கரா இ ஆர்கோத் (நடுப்படம்) எழிலார்ந்த நெளிந்த நடையில் எழுதினார். அந்நடையை ''கோங்கர் நடை'' என்பர் (இத்தாலியரான கியாம்பத்திஸ்தா மாரினோவின் பெயர் கொண்ட) மாரினிஸ்மோ' எனும் நடைபோன்று, இந்நடையும் அக்காலக் குழைமக் கலையை எதிரொலித்தது. இடப்புறம் அடியில்: ஜெர்மன் எழுத்தாளர் கிரிமல் ஷாசனின் புதுமைக்கால உரைநடைப் படைப்பான 'சிம்ப்ளிசிசிமஸ்' எனும் நூலின் 17ஆம் நூற்றாண்டுப் பதிப்பின் முகப்புப்படம்.

யும் வறுமையின் அவலத்தையும் தமது சொந்த அனுபவத்திலிருந்து ஒருங்கே சித்திரித்திருக்கிறார்.

ஐரோப்பாவில் அப்போதுதான் தொலைநோக்காடி கண்டுபிடிக்கப் பட்டிருந்தது. ஐரோப்பாவின் பல பகுதிகளிலும், மக்கள் நாளுக்குநாள் பெருமளவில் அண்டவெளி இரகசியங்களை அறிந்துகொள்வதற்காக வானத்தை நோக்கியவாறு இருந்தனர். கோளங்களின் சுற்றுப்பாதைகள் நீள்வட்ட வடிவில் இருக்கின்றன. என்பதையும், கோளங்கள் ஒரு போதும் நிலையாக் இருப்பதில்லையென்றாலும், அவை நிலையான தோரணிக்கோலங்களை உருவாக்கக் கூடியவை என்பதையும் கெப்ளர் கண்டுபிடித்தார். இந்தக் கண்டுபிடிப்புகள், புதுமைபாணிக் கட்டிடக்கலை, இலக்கியம், கலை ஆகியவற்றின் அடிப்படையாக இருக்கும் இடையறா இயக்கத்தையும், நீள்வட்ட வடிவங்களையும், வடிவமைப்புகளையும் ஒத்திருக்கின்றன. அடிப்படை விதிகளையும், அண்டத்தின் நியதிகளையும் அவர்கள் உணர்ந்துகொண்டதன் காரணமாக, இந்தக் குறுகிய நிலவுலக வாழ்வும், அதன் அவலங்களும் வெறும் மாயம் தான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். புதுமைபாணி எழுத்தாளர்கள், மரணத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கினை மக்களுக்கு உண்டாக்கினார்கள்.

ஆனால் புதுமைபாணி எழுத்தாளர்கள் அச்சங்கொண்டது மரணத்திடம் அன்று; காலத்திடம்தான் அவர்கள் அஞ்சினார்கள். காலத்தின் நிழலில்தான் அனைத்தும் அழிகின்றன. அந்த நூற்றாண்டில் ஊசல்கடிகாரங்களும், சுருளமைப்புடைய கைக்கடிகாரங்களும் கண்டுபிடிக்கப் பட்டன. இவை, காலத்தைப் பருவம், மாதங்கள், நாட்கள் என்ற அளவில்

(தொடர்ச்சி III பக்கம் பார்க்க)

பீட்டர் ஸ்கிரீன் ஆங்கிலேயர்; மான்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் ஜெர்மன் மொழியும் இலக்கியமும் கற்பிக்கிறார். 17ஆம் நூற்றாண்டுக் கவிதையிலும் நாடகத்திலும் வல்லுநர்; இவையும் பிறவும்பற்றிப் பல கட்டுரைகளும், 'தி பரோக்' (பெத்துவான், லண்டன், நியூயார்க், 1978) எனும் 17ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய இலக்கியம், பண்பாடுபற்றிய நூலும் எழுதியுள்ளார்.

மாண்புறு ரூபன்

புதுமைக்கலை வட நெதர்லாந்தில் வேரூன்றவில்லை யெனினும், (இப்போது பெல்ஜியம் எனப்படும்) தென் பகுதியில் அது சிறப்பாக 17ஆம் நூற்றாண்டு ஓவியத்தில் மலர்ந்தது. பீட்டர் பால் ரூபனின் படைப்புகளில் புதுமைக் கலை ஒளியும் உணர்வும் உமிழ்ந்தது. அவை வாழ்க்கையின் எல்லாச் சிறப்புகளையும் எதிரொலித்தன. ரூபன் இத்தாலியை நன்கறிந்தவர்: ஸ்பெயினில் நீண்டகாலம் தங்கியவர். அவரது வாயிலாக ஆண்ட்வெர்ப் கலைகளின் மையமானது அங்கிருந்து புதுமைக்கலையின் ஓவிய மணம் ஐரோப்பா முழுவதும் பரவியது வலப்புறம்: 'இறுதித் தீர்ப்பு' (1616): ரூபன் தீட்டிய ஓவியம் இன்று மியூனிக்கிலுள்ளது. சிஸ்டைன் ஆலயத்திலுள்ள மைக்கில் ஆஞ்செலோவின் 'இறுதித் தீர்ப்பு'டன் இதை ஒப்பிடும் போது, இதிலுள்ள உருவங்களின் மிகைபட்ட இயக்கமும் முரண்பாடுகளின் வன்மையும் புதுமைக் கலை இயல்புகளைக் காட்டுகின்றன.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

முப்பெரும் குவிமாடங்கள்

கியூலியோ கார்லோ ஆர்கன்



ஒளிப்படம் © அல்மாகி, பாரிஸ்

புனித பீட்டர் பேராலயம்: சதுக்கத்தின் இருபுறமும் பெர்னினின் தூண் வரிசை.

புனித பால் பேராலயம், லண்டன்.

பாரிஸிலுள்ள புனித லூயி தெசின் வாலித் ஆலயம்.

ரோமானியப் புதுமைக்கலை சமய, அரசியல் இலக்கைக் குறிக்குமெனில், ஃபிரெஞ்சும் புதுமைக்கலை அரசியல் இலக்கை மட்டும் குறிக்கும் எனவும், ஆங்கிலேயப் புதுமைக்கலை பொதுவாழ்வு, சமூக இலக்குகளைக் குறிக்கும் எனவும் கூறலாம் ரோமிலுள்ள புனித பீட்டர் பேராலயம், பாரிஸிலுள்ள புனித லூயி தெசின் வாலித் ஆலயம், லண்டனிலுள்ள புனித பால் பேராலயம் ஆகியவற்றின் புகழ்மிகு குவிமாடங்களை ஒப்பு நோக்குவோமெனில், ஃபிரெஞ்சு, ஆங்கிலேய, இத்தாலியப் புதுமைக் கலைகளின் கருத்தியல் வேறுபாடுகளைக் காணலாம். முதலாவது பேராலயம் ஒரு மூலவடிவம் என்பது தெளிவாகின்றது. அதைக் கட்டிய கலைஞரான மைக்கிள் ஆஞ்செலோவின் சிந்தனையில் அஃது அவ்வாலய உடலின் ஒரு பகுதியாகவும், கிறிஸ்துவ உலகின் தலைமையின் உருவாகவும, உலகின்மேல் கவிந்துள்ள வான முகட்டின் உருவமாகவும் தோன்றியது. புனித பீட்டர் சதுக்கத்தின இருபுறமுள்ள தூண் வரிசைகள் பெர்னினியால் கட்டப்பெற்றவை. அவை ஆலயத்திற்கு ஓர் உருவக அகல் வடிவம் தருகின்றன. பெர்னினியின் திட்டத்தில் தூண்வரிசைச் சிறகுகள் குவிமாடத்தைத் தலையாகக் கொண்ட உருவத்தின் கரங்கள்போல் அமைந்துள்ளன.

பாரிஸிலுள்ள ஆலயக் குவிமாடம் ஜுல் ஹார்துய்ன் மான்சாரால் கட்டப்பெற்றது. இரு முரசு வடிவ அமைப்புகளின் மேலமைந்த இம்மாடம் தட்டையான முகப்பின்மேல் தனித்து மாண்புடன் நிற்கின்றது. இம்முகப்பைத் தூண்கள் வரிவடிப் பகுதிகளாகப் பிரிக்கின்றன. திண்ணிய, எழில் அலங்காரமுடைய இம்மாடம் ஆலயக் கட்டிடத்திற்கே சிகரமாக விளங்குகிறது. அரசரின் அதிகாரத்தை அரசின் படிநிலை அமைப்பு தாங்கிவந்ததுபோல், அரசின் முத்தாய்ப்பான அவ்வாலயத் முழுமையான கட்டடக்கலை அமைப்பு அம்மாடத்தைத் தாங்கி நின்றது.

லண்டனில் கிறிஸ்டஃபர் ரென் கட்டிய குவிமாடம், புனித பீட்டர் பேராலயத்திற்கு முதலில் திட்டம் வகுத்த டொனாட்டோ பிரமாண்டின் திட்டத்துடன் தொடர்புடையது. இதற்கு உதவியவர் இத்தாலியக் கட்டடக்கலைஞரான செபாஸ்டியானோ செர்லியோ அது பரந்த கட்டிட அமைப்பின்மேல் அமைந்துள்ளது.

கியூலியோ கார்லோ ஆர்கன்: *இத்தாலியக் கலை வரலாற்றறிஞர்; ரோம் பல்கலைக்கழகப் பேராசிரியர்; 1976 முதல் 1979வரை அந்நகராட்சிமன்றத் தலைவர். கலை வரலாறு, நகர அமைப்பு, திறனாய்வு முறைகள் பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார். 'இமாஜின் எ பெர்சுவாசியோன், சாகி சுல் பரோக்கோ' (1987) எனும் இவரது நூலிலிருந்து இக்கட்டுரை எடுக்கப்பட்டுள்ளது.*

www.padippakam.com

ஒளிப்படம் © தேசிய நூலகம், பாரீஸ்

இசைப் படையல்

ஆல்பெர்ட்டோ பாசோ

புதுமைக்கலையின் இசை வெளிப்பாடான இசை நாடகம் இத்தாலியில் பிறந்தது. கிளாதியோ மோங்த்வெர்தியின் ''ஓர்∴பியோ, லின்கொரனாசியோன் தி போப்பியா''வும் பிற படைப்புகளும் அதன் தோற்றமாகும். இத்தாலியில் பிறந்த இசைவாணரானஷான்-பாப்திஸ்த் லூலி முதன் முதலில் சிறந்த ∴பிரெஞ்சு இசை நாடகங்களை எழுதினார். அவரது செல்வாக்கு ஐரோப்பா முழுவதும் பரவியது. மேலே: லூலியின் ''∴பேத்தன்'' எனும் இசை நாடகத்திற்காக மூத்த ஷான் பேரேன் அமைத்த ''∴பேத்தனின் வீழ்ச்சி'' எனும் காட்சி.

இசையில், பரோக் என்ற சொல், கலையின் குறிப்பிட்ட ஒரு பாணியை மட்டுமின்றி, ஒரு குறிப்பிட்ட சில பகுதிகளைக் கொண்டு அமைக்கப்படும் பாஸ்ஸோ கன்டினியுவோ - என்ற கீழ் சுருதி இசையையும் குறிக்கிறது. இவ்வகை இசையமைப்பில் இன்னிசையும் தொடர்ந்து வரும், அடிப்படை சுருதியும் குறிப்பிட்ட வடிவத்தில் இருக்கும். இவ்வகை இசை அதற்கு முன்பிருந்த இசையினின்றும் மாறுபட்டது. அதற்குமுன் பலவகை இசை மெட்டுகள் சமமான முக்கியத்துவம் பெற்று இணைக்கப்பட்டிருந்தன.

1600 ஆண்டு இந்தப் புதிய கால கட்டத்தில் ஆரம்பம் என்று கூறலாம். அப்பொழுதுதான் இத்தாலிய ''மெலோடிராமா'' (இசை நாடகம்) நிலவத் தொடங்கியது 1750ல் ஜோஹான் செபஸ்டியன்பாக் இறந்த பின்னர், இது முடிந்தது இசையின் வரலாற்றில் அரிய பல புதிய மாற்றங்கள் தோன்றின. இந்த ஒன்றரை நூற்றாண்டு காலத்தில் எத்தனையோ புதிய இசை முறைகள் உருவாயின. பல்லிய இசையமைப்பின் அடிப்படை வடிவம் தோன்றி பல்லாண்டுகள் நீடித்தது.

மறுமலர்ச்சிக் காலம் முடியும் தருவாயில் இசையுலகில் மாபெரும் நிகழ்ச்சி நிலவியது. இலக்கியம், கட்டிடக் கலை, ஓவியம் மற்றும் சமுதாய வாழ்வில் கூட இதன் பாதிப்பு பெரிதும் ஏற்பட்டது. அது இசை நாடக வடிவின் தோற்றமாகும்.

படிப்பகம்

www.padippakam.com

இதாலிய அரசவைகளால் புகுத்தப்பட்ட, நாடகக் கலையினின்று எழுந்ததே இப்புதிய கலைமுறை. மறுமலர்ச்சிக் காலத்தில் தொன்மைமிக்க கிரேக்க நாகரிகத்தை மீண்டும் கொண்டுவரும் எண்ணத்தின் விளைவாக எழுந்தது இது. இசை நாடக வடிவம் ஃபிளாரன்சில் தோன்றியது. வெனிஸ், ரோம், நேப்பிள்ஸ் நகரங்களில் வெவ்வேறு வடிவங்களைப் பெற்றது. இத்தாலியின் புதிய இசைக்கலைப் பண்பாட்டைப் பரப்பும் சிறந்த கருவியாக விளங்கியது பல நாடுகள் இக்கலை வடிவத்தை ஏற்றுகொண்டு அதன் வடிவத்தை மாற்றமின்றி ஏற்றுக்கொண்டன. ஃபிரான்ஸ் தனியாக தனக்கென டிராஜிடி லிரிக்' என்ற வடிவத்தை உருவாக்கிக் கொண்டது.

17ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், கிளாடியோ மான்டி வெர்டி, லீகி ரோசி, ஃபிரான்சிஸ்கோ காவலி ஆகியோர் இப்புதிய கலையின் வல்லுநர்களாக இருந்தனர். பின்னர் ஜான் பாப்டிஸ்ட் லல்லி, (ஃபிரெஞ்சு இசை நாடகத்தின் தந்தையான பிளாரன்டின்) அலெஸான்டிரோ ஸ்கார்லெட்டி, ஆகியோர் உருவாக்கிய இரு புதிய இசை நாடக வடிவங்கள் 18-ஆம் நூற்றாண்டு முழுவதும் நின்று நிலவின

ஸ்கார்லெட்டியின் இசை நாடக வடிவம் ஜெர்மானியக் கலைஞர்களான, ஹெண்டல், ஹாஸ் ஆகியோரால் கூட முன்னோடியாகக் கருதப்பட்டது. இசை நாடகம் துவக்கத்தின்—ஆழமுடையதாகக் கருதப்பட்டாலும், பின்னர், நகைச்சுவை வடிவமும் பெற்று சில சமயம் முழுமையான படைப்பாகவோ, அல்லது, பெரிய நாடகங்களின் சாட்சிகளுக்கிடையே - இடைச் செருகலாகவோ இடம் பெற்றன. (தலைசிறந்த கலைஞரான இதாலிய இசை அமைப்பாளர்-கிவானி பட்டிஸ்டா பெர்கோலேசியின் இன்டர் மெஸ்ஸோ — இதற்கு உதாரணமாகும்). மற்ற நாடுகளில் உரையிடையிட்ட இசை நாடகங்கள் மக்களின் பொழுது போக்குக்காக உருவாயின. இங்கிலாந்தின் கவிதைநாமம், ஸ்பெயினின் ஜர்சுவெல்லா, ஃபிரான்சின் ஆபரா-காமிக், ஜெர்மனியின் சிங்ப்பீலி — இவை வழிவந்த இத்தாலிய இசையையும், இசை இடையிட்ட பேச்சுகளையும் மாற்றிவிட்டன.

விவிலிய இசைப் பாடலான ஆரடாரியோ போன்ற வாய்ப்பாட்டிசை முறைகளிலும் இம்முறை நிலவியது. சீர்திருத்த மறுப்பு இயக்கத்தின் வழி வந்த இப்பாடல்களில், ஆன்மீகம் நிறைந்த இசை நாடக வடிவங்கள் இடம்பெற்றன. குறிப்பாக, ஸ்டிரா டெல்லா அலெஸான்டிரோ ஸ்கார்லெட்டி போன்றோரின் தாய்மொழி படைப்புகளைச் சொல்லலாம். (காரிஸ்மியின் லத்தீன் படைப்புக்கள் பெரிதும் மதச் சார்புடையவையாக இருந்தன.

இசைக் கதைகளை பெரும்பாலும் பைபில் சம்பவங்களையும், புனிதர்களின் வாழ்வையும் விளக்கின. உணர்ச்சி இசை இயேசுவின் மரணத்தைப் பற்றியதாக புனித நூலின் சொற்களைப் பயன்படுத்துவதாக இருந்தன. பாக்சின் உணர்ச்சி இசை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இவ்வகைப் பாட்டிசையின் மற்ற படைப்பாளிகளில் சிறந்தோராக, ஹென்றித் ஹூல்ட்ஸ் ஹேண்டல், ஜியார்ஜ் பிலிப் டெலெமான் ஆகியோரைக் கூறலாம்.

இசை நாடகத்தின் சிறிய வடிவமாக, இத்தாலிய குரலிசையில் அமைந்த "இசைக் கதையைக் கூறலாம். இது போன்று ஆயிரக்கணக்கில் காணப்படுவது. இதன் புகழைக் காட்டுகின்றன. இதற்கு ஒரே இசைக் கருவி—தம்புரா போன்ற ஒன்று இருந்தால் போதும். பரோக் காலம் முழுவதும்—கரிஸ்மி, ரோஸி, செஸ்டி ஸ்ட்ரெடல்லா, பாஸ்பினி, ஸ்கார்லெட்டி, ஹேண்டல் ஆகியோரின் காலங்களில் இவ்வகை சிறிய இசைக் கதைப்பாட்டு நிலவியது. இத்தாலிய பாதிப்பை ஏற்கமறுத்த ஃபிரெஞ்சுப் பாணியிலும் இவ்வகை இசை நிலவியது.

தேவாலயங்களில் கூட, தோத்



ஒளிப்படம் © ஜைரார்க்/எடிமேதியா, பாரிஸ்

நுட்ப நிறைவு பெற்ற நரம்பிசைக் கருவிகளும், இசைப் பெட்டியும் புதுமைக்கலை இசைவாணர் விரும்பிய இசைக் கருவிகள். இத்தாலியரான கிரோலாமோ ஃபிரஸ்கோபால்டி, ஜெர்மானியரான ஜோஹான் செபாஸ்டியன் பாக் ஆகியோரின் படைப்புகள் இசைப்பெட்டியின் இசைச் சிறப்பை உச்சநிலைக்கு உயர்த்தின. இடப்புறம்: ஸ்வாபியாவில் (ஜெர்மானிய கூட்டாட்சி குடியரசு) வெய்ன் கார்த்தன் மடாலயத்திலுள்ள இசைப் பெட்டியின் அலங்காரத்தை இந்த 18ஆம் நூற்றாண்டுச் சித்திரம் காட்டுகிறது. கீழே: போனார்ட் தீட்டிய "இசைகரும் நங்கை" (1685). இசைப் பட்டைகளுள்ள இந்நரம்பிசைக் கருவி 16, 17-ஆம் நூற்றாண்டுகளில், சிறப்பாக இங்கிலாந்தில் பரவலாகப் பயன்படுத்தப் பெற்றது.

படிப்பகம்

www.padippakam.com

மோந்த்வெர்தி முதல் பாக் வரை

1

2

3

4

5

6

புதுமைக்கலை இசை மலர்ச்சிக்கு உதவிய பெரும் இசையமைப்பாளர் சிலரின் உருவப்படங்களை மேலே காணலாம். 1. கிளாதியோ மோந்த்வெர்தி (1567-1643) இசைநாடகம், உணர்ச்சிப் பாடல்கள், சமயப் பாடல்கள் அமைத்தார். அவை தற்கால இசையை வளப்படுத்தின. 2. ∴பிரான்சுவா கூப்பரன் (1668 - 1733): ∴பிரெஞ்சு நரம்பிசைக் கருவி வல்லுநர். இது வெர்சேல் அரண்மனையிலுள்ள பெயர் தெரியாத ஓவியர் தீட்டிய ஓவியம். 3. ஜோஹான் செபாஸ்டியன் பாக் (1685-1750): பெரும் இசைமேதைகளுள் ஒருவர். 4. ஜார்ஜ் ∴பிரடரிக் ஹாண்டல் (1685-1759) மற்றொரு பெரும் ஜெர்மானிய இசையமைப்பாளர்; இவர் பெரும்பாலும் இங்கிலாந்தில் வாழ்ந்தார். 5. அலசாந்திரோ ஸ்கார்லாத்தி எனும் இத்தாலிய இசையமைப்பாளர் (1660 1725) இவருடைய மகன் தொமனிக்கோ நரம்பிசை வல்லுநர்; 6. ஹென்றி பர்செல் (1659-1695): ஆங்கிலேய இசையமைப்பாளர்; தமது குறுகிய வாழ்க்கையில் அக்காலத்தின் அரிய உணர்ச்சிப் பாடல் இசையை அமைத்தார்.

1. ஒளிப்படம் © கூமா ராஃபோ, பாரிஸ்
2. ஒளிப்படம் © சிக்கியோன்-புலோஸ் பாரிஸ்
3 ஒளிப்படம் © புலோஸ், பாரிஸ், தேசிய நூலகம், பாரிஸ்
4 ஒளிப்படம் © புலோஸ், பாரிஸ் தேசிய நூலகம், பாரிஸ்
5 ஒளிப்படம் © ரோஷர் வியோல், பாரிஸ் மியூசியோ சிவிக்கோ, பொலோஞா
6 ஒளிப்படம் © எதிமேதியா, பாரிஸ், பிரிட்டிஷ் அருங்காட்சியகம், லண்டன்

திரங்களும் இசையமைக்கப்பட்டன. சமயத் தொடர்பான இசையமைப்பாளர்களில், ரோமானிய மற்றும் வெனிஸ் நகர்ப் பள்ளிகளைச் சார்ந்த பெனவோலி, பெர்னபி, கல்பிரா, காஸ்பிரனி. லெக்ரன்னி — ஆகியோரைக் குறிப்பிடலாம். நீயோ பொலிடன் பள்ளியைச் சார்ந்த ஸ்கார்லட்டி, துரான்ட், லியோ, ஜெர்மனியைச் சார்ந்த பைபர், கெர்ல், பக்ஸ், ஃபிரான்ஸைச் சார்ந்த சார்பன்டியே லலாந்த். கூபெரின், ஆகியோரும் புகழ் பெற்றவர்கள். இங்கிலாந்தில் உயர்ந்த வழிபாட்டு இசையை - இங்கிலாந்து கிறிஸ்துவர்களுக்காக கிப்பன்ஸ், டாம்கின்ஸ், லாவ்ஸ் ப்ளோ, பர்சல் போன்றோர் படைத்தனர். இவர்கள் சமயச் சார்பற்ற இசையையும் உருவாக்கினர்.

லீதரின் சீர்திருத்தத்திற்குப் பிறகு தோன்றிய சமய சார்பற்ற இசையால், பரோக் காலம் புதிய உணர்வைப் பெற்றது. புனித இசைக் கதைப் பாட்டு—வழிபாடுகளில் முக்கியப் பங்கேற்றது. எனவே புதிய கற்பனைகளைத் தொடர்ந்து தூண்டியது. புனித சமய நூல்களிலிருந்து சொற்கள் எடுத்தாளப்பட்டன. சமய விழாவுக்கு ஏற்ற படைப்புகள் உருவாயின. கலையும், சமயமும் இணைந்த சாதனம் உருவாயிற்று.

ஸ்கெயின், ஸ்கெயிட், ஸ்கூட்ஸ் ஆகிய ஜெர்மானியக் கலைஞர்கள் அமைத்த அடிப்படையில் பக்ஸூட், பாசெல்பெல், டண்டர், வெக்மன், போம், தீல், பாக், டெலெமன் போன்றோர் பல இசைப்படைப்புக்களை உருவாக்கினர், டெலெமன் 1,600 இசைப் பாட்டுக்களை உருவாக்கினார். சமயப் பாட்டுக்களை உருவாக்கிய பாக், 300 பாடல்களை அமைத்தார். அவற்றில் மூன்றில் ஒரு பங்கு தொலைந்து போய்விட்டன) பரோக் காலம் முழுவதும் விரவிய, அவரது படைப்புக்களில் ஒப்பற்ற குரலிசை—கருவி இசை ஆகியவற்றின், சமய உணர்வைத் தூண்டும் நுட்பங்களைக் காணலாம்.

ஒப்பற்ற பல இசை அமைப்புகள் பரோக் காலத்தைச் சார்ந்தவை. இதாலிய மரபுக் கலையின் உச்சகட்டம் என ஜிரால்மோ, பிரஸ் கோபால்டியின் காலத்தைச் சொல்லலாம் அவரது ஆர்மோனிய இசைப்பாணி ஐரோப்பா முழுவதும் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தியது. அவரது மாணவரில் சிறந்தவரான ஜோஹான் ஜேகப் பிரோ பெர்ஜர் ஜெர்மானிய நாடுகளில், பரப்பிய இசைப்பாணியை தெற்கத்திய பள்ளிகள் கேட்டன. வடக்குப்பகுதிப் பள்ளிகள் பக்ஸ்டெகூட், மற்றும், டச்சுக் கலைஞர் ஸ்வீன்லிங்க் போன்ற தலைசிறந்த மேதைகளை உருவாக்கின. லீதர் காலத்திய வழிபாட்டு இசையில் புதுமையாக, சேர்ந்திசை—பாடலின் முற்பகுதியாகத் தொடங்கியது. இது ஆர்மோனிய இசையோடு இணைந்து ஒப்பற்ற இசையழகை—பாக்கின் பெயரோடு அழியாது இடம்பெற்ற அழகைத் தந்தது. ஹார்பிசாட் என்ற இசைக் கருவியோடு. பிரெஸ்கோபால்டி. மைகிலேஞ்செலோ ரோசி, பின்னர் வந்த பாஸ்கினி, அலெஸான்டிரியோ ஸ்கார்லெட்டி, அவரது மகன் டெமெனிகோ, கூபெரின், ரமூ, பாக், ஹேன்டல் ஆகியோரின் பெயர்கள் இணைந்துள்ளன. இன்னிசை தரும் மற்ற இசைக்கருவிகளோடு, ஆர்பிகார்டும் இணைந்து இசைக்கப்பட்டது. சொனாடா, கான்செர்டோ ஆகியவை பரோக் காலத்தின் உகந்த இசை வடிவங்களாகத் திகழ்ந்தன. பிற்காலத்தில், கான்செர்டோவின் வளர்ச்சியில் இருபகுதிகள் தோன்றின, அவை கான்செர்டோ கிராஸோ (முழு இசைக்குழுவின் இசையிடையே தனித்து சில இசைக் கருவிகள் கேட்பது), கான்செர்டோ சோலோ (தனி இசைக்கருவி மட்டும் பல சாதனைகளைக் காட்டுவது) என்பவை அவை.

ஆர்கஞ்செலோ கொரெல்லி, பின்னர் வந்த பல வயலின் விற்பன்னர்களுக்கு முன்னோடியாவார். 18ஆம் நூற்றாண்டின் இத்தாலியைச்சார்ந்த தலைசிறந்த — விவால்டி, அல்பினோனி, ஜெமினியானி, லொகாடெல்லி, தட்டினி, டொரெல்லி, மார்செல்லோ ஆகியோரையும் இவருடன் ஒப்பிடலாம். நூற்றுக்கணக்கான படைப்புகள் இத்தாலிய பாதிப்பை உலகமெங்கும் ஏற்படுத்தின.

புதிய இசைவடிவங்கள் உருவாயின. அவை, அதிக இசைக்கருவிகளுடன், சிக்கல் மிக்கதாகத் தொடங்கின. அடிப்படை சுருதி தனியிடம் பெற்றது. புதிய வழிகள் புகுத்தப்பட்டன. பரோக் கால இசை மெல்ல மறைந்து புதிய எழிலார்ந்த இசை வடிவம் தோன்றியது.

தமிழில்: எஸ். சம்பத்குமார்

ஆல்பெர்ட்டோ பாசோ *இத்தாலிய இசையியலார்; 1973 முதல் 1979 வரை இத்தாலிய இசையியல் சங்கத் தலைவர், இசை வரலாறு பற்றி 6 தொகுதிகளும், ஜோஹான் செபாஸ்டியன் பாக் வாழ்க்கை வரலாறும் உட்பட பல நூல்கள் எழுதியுள்ளார் இசை, இசைவாணர் பற்றிய 8 தொகுதிகளுள்ள கலைக் களஞ்சியம் தயாரித்து வருகிறார்.*

படிப்பகம்

www.padippakam.com

ஒளிப்படம்: கிறிஸ்டியன் சாப்பா /செத்தி, பாரிஸ்

பொன்வண்ண, துன்பியல் கலை

ஜூலியன் காலகோ

மேலே: 'ஒப்ரதாய்ரோ' எனப்படும் மாபெரும் புதுமைக்கலை முகப்பு. 18-ஆம் நூற்றாண்டில் இது ரோமானிய இயல்புள்ள சாந்தியாகோ தெ கொம் போஸ்தலா பேராலயத்தில் இணைக் கப்பெற்றது. இப்பேராலயத்தில் காத்திக், ஸ்பானிய மறு மலர்ச்சிக் கால இயல்புகளைக் காணலாம்.

ஸ்பானிஷ் பரோக் புதுமைக்கலை வளர்ச்ழசிகுப் மதம் அடிப்படையாக அமைந்திருக்கிறது என்பதை முதலிலேயே கூறியாக வேண்டும். பரோக் என்ற சொல்லின் பொருளை விளக்க, இக்போது நாம்முற்படவில்லை. ஸ்பானிஷ் விமர்சகர் யூஜினோ டோர்ஸ் சொன்னதுபோல, கலை வரலாற்றின் பல்வேறு கால கட்டங்களில், வெவ்வேறு வடிவங்களில் மரபுக் கலைக்கு மாற்றாக வருகின்ற ஒன்று என்பதையும் ஆராயமுற்படவில்லை. மரபுக் கலை என்பது மாற்ற மற்றது பரோக் என்பது அவ்வப்போது மாறிவரும் கலை என்று ஹென்றிக் ஒல்ஃபின் என்ற ஸ்விஸ் நாட்டு கலை வரலாற்றாளர் தமது கலை வரலாற்றின் கோட்பாடுகள் என்ற நூலில் குறிப்பிடுகிறார். வெர்னர் வெஸ்பாக் எழுதியுள்ள 'பரோக்-சீர்திருத்தமறுப்பின் கலை வடிவம்' என்னும் நூலில்-பருக்-கலை மறுமலர்ச்சிக்கு எதிரான உணர்ச்சியின் வெளிப்பாடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுக்கு இடைப்பட்ட பாணியாக ''மானரிசம்'' என்ற புதிய வடிவம் இருப்பதாக சில வல்லுநர்கள் கூறுகிறார்கள். இம்முறையில் பரோக் பாணியில் உள்ள அளவுக்கதிகமான அலங்காரமும் திட்டமிட்ட பாணியும் இல்லை. உணர்ச்சி வெளிப்பாடுகளை அதிகமாகக் காட்டுவதற்காக மறுமலர்ச்சி பாணியின் சில முறைகளையும் ஒதுக்கிவிடும் இக்கலை வடிவத்திற்கு எடுத்துக்காட்டாக. ரோம் சிஸ்டின் தேவாலயத்தில் உள்ள மைகில் ஏஞ்சலோவின் ''கடைசித்தீர்ப்பு' என்னும் படைப்பைக் கூறலாம். மானரிசம்தான், சீர்திருத்த மறுப்பு இயக்கத்தின் உண்மையான கலை வடிவம் என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர் 'மானரிசம்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'டிரன்டின்' என்று இம்முறைக்குப் பெயரிட வேண்டும் என்று ஸ்பானிஷ் கலை விமரிசகர் ஜோஸ் கமோன் அஸ்னர் கூறுகிறார். இச்சொல் சீர்திருத்த மறுப்பு இயக்கத்தின் கோட்பாடுகளை வரையறுத்த டிரன்ட் குழுவினரின் பெயரிலிருந்து வந்தது.

இப்பாணிக்கு உன்னத எடுத்துக்காட்டாக, ஸ்பானிஷ் கட்டிடக்கலையின் சிறந்த சான் லொரென்ஸோ டெல் எஸ்கோரியல் என்ற துறவிகளின் உறைவிடத்தைக் குறிப்பிடலாம். இரண்டாவது பிலிப்பினால் இது மாட்ரிட் நகரில் 1563-க்கும் 1584-க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. இதைக் கட்டிய கட்டிடக் கலைஞர்கள் யுவான் பாவ்டிஸ்டா, டி டொலெடோ, ஜுவான் டி ஹெர்ரெர்ரா என்ற இருவரில் பின்னவரின் பெயரால் ''ஹெர்ரெரான்'' பாணி எனப்பெயர் பெற்றது. 17ஆம் நூற்றாண்டு முழுவதிலும், எஸ்கோரியல் பாணிக்கலை ஸ்பானிஷ் கட்டிடக்கலை வளர்ச்சியில் பெரிதும் பாதிப்பு ஏற்படுத்தியது.

படிப்பகம்

எளிமை, தெளிவான கோட்டமைப்பு பரிமாணம், திட்டமான ஜியோமிதி வடிவங்களைக் கொண்ட எங்கோரியல் பாணி ஒரு முன்மாதிரியாக அமைந்திருந்தது. அதன்பின்னர், சர்ரிகுவெரா குடும்பத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்ட சர்குரெஸ்க் அலங்காரப் பாணி. பிரபலமடையத் தொடங்கியது.

ஸ்பானிஷ் பரோக் புதுமைப் பாணியில் கட்டப்பட்ட பெரும்பாலான மத சார்புடைய கட்டிடங்கள் 18ஆம் நூற்றாண்டு வரை நீண்ட செவ்வக வடிவமைப்பில் அமைந்தன. அலங்காரத்திற்கு மட்டுமே புதுமை புகுத்தப்பட்டது. ரோம் நகரில் இக்னேஷியஸ் லயோலோ என்ற ஸ்பெயின் நாட்டவரால் நிறுவப்பட்ட, இயேசுவின் கழகத்தைச் சார்ந்த இல் கெசு என்ற தேவாலயத்தைப் பின்பற்றியே மற்ற தேவாலயங்களும் அமைக்கப்பட்டன. இல் கெசு தேவாலயம் சிலுவையின் அமைப்பில் உள்ளது. சிலுவையின் குறுக்குக்கு மேலாக ஓர் குடைபோன்ற அமைப்பு உள்ளது. அடிப்பகுதியின் இரு புறங்களிலும் வழிபாட்டுப் பீடங்கள் உள்ளன. இவை தவிர நீண்ட, பெரிய தேவாலயங்களும் உள்ளன. இவற்றின் எளிய கட்டிடக்கலை வடிவம், வெளிப்படையான அலங்காரக் கவர்ச்சிமிக்க மரம், காரை, கல் உலோகம் இவற்றால் ஆன மற்ற வடிவமைப்புகளுக்கு மாற்றாக அமைந்துளளது இரும்பு வேலைப்பாடுகள் சிறந்துள்ளன. இரும்புக் கிராதிக் கதவுகள் ஒவ்வொரு வழிபாட்டு பீடத்திலும் உள்ளன. சில இடங்களில், ஸ்பானிஷ் முஸ்லிம் பாணியான (அல்-அண்டுலஸ்) முதேஜார் பாணியிலும் இவை, அமைந்துள்ளன. இப்பாணி எட்டாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதிவரை நிலவியது.

சுவர்களின் கீழ்ப்பகுதிகளில் அலங்கார வளைவுகளும் வேலைப்பாடு மிக்க தூண்களும் கொண்ட பீடங்கள் நிறைந்துள்ளன. அவற்றில் மிகப் பெரிய பலிபீடம் மிகப்பெரிய வடிவமைப்புடையது. கருவரை வரை செல்கிறது. பொன்னிறம் மற்றும் பல்வேறு வண்ண ஓவியங்களால் நிறைந்துள்ளது. சாலமாங்காவில் உள்ள சான் எஸ்டபான் தேவாலயத்தில் ஜோஸ் டி செரிகுவரா (1668-1725) என்பவரால் அமைக்கப்பட்ட மாபெரும் பலிபீடம் உள்ளது. சாலமன் கோயிலில் ஒரு பகுதியாகக கருதப்படும். ரோமில் உள்ள ஒரு பெரும் தூண் முன். மாதிரியாகக் கொண்டு அமைக்கப்பட்ட முறுக்கிய ஆறு பெரும் தூண்கள் உள்ளன. செயின்ட் பீட்டரின் கல்லறையின் மேல் உள்ள அலங்காரக் கவிகையில் பெர்னினி இதைப் பயன்படுத்தியதால் இவ்வடிவமைப்புப் புகழ் பெற்றது. இவை, தேவாலயங்களுக்கும்,

வலப்புறம்: டோலடோவில் குடியேறிய புகழ்மிகு கிரீட் ஓவியர் எல் கிரேக்கோ (1541-1614) தீட்டிய கிறிஸ்துவின் திருநீராட்டு' இதில் உயர்ந்து செல்லும் புதுமைக்கலை இயல்பையும், எல் கிரேக்கோவின் பிற்காலப் படைப்புகளின் இயல்புகடந்த உயரமான உருவங்களையும் காணலாம்.

ஒளிப்படம் C புலோஸ், பாரிஸ், மிராதோ அருங்காட்சியம், மாட்ரிட்

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

வழிபாட்டு அறைகளுக்கும் புதிய பரிமாணத்தைத் தருகின்றன. அண்டலூஸியாவில் இவைபோலப் பல உள்ளன. லத்தீன் அமெரிக்காவிலிருந்து வந்த புதிய கட்டிடக்கலைப் பாணியின் பாதிப்பை இவை காட்டுகின்றன. ஸ்பெயினின் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் ஸ்பெயினின் கலை அமைப்புப் பெரிதும் தென்படுகின்ற போதிலும், இவற்றை, உள்நாட்டு மக்களின் கைத்திறனும், கலையுணர்வும் பாதித்திருப்பதையும்காணலாம். மெக்ஸிக்கோ, பெரு இந்நாடுகளில் இப்பாதிப்பைக் காணலாம். இதனால் இந்நாடுகளில் உருவான பரோக் முறையின் அலங்காரமும் வேலைப்பாடும் ஸபெயினின் நகர்ப்புற பரோக் புதுமைப் பாணியைப் பாதித்துள்ளன.

அரசவைக் கலைஞரான பெட்ரோ டி ரிபெர்ரா (1683-1742) என்ற தலைசிறந்த ஸ்பானியக் கட்டிடக் கலைஞரின் படைப்புகளில் நாடக மேடையின் பாதிப்பை அதிகம் காணலாம். ஜோஸ் சிமென்ஸ் டொனோஸோ (1628-1690) என்பவரால் மாட்ரிட் கட்டிடக்கலையில் அறிமுகப் படுத்தப்பட்ட ஒழுங்கற்ற வடிவமைப்புடைய அலங்கார மிக்க நீண்ட செவ்வகத் துணைத் தூண்களைப் பயன் படுத்தினார் ஆஸ்ட்ரியா மன்றத்தில் ஸ்பெயினின் ஆட்சியாளராக போர்போனஸ் பதவியேற்றபிறகு ஸ்பெயின் அரசவையில் வெர்செயிலஸின் பரோக் பாணி இடம்பெறவில்லை. அல்காஸர் அரண்மனை 1734இல் தீயில் எரிந்து போனபின் பேலசியோ டி ஓரியன்ட் கட்டப்பட்டது. இதாலியக் கட்டிடக் கலைஞர்களான பிலிப்போ ஜுவாரோ, ஜியோவான் சாசெட்டு ஆகியோரின் கைவண்ணமாகும். அதில் பொரோக் அலங்காரம் அவ்வளவாக இடம்பெறவில்லை. வென்ரொ ரோட்ரிகஸ் (1717-1785) பாசியோ டெல் பெரோடாவை திருத்தி வடிவமைத்தார். இதனால், மாட்ரிட் ஐரோப்பியத் தலைநகரங்களில் தலைசிறந்ததாக விளங்குகிறது.

ஒளிப்படம்: ஆர்.எம்.என்., பாரிஸ்

ஜுவான் தெ வால்தே லீல் (1622-1690) காலத்துடன் ஸ்பானிய ஓவியத்தில் புதுமைக் கலைக் காலம் முடிவடைந்தது. மேலே: வால்தே லீலின் ''கானான் ஊர் திருமணம்'' இன்று இது பாரிஸில் லூவர் அருங்காட்சியகத்திலுள்ளது.

அண்டலூஸியாவில் பரோக் கலையின் பாதிப்பை தேவாலயங்களிலும், துறவிகள் மடங்களிலும், கன்னியர் மடங்களிலும், அரண்மனைகளிலும் காணலாம். கற்பனையும், எழிலும் கூடிய பல வண்ணங்களில், செங்கல், பல்வகைக் கற்கள், மரவேலைப்பாடு, பளபளப்பு ஒடுகள், இரும்பு வேலை இவற்றைக் காணலாம். உயரமான, வேலைப்பாடுகள் மிக்க எய்ஜா போன்று மணிக்கூண்டுகளை செவில், காடிஸ் ஆகிய இடங்களில்காணலாம். வேலைப்பாடுமிக்க தேவாலயங்களில் பலிபீடத்தில் உள்ள ஓர் துவாரத்தில் வழிபாட்டுக்காக புனித வடிவம் இருப்பதைக் காணலாம்.

ஸ்பானிஷ் நகரங்களில் சிறந்த தேவாலய நுழைவாயில்களைக் காணலாம். பிளாசா மேயர் என்பது அத்தீபகற்பத்திலேயே சிறந்த சதுக்கம்—இதுதான் மக்களின் சமூக வாழ்வின் விழாக்களுக்குகந்த இடமாக விளங்குகிறது சாலமாங்காவில் உள்ள சதுக்கம இதற்கு ஒரு எடுத்துக் காட்டு. பல்வேறு கால கட்டங்களில் நிலவிய கட்டிடக் கலைப்பணிகளைக் காணமுடிகிற, காட்சி சாலையாக இச்சதுக்கங்கள் விளங்குகின்றன. சான்டியாகோ டி கம்போஸ்டலா என்ற இடத்தில் உள்ள தேவாலயத்தில், உயர்ந்த பரோக் பாணியில் அமைந்தது எல் அப்ரடாயிரோ என்று அழைக்கப்படுகிறது. 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது—கோதிக் பாணி, மரபுப்பாணி, உணர்வுசார் பாணி இவை இணைந்திருப்பதைக் காணலாம்.

சிற்பக்கலையும், கட்டிடக்கலையும் இணைந்து நின்றதால், தேவாலயங்கள் புனித நாடகக் களனாக மாறின. மரச்சிற்பங்களும், ஆடை அணிந்த பலவண்ணச் சிற்பங்களும்—உண்மை வாழ்க்கை போன்ற எண்ணத்தை ஏற்படுத்தின. 17ஆம் நூற்றாண்டின் வல்லடாலிட் பள்ளியின் ஆசிரியர்களில் ஒருவரான சிரிகாரியோ பெர்னான்டஸ் இயல்பான படைப்புக்களை—உணர்ச்சி ததும்ப படைத்தார். புனித வாரத்தின் ஊர்வலங்களில் இவற்றின் மூலம் மக்கள் ஏசுவின் உணர்ச்சிகளையும் சாவையும் மீண்டும் கொணர முடிந்தது. ஆண்டலூசியப் பள்ளி இன்னும் பெரிது. அதன் வண்ணச் சிலைகள் பிரகாசமானவை—உயர்ந்த பொருள்களுடன் இணைந்தவை, செவில்வியில், யுவான் மார்டினஸ் மனகானிஸ் (1568-1649) யுவான் டிமேசா (1583-1627) ஆகியோர் சிறந்த வண்ணங்களைப் பயன்படுந்தினர் அவர்களது படைப்புகளின் உணர்ச்சி வெளிப்பாடுகள் புகழ்பெற்றவை. கிரெனாடாவில் அலன்ஸோ கேனோ (1601-1667) பெட்ரோ டி மேனா (1628-1688). ஜோஸ்டிமோரா (1642-1724) அவர்கள் சிறந்த படைப்புக்களை உருவாக்கினர். இயேசுவின் இளமைப் பருவம்—உணர்வு — கன்னிமேரியின் துயரம் இவற்றை இப்படைப்புக்கள் விளக்கின

பதினெட்டாம் நூற்றாண்டில், அதிக எழிலும், அசைவும், பளபளப்பான வண்ணங்களும், மரவேலைப்பாடுகளும்—தங்க வண்ணத்தாலும். எண்ணெய் வண்ண வேலைப்பாடுகளாலும், அழகுபடுத்தப்பட்ட மர வேலைப்பாடுகளும் அதிகமாக இடம் பெற்றன. சிலைகளுக்கு வண்ண நூல் வேலைப்பாடு செய்யப்பட்ட ஆடைகள் அணிவிக்கப்பட்டன. சிலைகள் உயிருள்ளவையாகக் கருதப்

2ஆம் பிலிப்பின் ஆணைப்படி 1563–1584இல் மாட்ரிட் அருகில் கட்டப்பெற்ற புனித லாரன்சோ தெல் எஸ்கோரியால் மடாலயம். இது 17ஆம் நூற்றாண்டு ஸ்பானியக் கட்டடக் கலைக்கு ஒரு மாதிரியாக விளங்கியது. அடுத்த நூற்றாண்டில் இதன் பண்டைய எளிமை மாறி, புதுமைக் கலையின் அலங்கார அணிகளைப் பெற்றது. கீழே: மடாலய முகப்பும், கோபுரமும், குவிமாடமுமுள்ள அரண்மனை.

ஒளிப்படம் © மாஸ், பார்சிலோனா.

படிப்பகம்

www.padippakam.com

பட, வண்ணப் படிகங்களால கண்களும், செயற்கை இமைகளும், தலைமுடியும் பொருத்தப்பட்டன. பெட்ரோ ரோல்டான் (1624-1700) அவரது மகள் லீயிசா லா ரொல்டானா (1656-1704) ஆகியோர், செல்வில்லியில், மகரீனா அன்னையின் சிலை போலப் புதிய பாணியை அறிமுகப்படுத்தினர். சிறிய சிலைகள் மண்ணினால், அழகிய முறையில் ஜோஸ் க்சுவேனோ (கிரெனாடா—1665-1757) என்பவரால் உருவாக்கப்பட்டன. ஈஸ்டர் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லக்கூடிய அழகிய, இயல்பாக அமைந்த சிலைகளை, நியோபாலிடன் வழிவந்த ஃபிரான்சிஸ்கோ சல்சில்லோ (1707-1781) என்பவர் முர்சியாவில் உருவாக்கினார்.

பரோக் காலத்தை ஸ்பானிஷ் ஓவியக்கலையின் பொற்காலம் எனலாம். இத்தாலிய பாணியின், இயற்கையாய் அமைந்த அண்டலூஸியன் பள்ளியிலிருந்து பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பசேகோ, ஹெர்ரேரா என்ற கலைஞர்கள் தேவாலயங்களில் பெரும் ஓவியங்களைத் தீட்டினர். எல் சிரீகோவின் (1541-1614) வழிவந்தோர் டொலேடோவில் பணிபுரிந்தனர். அவர்களது ஆசிரியர் சிரீடோவின் கடைசி படைப்புகள் பரோக்கைப் போல் இருந்தன எனலாம். எக்ட்ரிமதுராவின் பிரான்சிஸ்கோ டி ஜுர்பரான் (1598 - 1664) — பலிபீடங்களுக்காகவும், தேவாலய உட்பகுதிகளுக்காகவும் ஓவியங்களைப் படைத்தார். அவை, பழைமையின் பெருமையும்,

(தொடர்ச்சி III பக்கம் பார்க்க)

ஜூலியன் காலகோ: ஸ்பானிய வரலாற்றறிஞர்; கலைத் திறனாய்வாளர்; மாட்ரிட் கோம்பளுத்தென்ஸ் பல்கலைக்கழகப் பேராசிரியர்; மாட்ரிடிலுள்ள சான் ஃபெர்னாண்டோ நுண்கலைக் கழக உறுப்பினர்; நியூயார்க்கிலுள்ள அமெரிக்க ஸ்பானிய சங்க கடிதத்தொடர்பு உறுப்பினர்; பன்னாட்டு கலைத் திறனாய்வாளர் சங்க உறுப்பினர்: ''விஷன் இ சிம்போலஸ் என லா பிந்துரா எஸ்பனோலா தெல் சிகளோ தெ ஒரோ'' ('விஷன் அண்டு சிம்பல்ஸ் இன் ஸ்பானிஷ் பெயிண்டிங் ஆஃப் தி கோல்டன் ஏஜ்''). 'டீகோ வெலாஸ்குவெஸ்'', போன்ற நூல்களும், ஃபிரான்சிஸ்கோ தெ கோயா, கலை வரலாறு பற்றிய பல நூல்களும் எழுதியுள்ளார்.



ஒளிப்படம் மோஸ், பார்சிலோனா

ஸ்பானிய புதுமைக்காலக் கட்டடக் கலையின் இறுதிப் பருவத்தில் சுருள் வடிவங்களும் அலங்கார அணிகளும் மலிந்திருந்தன. லத்தீன் அமெரிக்க கலைதான் இதை விஞ்சியது. சால காங்காவில் சான் எஸ்தேபானிலுள்ள டொமினிக்கன் ஆலயத்தின் மாபெரும் பலிபீடப் பின்னணி. இதை அமைத்தவர் ஜோசே தெ சுரி கெரா. இஃது இந்த அலங்காரக் கலைக்கோர் எடுத்துக்காட்டு.

கிறிஸ்து பெருமானின் சிலுவைத் துன்பங்களைக் காட்டும் புதுமைக் கலைப் பல வண்ணச் சிற்பங்கள் ஸ்பெயினில் பல ஆலயங்களில் காணப்படுகின்றன. தூய வாரச் சமய ஊர்வலங்களில் அவை தெருக்களில் தூக்கிச் செல்லப்படுகின்றன. இடப்புறம்: மாட்ரிட் நகருக்கு வட மேற்கிலுள்ள சமோரா நகரின் திருப்பாடுகளின் சிலைகள்.

படிப்பகம்

www.padippakam.com

புதுமைக்கலை—ஓர் உலகத் தத்துவம்

எதுவார்து கிளிசான்

வரைபடம் டேவிட் ஹவானா 1967

இயற்கை ஒரேதன்மையது, ஒருங்கியைந்தது, அறிந்துணரக்கூடியது எனும் கருத்து ஐரோப்பாவில் பரவிய போது, அங்கு புதுமைக்கலை இயல்பும் தோன்றியது. இயற்கையை அடக்கியாளும் ஆவலுடன் ஒருங்கிணைந்த இக் கருத்தைப் பகுத்தறிவு வாதம் செப்பனிட்டது. இயற்கையைச் செயற்கையாக உருவாக்கலாம் என்றும், இயற்கையை அறிவதால் அதைப் போலியாக உருவாக்கலாம் என்றும் அப்போது எண்ணம் எழுந்தது.

இயற்கையைப் போலியாக உருவாக்கும் நோக்கமானது, புறத்தோற்றத்தின் உள்ளார்ந்த இயல்பாகவுள்ள ஓர் 'ஆழமுடைமை'', ஒரு மறுக்க முடியாத உண்மை, இயற்கையை ஒத்த கலைப்படைப்பு என்பதன் அடிப்படையில் அமைந்துள்ளது. அஃது இயற்கையைப் போலியாக்குவதை முறைப்படுத்தி, அதன் விதிகளைக் கண்டுபிடிக்க விழைகின்றது. 15ஆம் நூற்றாண்டில் இயல்பரப்புக் காட்சியைப் புகுததிய புரட்சி இந்த ஆழமுடைமையை அறிய முனைந்த விழைவின் ஒரு பகுதியாகும்.

இப்போக்கிற்கு எதிராகவே புதுமைக்கலையின் ''திருப்பம்'' எழுந்தது. ஒரே, ஆழமான, சீரான போக்கினால் இயற்கையின் இரகசியங்களைக் கண்டறியலாமெனும் பகுத்தறிவுவாதக் கருத்திற்கு எதிராகப் புதுமைக்கலை தோன்றியது. அறிவை முழுவதும் பெற இயலாது, இதுதான் அதற்கு முழுச் சிறப்பளிக்கின்றது எனும் கருத்து பகுத்தறிவு வாதக் குட்டையைக் கலக்கிய புதுமைக்கலையின் கல்லாக இருந்தது. இவ்வாறாக புதுமைக்கலையின் நுட்பங்கள் ''ஆழத்தைப்'' புறக்கணித்து ''அகலத்தைப்'' போற்றின.

புதுமைக்கலை தனது வரலாற்றுச் சூழலில் அறிவுக்கு ஒரு புதிய புரட்சித் தன்மையை வழங்கியது. அஃது உலகைச் சித்திர (போலி) ஒழுங்கிையவுகளாகச் சுருக்கும் இலக்கை எதிர்த்தது. அதற்கு மாறாக புதுமைக்கலை அல்லது இயல்பானது முரண்பாடு, பிறழ்வு, புத்தமைப்பு ஆகியவற்றை ஆதரித்தது; அறிவுப் பொருளையும் அதை அறிவோரையும் ஒன்றுபடுத்துவதை எதிர்த்தது;

புதுமைக்கலை தனது வரலாற்றுச் சூழலில். இயல்பான சான்றாகக் காட்டப்பெறும் இயற்கையின் ஒழுங்கமைவுக்கு எதிராக எழுந்தது. அப்போது இயற்கைபற்றிய கருத்து மாறி மலர்ந்துவந்தது. மேல் நாட்டவர் உலகின் பல பகுதிகளுக்கும் செல்லத் தொடங்கினர். இயற்கையின் எழிலான ஒழுங்கமைவுபற்றி அறிவியல் ஐயங்களை எழுப்பியது. புதுமைக்கலையே பொதுமை பெறத் தொடங்கியது.

இவ்விரிவு முதன்முதலாக லத்தீன் அமெரிக்க கலையில் தோன்றியது என்பதில் ஐயமில்லை. இக்கலை ஐபீரிய, ஃபிளாண்டர்ஸ் கலைகளுடன் நெருங்கி இருப்பினும், உள்நாட்டு இயல்புகளும் அதனுடன் பின்னிப் பிணைந்திருந்தன. இவ்வியல்புகள் இயல்பான உருவத்தைக் குலைக்கும் புரட்சிகரமான இயல்புகளாக இராமல், புதுமை இயல்புகளாக இருந்தன. புதுமைக்கலை ஒரு கருத்தை மறுப்பதாக இராமல், (புதிய கருத்தாக விரைவில் மாறவிருந்த) புதியதொரு படிவத்தை ஏற்பதாக இருந்தது.

இனக் கலப்பு இம்மாற்றத்தின் இயல்பாக இருக்கின்றது. பல்வேறு பண்பாடுகள், கலையியல்புகள், மொழிகள் ஆகியவற்றின் கலப்பே புதுமைக்கலையின் வியப்புறு வீரப் போக்காக விளங்குகிறது.

இயற்கை பற்றிய இன்றைய அறிவியல் கருத்து புதுமைக் கலையின் இவ்விரிவை ஏற்று உறுதிப்படுத்துகின்றது, இயற்கையை புறத்தோற்றத்தினால் வரையறுக்க இயலாதெனவும், ''ஆழமாக' அதை ஆராய வேண்டுமெனவும், அறிவியல் வலியுறுத்துகின்றது; இயற்கை பற்றிய அறிவை முழுவதும் அறிய முடியாதெனவும், அதன் முக்கிய இயல்புகளை ஒரே வீச்சில் புரிந்துகொள்ள முடியாதெனவும் அஃது ஏற்றுக்கொளகின்றது. அறிவியல் இன்று ஐயப்பாட்டுக் கொள்கையின் ஊழியில் நுழைந்துள்ளது. ஆயினும் அது செயலறச் செய்யும், இயந்திரப் போக்குள்ள, திட்டவட்டமான கோட்பாட்டை ஏற்க மறுக்கும் பகுத்தறிவு வாதத்தை ஏற்றுக்கொள்கின்றது. இயற்கை பற்றிய அதன் கருத்து 'விரிந்து' வருகின்றது; புறச்சார்புடைய்தாகின்றது; ஐயப்பாட்டுக்குரியதாகின்றது. அது புதுமைக் கலையின் போக்கிலேயே செல்கின்றது.

இதுபோலவே மனித இயல்பும் திட்டவட்டமான, ஒரே வகையான இயல்பாக இன்று கருதப்படுவதில்லை. உலகப் போருக்கு எனும் கருத்து எல்லா வகை சமூகப் போக்குகளின் முழுமொத்தமாகும். அஃது அனைவராலும் ஏற்கப்படும் ஒரு தனி இயல்பன்று. மனிதப் பண்பாடுகள் அனைத்திற்கும் பண்டைய சிறப்புக் காலங்கள் இருந்தன; கோட்பாட்டு உறுதி ஊழிகள் இருந்தன: அவை எல்லாம் அக்காலங்களிலிருந்து ஒருங்கே வெளிவரவேண்டும். இவ்வாறாக அறிவியல், உளவியல், சமூகவியல் வெளிப்படுத்தும் ''புலமை ஆழம்'' மேல்நாட்டுப் பண்டைய சிறப்புக் காலம் வலியுறுத்திய மெய்விளக்க இயலின் ''புலமை ஆழத்தை'' வெற்றிகரமாக வென்றது. இதுதான் புதுமைக்கலையின் பொதுமையை விளக்குகின்றது.

புதுமைக்கலையானது ஒரு கலை வடிவமாகவோ, கலையியல்பாகவோ ''இயல்புப் பண்பைப்'' பெறவில்லை; உலகின் பன்மை—ஒருமையினின்று தோன்றிய வாழ்க்கை வகையாகவே அதைப் பெற்றது எனச் சுருக்கமாகக் கூறலாம். இதனால் புதுமைக்கலையானது எதிர் சமயச் சீர்திருத்தக் காலப் பகட்டாகவும், மரபுக் கட்டுப்பாடுகளை எதிர்க்கும் புரட்சியாகவும் மட்டுமிராமல், ''உறவுகளை வளர்க்கும்'' சின்னமெனும் அனைத்துலகத் தன்மையைப் பெற்றது.

இறுதியாக, ''தொழில்நுட்ப வகையில் மறு படிகள் எடுக்கக்கூடிய கலை'' என வால்ட்டர் பெஞ்சமின் விளக்கியுள்ள இன்றைய சலையின் அண்மை இயல்பு இந்த அனைத்துலகப் போக்கை உறுதிப்படுத்துகின்றது.

எதுவார்து கிளிசான் மார்ட்டினிக்கைச் சேர்ந்தவர்; 'லா லேசார்டு,' லித்தென்சியோன் போயத்திக்', 'லே திஸ்கூர் ஆந்திலே' போன்ற பல கவிதை, கதை, கட்டுரை நூல்கள் எழுதியுள்ளார்; 'மிசியர் தூசான்' எனும் நாடகமும் வெளியிட்டுள்ளார்: 1967இல் ஃபோர் தெ ஃபிரான்சில் மார்ட்டினிக் கல்வி நிலையத்தை நிறுவினார்-1981இலிருந்து யுனெஸ்கோ கூரியரின் தலைமை ஆசிரியராக இருந்து வருகிறார். இவரது 'மகாகோனி' எனும் நெடுங்கதை அண்மையில் வெளியானது.

புதுமைக்கலை எனும் கருத்து கிறிஸ்துவ மேற்கு நாடுகளின் பண்பாட்டு வரலாற்றில் 17, 18ஆம் நூற்றாண்டுகளைக் குறிப்பிடுமெனினும், அது கலைகளில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு பரவலான ஆற்றல் எழுச்சியை, இயக்கத்தை, உணர்ச்சி வேகத்தைக் குறிக்கலாமெனச் சில எழுத்தாளர் கருதுகின்றனர். (1) கம்பூச்சியாவில் ஆங்கோர் தாம் எனும் ஆலயத்தொகுதியிலுள்ள 13ஆம் நூற்றாண்டு வெற்றி வாயில் (2) பார்சிலோனாவிலுள்ள திருக் குடும்ப ஆலயம். இது 1883இல் கட்டலோனியக் கட்டடக்கலைஞர் அன்டோனியோ காவ்டியால் தொடங்கப் பெற்றது. ஆனால் முடிக்கப் பெறவில்லை (3) ஃபிரெஞ்சு அஞ்சலரும் தாமே பயின்ற கலைஞருமான ஃபெர்தினான் ஷெவால் தமக்கென்று கட்டிய கல்லறை மாடம் பிரான்ஸில் திரோமிலுள்ள ஹோத்தரிவில் 1879 முதல் 1912 வரை கட்டிய (தாம் கனவில் கண்ட) 'இலட்சிய மாளிகை' இவருக்குப் புகழைத் தந்தது. (4) ட்ரினிடாட், டொபாகோவின் (மேற்கிந்தியத் தீவுகள்) வண்ணக் களியாட்டக் காட்சி (5) கியூபா நாட்டுக் கவிஞரும் கதாசிரியருமான ஜோசே லெசாமா லீமா (1910-1976) பல லத்தீன் அமெரிக்க எழுத்தாளரைப் போல் இவரும் தம்மைப் புதுமைக் கலை எழுத்தாளராகக் கருதினார்.

படிப்பகம்

www.padippakam.com

3

ஒளிப்படம்: வில்லேம் பிராகா ● ராஃபோ, பாரிஸ்

1

2



ஒளிப்படம் ● மாஸ், பார்சிலோனா

படிப்பகம்

www.padippakam.com

சிற்பம், விழுமிய நாடகக் கலை

ஃபிரான்சுவா சூஷால்

பெர்னினி புதுமைக்கலைக் கால கத்தோலிக்க சமயத்தின் தலைசிறந்த கலைஞர். அவர்தாம் புனித பீட்டர் பேராலயத்தை ரோமில் போப்பாண்டவரின் புகழ்மிகுமையமாக்கியவர். அவரது திறமையை அவருடைய சிற்பங்களில் தெளிவாகக் காணலாம். மேலே இடப்புறம்: 'புனித தெரசாவின் ஆனந்த பரவசம்' (1644-1652) இது ரோமில் சாந்த மரியா தெல்லா வித்தோரியா ஆலயத்திலுள்ள கோர்னாரோ சிற்றாலயத்திலுள்ளது; 16 ஆம் நூற்றாண்டு ஸ்பானியக் கன்னியின் மெய்மறந்த மகிழ்ச்சியைக் காட்டுகிறது. பெர்னினி தம் சிற்பங்களில் இயக்கத்தைக் காட்ட விழைந்தார்; ரோமில் போர்கீஸ் மாளிகை அருங்காட்சியகத்திலுள்ள ''அப்போலோவும் டா∴ப்ளேயும்'' போன்ற புராணச் சிலைகளில்கூட (மேலே வலப்புறம்) சமய உணர்ச்சியைக் காட்டினார்.

வானவெளியிலே ஒரு பொருளைச் செலுத்துதல்-அதனை அங்கே வரையறை செய்து நிலைநிறுத்துதல்-இத்தகு பேராற்றலும் பெருமிதமும் வாய்ந்தது தான் ஒரு சிற்பியின் சாதனை. கட்டிடக்கலையில் பிறக்கும் கலைத்தாகம்; இதனால் உருவெடுக்கும் வடிவத்தின் கட்டமைப்பு; இது சுற்றுப்புறத்துடன் ஒன்றிவிடும் உண்மையெழில்; இதில் கலையழகும் உயிரோட்டமும் சேர்ந்த சிற்பம் சமைதல். அடிப்படை நிலையிலும் சரி, ஆக்கத்திலும் சரி, ஒரு கலைஞனின் கைவண்ணமே சிற்பமென்றால் அதனுள்ளே ஒரு கவிதையுள்ளம் கனிந்து கிடக்கின்றது. இதிலே ஒரு தெய்வீக நிலையின் தோற்றமோ, பேரரசின் மறுபதிப்போ அல்லது ஓர் உயர்ந்த மானுடனின் உருவச் சின்னமோ உட்பொருளாக அமைகின்றது.

பதினாறாம் நூற்றாண்டின் முடிவில், சிற்பிக்கும் இயற்கைக்கும் நடந்த போராட்டத்தின் இறுதியில் ஒரு புதுப்பாதை திறந்தது. பல ஐயங்களுக்கு ஆளாகிய மைக்கேலாஞ்சலோ பல சிற்பங்களை அரைகுறையாக விட்டுச் சென்றார். பழக்கவழக்கங்கள் திசைமாறின; கருத்து மோதல்கள் சுழன்று வந்தன. கருநாகம் சுருண்டு வளைந்து தன் வாலையே விழுங்குவது போலச் சுற்றிச் சுற்றி வரும் தெளிவற்ற குழப்பங்கள்; ஆழ்ந்தும் அகன்றும் ஆராய்ச்சி நடைபெற்ற இந்தச் சூழலில், தப்பித்து விரையும் முயற்சியும், மூச்சுத் திணறலுமே எஞ்சி நின்றன. பல காலமாகத் தொடர்ந்து நிகழ்வது போலவே, மேனாட்டுக் கலையுலகம் பல சோதனைகளை அடுத்தடுத்துச் சந்தித்தது. இப்போராட்டங்களின் முடிவிலோ பொங்கிவரும் புலனைப் போலப் புத்துணர்ச்சியுடன் முழுமையான வெற்றிப்பாதை ஒன்று வழி திறந்தது. நன்கு காலூன்றி உறுதி பெறாத நிலையிலும், இந்த நாகரிகம் இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக ஆதிக்கம் செலுத்தியது.

உணர்ச்சிப் பிழம்பாக முகிழ்த்த

படிப்பகம்

www.padippakam.com

இந்த புதுமைக்கலை நாகரிகத்தின் பல்வேறு கூறுகளை மதிப்பீடு செய்வது பொருந்தாத வீண் முயற்சியேயாகும். இக்கால கட்டத்தின் தனிப் பெருங்கலைஞர் கியான் லோரன்சோ பெர்னினி *(1598-1680)* ஆவார். இந்தச் சிற்பங்களிலே காணும் உயிரோட்டமும், மயக்குறுநிலையும் இணையற்றவையாகும் படைப்பாற்றலில் இவரை விஞ்சிய கலைஞர் இல்லை. முழுமையாக நம்மைப் பிணிப்பதும், காந்தமாகக் கவர்வதும் இவரது புதுமைக் கலைத்திறனின் சிறபபியல்புகள். கிறங்க வைக்கும் இவரது கலையெழில் காலத்தை வெல்லும் வகையில் பல தலைமுறையினரையும் ஆட்கொண்டது

எது எவ்வாறாயினும், பெர்னினியும் பல முரண்பாடுகளைச் சந்திக்க வேண்டியிருந்தது கலையார்வம் மிகுந்தவர் பெர்னினி; உன்னதமான தொன்மையும், அதன் உள்ளார்ந்த ஒருமைப்பாடும் இவரது அளவுகோல்களாக விளங்கின. இத்தாலிய நாட்டு அலெக்ஸாண்ட்ரோ அல்கார்டியும், ப்ளெமிங் ப்ராங்க் டஸ்னாயும் தோற்றுவித்த புதுமைக் கலையின் மாறுபட்ட கலையம்சங்கள் இவரது படைப்புகளுக்கு எதிர்ப்புகளை ஏற்படுத்தின. இதனால் எளிமை நலமும் இலக்கிய நயமும் தேவையென்ற கொள்கை வலுப்பெறலாயிற்று. எளிமை மிகுந்துவிடின், பெரும் பிழைகள் நேராவிடினும், செய்திகள் சீர்குலைய வாய்ப்புண்டு. எனவே திட்பமிகுந்த கலைநலத்திற்கும், எளிய உருவமைப்புக்கும் இடையே ஒரு போராட்டமே தோன்றலாயிற்று. கலையாழமும், சிறப்புகளும் ஒளிவிடும் சிற்பக்கலை செழுமையுடைத்தெனினும், காலப்போக்கில் தேய்மானமும்; அழிவும் தவிர்க்க இயலாதவையாயின, ஏனெனில், சிற்பக்கலையானது, தான் தோன்றியகணமே காண்போர் மனதை ஈர்ப்பதும், சிந்தனையைத் தூண்டும் ஒரு நாடகமே பொதிந்ததும் ஆகும். இங்கே மென்மையைவிட, உள்ளத்தைத் தொடும் கருணையும் கனிவுமே மிகுதியாக அமைகின்றன.

எடுத்துக்காட்டாக, பெர்னினியின் புகழ்வாய்ந்த ''அன்னை தெரஸாவின் மகிழ்ச்சிவெள்ளம்'' எனப்படும் சிற்பத்தினை ஆராய்வோம். *1709* முதல் *1777*வரை வாழ்ந்த ஃபிரெஞ்சு நாட்டு அறிஞர் சார்லஸ் டி ஃபிரான்ஸி எள்ளி நகையாடலுக்கன்றோ இது இலக்காகியது. ஒரு ரோமானிய மாதா கோயிலில் அணுக்கணப்பொழுதில் அன்னையின் நெஞ்சைத் துளைத்துச் செல்லும் பொன் கணையையும், அந்த இமைப் பொழுதில் காணும் அவளது உணர்ச்சிப் பிடிப்பாகும் உருவ எழில்களையும் பெர்னினி இங்கு சித்தரித்துள்ளார். கிறிததவ ஆன்மீகம் ஒளிவிட்ட கால கட்டம் அது; மாதா கோவிலுக்குச் சொந்தக்காரர்களான அரச பரம்பரையும், அங்கு நடந்த வரலாற்று நாடகங்களின் வற்றாத வளமும் நம் கண்முன்னே விரிந்து காணும் திறனையன்றோ நாம்.இங்கே காண்கிறோம்!

பல வகைகளிலே சிறந்து விளங்கும் இந்தப் புதுமைப்பாணி சிற்பமானது ஈடிணையற்றது; பல பொருள் சுட்டுவது; மாய உருவெளித் தோற்றம் காட்டுவது சமயக் கோட்பாடுகளின் செறிவினை ஒருபுறமும், சமூக நெறிகளின் தன்மைகளை மறுபுறமும் எடுத்தியம்புவது. நிஜத்தைவிட நிழலையே நம்பச் செய்யும் தோற்றப் பொலிவுடையது; இந்தக் கலைப் படைப்பிலே நாடக அங்கங்கள் பளிச்சிடுகின்றன; கண்காணாவிடத்திலிருந்து ஒளிவெள்ளம் பாய்கின்றது; வண்ணத்தகடுகள் ஊடே பாய்ந்து வரும் இந்த ஒளி, மென்மை பெறுகின்றது. உறுதிப்பாட்டுடனும், ஒப்பற்ற வலிமையுடனும் கம்பீரமாக விளங்கும் உருவ அமைப்புகள் அழியாப் புகழ்பெற்றுத் திகழ இன்னும் என்னென்ன தேவை? மனித ஆற்றலுக்குட்பட்ட சிற்ப வரையறைக்குள் அடங்காமல் மேம்பட்டு விளங்கும் கலையின் பேரெழில் இதுவேயெனில் மிகையாகாது.

மதச் சடங்குகளையும், சமய நெறிமுறைகளையும் சித்தரிப்பதில் பெர்னினி நிகரற்றவர். கண்டோரைப் பிணிப்பது அவரது புதுமைக் கலைப் பாணி கலைத்திறன்; புராணக்கதைகளைப் பின்னணியாகக் கொண்ட அவரது படைப்புக்களிலும் நம்மை வியப்பிலாழ்த்தும் விந்தை பொதிந்திருக்கும். எனவேதான், கிறித்தவ சமய அற்புதங்கள் உள்ளிட்ட பல வரலாற்று நிகழ்ச்சிகளும் கலைத் தாகத்தையும், உணர்ச்சி வேகத்தையும் ஒருங்கே பெறச் செய்யும் உன்னதப் படைப்புக்கள் இவையென்கிறோம்.

கலை என்ற பெயரில் இயற்கையையும் உண்மைகளையும் பெரிதும் சிதைவுறச் செய்த ஜெர்மனியிலும் பெர்னினியின் மிக முக்கியமான மாணவர்கள் தோன்றினர். மானிட இயலைவிட, தேவ இயல்களைச் சித்தரிக்கும் பேரவா அங்கு கிளர்ந்தெழுந்தது. ரோஹரில் உள்ள மாதா கோயிலில் காஸ்மாஸ் தமியன் ஆசம் என்ற சிற்பியும் அவரது சகோதரனும் சேர்ந்து ஒரு கிறித்தவ அற்புதத்திற்குச் சிலைவடிவம் தந்தனர், ''கனனி மேரி கொலுவிருத்தல்''— எனப்பட்ட இந்தச் சிலை எளிய முறையில் வடிவமைக்கப்பட்டது.

பெர்னினியின் நான்கு ஆறுகளின் ஊற்று (1647-1670) எனும் சிற்பத்தில் கங்கையின் விரிவான தோற்றம். இது ரோமில் நாவோனா சதுக்கத்தின் நடுவிலுள்ளது. பெர்னினி, (நாவோனா சதுக்கச் சிற்பியான) பொரோமினி, குவாரினி ஆகியோர் இத்தாலிய புதுமைக் கலைக்கால கட்டடக் கலைஞருள் தலைசிறந்த மூவர்.

ஒளிப்படம் © கயத்தானோ பரோஞ்ஸ், ரோம்

ஒளிப்படம் © ஸ்காலா ஃபிளாரன்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

ஒளிப்படம் © டொமினிக் ஜெனட், பாரிஸ்

வெர்சேயிலில் புதுமைக்கலை

∴பிரான்ஸில் 17ஆம் நூற்றாண்டு பண்டைய கிரேக்க ரோம மரபுக் காலமாக இருந்தது. புகழ்மிகு ஓவியரான நிக்கொலா பூசன் போன்ற அக்கால ∴பிரெஞ்சு ஓவியர்கள் புதுமைக்கால வேகத்தினால் பெரிதும் பாதிக்கப்படவில்லை. ஷுல் ஹார்துய்ன் மான்சார். லூயி லெவோ, ஆந்திரே லெ நோத்தர் ஆகியோர் வகுத்த 14ஆம் லூயி மன்னர் கால அரும்படைப்பான வெர்சேய்ல் மாளிகைகூட அதன் அமைப்பிலும், கட்டிடங்களிலும் தோட்டங்களிலும் பண்டைய கலை மரபையே காட்டுகின்றது. அவற்றில் புதுமைக் கலையின் வளைவுகளுக்குப் பதிலாக வரிவடிவச் சமநிலையையே காண்கிறோம். ஆயினும் 1674இல் தம் அரண்மனையை அலங்கரிக்குமாறு 14ஆம் லூயி அழைத்த ஷார்ல் லெ பிரன் புதுமைக்கலைக் காட்சிகளால் அதை அணி செய்தார். மேலே: ஷான்-பாப்திஸ்த் தியூபியின் 'கதிரோனின் தேர்'. அரண்மனைத் தோட்டத்தில் அப்போலோ குளத்திலுள்ள இவ் வெண்கலச் சிற்பம் லெ ப்ரனின் திட்டப்படி செய்யப்பெற்றது.

அங்கே அன்னை மரியாள் அந்தரத்தில் அருள் பாவிக்கிறார். புவியீர்ப்பு விசைக்கு இடமில்லாத அந்த உன்னத பீடத்தில் அவரைச் சுற்றித் தேவ தூதர்கள், அவர்களது உணர்ச்சிமிகு முக பாவங்களில் சோக நாடகமொன்றில் திறமையுடன் நடிக்கும் கலைஞர்களைக் காண்கின்றோம். இங்கே பெர்னினியின் நம்பிக்கையூட்டும் கலையெழிலையும், உண்மையின் செறிவையும், ஆர்வமிக்க உள்ள வேட்கையையும், அறத்திற்குத் தலைவணங்கும் அன்புள்ளத்தையும் இறைவனின் அளப்பரிய கருணையை நம்பும் உறுதியையும், தெய்வீக அருள்வேண்டும் உளப்பாங்கையும் காண்கின்றோம். ஆன்மீக மொழியின் அனைத்து ஆற்றல்களும் சங்கமிக்கும் இடம் இது

பெருமைமிக்க நாடகக்கலையின் சிறப்புக்களை மட்டுமின்றி, சமய உணர்வுகளையும், குறிப்பாகக் கிறித்தவத்தின் மேன்மையையும் பெர்னினியின் புதுமைப்பாணி சிற்பக்கலை அமரத்துவம் பெறச் செய்தது. முடியாட்சியின் திறன்மிக்க தலைமுறையின் வார்ப்படமாகவும், அன்றைய நாட்டுவளத்தின் வரைபடமாகவும், மாதா கோயிலைச் சுற்றியமைந்த அக்கால வாழ்க்கை, பிரபுக்களின் நாகரிக வாழ்வியல், அன்றைய ஆடம்பரமிக்க அரசுச் சூழல்கள், அரண்மனைகள் - பூங்காக்கள்- நீருற்றுக்கள்-பலவற்றின் அழியாச் சின்னங்கள் சிற்ப வடிவிலே உயர்ந்து நிற்பன. மேனாட்டு அறிஞர்கள் தாக்குதலினால் பின்னர் சரிவுற்ற இந்த சாம்ராஜ்ய எழில்களுக்கு இவையே எஞ்சிவிட்ட சான்றுகளாகும்.

பெர்னினியின் புதுமைக் கலைப் பாணி எனப்பட்ட அழுத்தமான சிற்ப இயல்புகள், பழம் புராணக் கதைகளையும், கிறித்தவ சமய அற்புதங்களையும் திறம்பட நிலைநிறுத்தினவென்றே சொல்லவேண்டும்.

புராண நாயர்களை நடிகர்களாக்கி, அவர்களது வரலாறுகளை உருவகக் கதைகளாக வடித்து உயிரோட்டம் பெறச் செய்வது பெர்னினிக்குக் கைவந்த கலையாகும்.

வெர்சேய்லுள்ள பூங்காச் சிற்பத்தினை ஃபிரெஞ்சு நாட்டவர் பெரிதும் பாராட்டுவதில்லை கல்லிலும், உலோகத்திலும் உயிர் பெற்று இயங்கும் இந்த உலகைவிட, அன்றைய அரசியல் வரலாற்றிற்கு வேறெந்த வடிவம் இவை காட்ட முடியும்? இத்தாலிய, ஜெர்மானியக் கலைஞர்களைவிட இந்த நாடக நடிகர்கள் துடிப்புக் குறைந்து காணப்படலாம். ஃபிரெஞ்சு நாட்டவரும் கட்டுப்பாடு விழைபவர்களே 1674ஆம் ஆண்டு ஓவியரான சார்லஸ் டி பிரன், மற்றும் சிற்பி ஃபிரான்ஸிஸ்ஜிரார்டன்-இவர்களது மாணாக்கர் ஆகியோர் திறனை நோக்கில் கலைநலங்களின் தேர்ச்சி இங்கே புலனாகின்றது. முழுமைபெற்ற இவர்களது புதுமைக்கலையில் நால்வகைப் பருவமும், நால்வகைச் சுவைகளும், நால்வகைப் பொழுதுகளும், நால்வகைக் கவிதைகளும் இன்ன பிறவும் ஒளிவீசுகின்றன.

சுருங்கச் சொல்லின், சிற்பக்கலை வரலாற்றில் மரபினைவிட்டு விலகிப் புதுமையை நோக்கி நடைபோடும் விழைவு தோன்றிய காலம் இது. உலக அறிவிற்கு ஒரு பொதுவிடமாகவும், அறிவுலகிற்கு ஒரு சிறப்பிடமாகவும் இதனைக் கொள்ளலாம். பொறையுடன் கூடிய சமயநெறி விளக்கமும், நம்பமுடியாத உண்மைகளை அலசி ஆராயும் தேடுதலும், கவிதையுள்ளவர்களின் ஒருமைப்பாட்டின் உயரிய தோற்றமும் இங்கே இரண்டறக் கலந்துள்ளன. உள்ளக் குமுறல்களின் அத்துமீறல், அழியாப் பேரின்ப வீடு பேற்றினைத் தேடும் ஆன்மீகப் பயணம், - இவற்றிற்கு ஒரு வடிகால் இந்தப் புதுமைப்பாங்கு எனலாம். மனித மனத்தினை ஊடுருவிச் சென்று, அங்கே ஆழப்பதிந்திருக்கும் உணர்ச்சிகளுக்கு விடுதலையளித்து, ஆன்ம உயர்வுக்கு வழிகோலும் ஒரு திடமான முயற்சியே கலையுலகின் இந்தப் புதுமைப் பாணிக்கு அடித்தளம் என்பதை நாம் உய்த்துணரலாம்.

தமிழில்: அகிலா சிவராமன்

வண்ணப் பக்கங்கள்

வலப்புற வண்ணப் பக்கம்

மேலே இடப்புறம்: திருடனின் தலை; ஓ அலெய்ஷாதினோ (சிறிய நொண்டி) எனப்படும் அண்டோனியோ ∴பிரான்சிஸ்கோ லிஸ்போவா இப் பல்வண்ணச் சிலையைச் (1796-1799) செதுக்கினார் இது பிரேசிலில் காங்கோன்ஹாஸ் டோ காம்போவிலுள்ள போம் ஜீசஸ் தெ மாட்டோஸின் ஹாஸ் ஆலயத்தின் சிலுவைப் பாதை சிலைகளுக்காகச் செய்யப்பட்டது. (38ஆம் பக்கக் கட்டுரை காண்க)

ஒளிப்படம் © ஸ்கால, ஃபிளாரன்ஸ்

மேலே வலப்புறம்: ஆலயத்தில் கிறிஸ்துவை அர்ப்பணித்தல் (1641) இதை வரைந்தவர் ∴பிரெஞ்சு ஓவியர் சிமோன் வூவே (1590-1649) வூவேயும், வெர்சேய்ல் அரண்மனையை அலங்கரித்த ஷார்ல் லெ பிரன் ஆகிய இருவரும் இத்தாலிய புதுமைக்கலை ஓவியத்தை ∴பிரான்ஸில் புகுத்தியவர்களுள் முதல்வராவார்.

ஒளிப்படம் © டி. ஜென , மாஸ்னோத் பதிப்பகம், பாரிஸ், லூவர் அருங்காட்சியகம்,

கீழே: ரோமில் ∴பார்னஸ் மாளிகையின் பெரும் கூரைச் சுவரோவியம். அனிபால் கராக்கி (1560-1609) இப் புராணக் காட்சிகளை 1597-1604இல் தீட்டினார். 17ஆம் நூற்றாண்டின் இவ்வரிய இத்தாலிய ஓவியப் படைப்பு புதுமைக்கலை ஓவியத்தையும், அலங்கார அணி ஒப்பனையையும் பெரிதும் வளர்த்தது. (30ஆம் பக்கக் கட்டுரை காண்க)

∴பிரான்சுவா சூஷால் *ஃபிரெஞ்சு கலை வரலாற்றறிஞர்; அருங்காட்சியகக் காப்பாளர்; 1969 முதல் லீல் பல்கலைக்கழகத்தில் கலை வரலாற்றுப் பேராசிரியர்; தம் நாட்டின் வரலாற்றுச் சின்னக் குழுவின் உறுப்பினர்; புதுமைக்கலைச் சிற்பம், கட்டடக் கலைஞர் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். 'ஃபிரஞ்ச் ஸ்கல்ப் டாஸ் ஆஃப் தி 17த் அண்டு 18த் செஞ்சுரீஸ்'' (ஃபேபர் அண்டு பேபர், 1977-1987) எனும் ஆங்கில நூலில் 3 தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.*

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

படிபபகம

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

www.padippakam.com

வண்ணப் பக்கங்கள்

மேலே இடப்புறம்: ‘‘ஒளி ஊடுருவல்’’ எனப்படும் இந்த அலங்கார அமைப்பு 1721-1732இல் ஸ்பெயினில் டோலடோ பேராலய நடைபாதையில் நார்சிசோ டோமேயால் அமைக்கப்பெற்றது. இது சாந்தியாகோ தெ கொம்போஸ்தெலா பேராலய முகப்பு போன்றது. (14ஆம் பக்கக் கட்டுரை காண்க)

ஒளிப்படம் © மாஸ், பார்சிலோனா

கீழே இடப்புறம்: ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசில் மியூனிக்கிலுள்ள புனித ஜான் நெப்போமுக் ஆலய (1733-1746) நடுப் பலிபீடமும் நடுப் பகுதியும். இவற்றை கோஸ்மாஸ் தமியான் ஆசாம் (1686-1739), எகித் குய்ரின் ஆசாம் (1692-1750) ஆகிய சகோதரர் அமைத்தனர். (42ஆம் பக்கக் கட்டுரை காண்க)

ஒளிப்படம © ஏ.ஹோமக், லண்டன்,

நடுவில்: 'புனித இஞ்ஞாசியாரின் வெற்றி' (1685): இது ரோமிலுள்ள புனித இஞ்ஞாசிரியார் ஆலயத்தில் ஆந்திரேயா போசோ (1642-1709) எனும் சேசு சபைக் குரு அமைத்த கூரைச் சுவரோவியம். (30ஆம் பக்க கட்டுரை காண்க)

ஒளிப்படம © ஸ்காலா, ஃபிளாரன்ஸ்

மேலே வலப்புறம்: புனித பொனா வெந்தூரின் உடல் கிடத்தப்பட்டுள்ளது. (1629) இதைத் தீட்டியவர் ஃபிரான்சிஸ்கோ தெ சுர்பரான் (1598-1664).(14ஆம்பக்கக்கட்டுரை காண்க)

ஒளிப்படம © ஆர்.எம் என்., பாரிஸ். லூவர் அருங்காட்சியகம்

கீழே வலப்புறம்: ரோர் (ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசு)மடாலய/பாடற் குழுப் பகுதிக்கெனப் படைத்த ‘‘விண்ணேற்றம்’’ (1718-1722). இதில் உணர்ச்சியூட்டும் போக்குகளும் செயற் குறிப்புகளும் ஆற்றல் மிகு இயக்க வேகத்தைக் காட்டுகின்றன'(20ஆம் பக்கக்கட்டுரைகாண்க)

ஒளிபடம © டோனி ஷ்னைடர்ஸ, லிண்டோ, ஜெர்மானியகூட.டாட்சி குடியரசு.

வண்ணப் பக்கம் இடப்புறம்

மேலே: பிரேசிலில் சால்வடோரிலுள்ள புனித ஃபிரான்சிஸின்மூன்றாம் சபைக் கோயிலின் உட்புறம். (39ஆம் பக்கக் கட்டுரை காண்க)

ஒளிபபடம: மோய்ஸனார்டு © எக்ஸ்ப்ளோரர்,பாரிஸ்.

கீழே இடப்புறம்: ‘‘துப்பாக்கி ஏந்திய வானதூதன்’’ (பெரு) ஆண்டீஸ் பகுதி புதுமைக்கலை சார்ந்த இவ்வுருவம் குஸகோ இயல்புள்ள 18ஆம் நூற்றாண்டு ஓவியத்தில் காணப்படுகின்றது. (36ஆம் பக்கக் கட்டுரை காண்க)

ஒளிபபடம © ரோஜாஸ மிக்ஸ, பாரிஸ மானுவல் மியூஜிக்கா கிராலோ திரட்டு

கீழே வலப்புறம்: போர்ச்சுகலில் லாமகோவிலுள்ள நோசா சிஞ்ஞோரா தோ ரெமெதியோஸ் திருப்பயண ஆலயப் படிக்கட்டிலுள்ள ஓவியந்தீட்டிய பளபளப்பான ஓடு,

ஒளிபபடம்: எஸ், மார்மூனியர் © செத்ரி, பாரிஸ

ஒளிப்படம்: மார்மூனியர் © செத்ரி, பாரிஸ்

போர்ச்சுகீசிய புதுமைக்கலையின் மாண்புறு மரபுச் செல்வம்

ஜோஸ்—அகஸ்டோ ஃபிரான்சா

போர்ச்சுகீசிய இளம் மன்னர் ஐந்தாம் ஜான் (1706-1750), அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பிரேசில் கருவூலங்களைக் கொண்டு தமது கலைக் கருவூலத்தை வளப்படுத்துவதற்குத் தீர்மானிக்கும் வரையில் போர்ச்சுகீசிய புதுமைபாணிக் கலை உண்மையில் தோற்றம் பெறவில்லை எனலாம். இந்த எண்ணத்தைச் செயற்படுத்தும் வகையில் அவர் மடாலயம் — அரண்மனை — தேவாலயம் மூன்றும் அடங்கிய ஒரு மாபெரும் திட்டத்தைத் தமது வல்லமையின் சின்னமாக நிறைவேற்ற திட்டமிட்டார். இத்திட்டம் 1717இல் தொடங்கப்பெற்றது.

இத்திட்டத்தின் பெயர் மாஃப்ரா. இதற்கான பல வடிவமைப்புகளை ஜெர்மனியின் தலைசிறந்த கட்டிடக் கலை வல்லுநராக விளங்கிய ஜே. எஃப். லட்விக் வரைந்தார். இவை ஒவ்வொன்றும், ஒன்றுக்கொன்று மேம்பட்டதாக விளங்கின. மற்றொரு வடிவமைப்பை கர்லோ

மேலே: விலா ரியலிலுள்ள மட்டேயஸ் குடும்ப மாளிகைகள் போன்ற பண்ணை வீடுகளும் குடும்ப மாளிகைகளும் 18ஆம் நூற்றாண்டின் போர்ச்சுகீசிய உலகியல் கட்டடக்கலையின் எழிலைக் காட்டுகின்றன.

ஃபாண்டானா என்ற புகழ்பெற்ற இத்தாலியக் கட்டிடக்கலை வல்லுநர் ரோமானியக் கட்டிடக்கலைப் பாணியில் உருவாக்கினார். இவ்விரு வடிவமைப்புகளின் ஒருங்கிணைப்பாக, ஜெர்மன்—இத்தாலிய கட்டிடக்கலைகளின் கூட்டுக் கலவையாக இந்த மடாலய—அரண்மனை—தேவாலயக் கட்டிடம் உருவாகலாயிற்று.

மாஃப்ரா தேவாலயக் கட்டிடப் பணி தொடங்கப்பெற்ற ஈராண்டுகளுக்குப் பிறகு, ஐந்தாம் ஜான் அரசர், லிஸ்பனைச் சேர்ந்த புகழ்பெற்ற கட்டிடக்கலை வல்லுநர் ஃபிலிப்போ ஜுவாராவை அழைத்து, ஓர் அரசரும் பத்து அரண்மனைக்

படிப்பகம்

www.padippakam.com

வலப்புறம்: மா∴ப்ராவில் சுற்றிலும் தூண்களுள்ள அரண்மனைமடாலயம். இது 18ஆம் நூற்றாண்டில் 5ஆம் ஜான் மன்னரின் ஆட்சியில் செழித்த போர்ச்சுக்கீசிய புதுமைக்கலைக்கு எடுத்துக்காட்டு. ஸ்பெயின் அரசர் 2ஆம் பிலிப்பின் எஸ்கோரியலுக்கு இணையாக ஜான் மா∴ப்ராவை அமைத்தார் (16ஆம் பக்க ஒளிப்படம் காண்க). மேலே: பிரூவிலுள்ள சாந்தா காசா தா மிசரிகோர்தியா ஆலய முகப்பு 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை போர்ச்சுக்கீசியகுடியேற்ற நாடாகவிருந்த பிரேசிலில் இது போன்ற பலவகை ஆலயங்கள் கட்டப் பெற்றன.

கும், ஒரு குலமுன்னோர் தேவாலயத்திற்கும் வடிவமைப்பு வரைந்து தருமாறு கேட்டார். அத்தகைய கட்டிடத்தை எழுப்புவதற்கு ஆகும் நீண்டகாலத்தை எண்ணி மனச்சோர்வடைந்த அரசர், தாகஸ் ஆற்றங்கரையில் 1580-க்குப் பின்னர் ஸ்பெயினின் இரண்டாம் பிலிப் (இவர் போர்ச்சுகல் மன்னராகவும் இருந்தவர்) எழுப்பிய அரண்மனையை விரிவுபடுத்திப் புதுப்பிக்க முடிவு செய்தார்.

தலைநகருககு எழிலூட்டுவதற்கான பல அற்புத நீருற்றுகளை அமைப்பதற்குரிய ஆலோசனைகளை அங்கேரிய கார்லோஸ் மார்டல் தெரிவித்தார். இதற்கிடையில், மாஃப்ராவில் பயிற்சிபெற்ற மாட்டியஸ் வின்சென்ட் என்ற போர்ச்சுகீசியக் கட்டிடக்கலைஞர் 1747இல், லிஸ்பன் அருகிலிருந்த குவலுஸ் என்ற இடத்தில் அரசரின் இளவலுக்கான ஒரு நாட்டுப்புற அரண்மனையைக் கட்டும் பணியைத் தொடங்கினார்.

ஐந்தாம் ஜான் இறப்பதற்குச் சற்றுமுன்னர், மறுமலர்ச்சிக் காலக் கட்டிடக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய, லூகிவான் விட்டலியால் வடிவமைக்கப்பட்ட புனித ஜான் தேவாலயத்தை ரோமிலிருந்து கொணர்ந்து புனித ரோச் என்ற இயேசுச் சங்கத் தேவாலயத்தில் நிறுவும்படி ஆணையிட்டார். குலமுன்னோர் தேவாலயத்தைப் போலவே, இந்தத் தேவாலயமும், அற்புதமான சமய அணிகலன்களையும் ரோமானியச் செப்பேடுகளையும் கொண்ட ஓர் அருங்காட்சியகமாக விளங்குகிறது.

ஐந்தாம் ஜான் தாம் விரும்பிய கலைக் கருவூலங்களை ரோமிலிருந்தும், பாரிசிலிருந்தும் பெற்றுக் கொண்டார். சமயச் சார்பான கலைப் பொருட்களை ரோம் வழங்கியது. சமயச் சார்பற்ற கலைப் பொருட்களைப் பாரிஸ் வழங்கியது. பாரிசிலிருந்து ஐந்தாம் ஜான் பெற்ற ஏராளமான செதுக்குச் சித்திரங்கள், அவர் மறைந்த ஐந்தாண்டுகளுக்குப் பிறகு 1755இல் அவரது தலைநகரையே நாசமாக்கிய கொடிய நிலநடுக்கத்தில் அழிந்து போய்விட்டன.

எனினும், நாட்டின் வடக்கில், அரசவையிலிருந்து வெகுதூரம் தள்ளியிருந்த நிலப்பிரபுக்கள் ஆதிக்கம் பெற்றிருந்தமையால், பல்வேறு புதுமை பாணிக் கலை வடிவங்கள் வளம்பெற்றன. அவை செதுக்குச் சித்திரமுறையைப் பெரிதும் பயன்படுத்திக் கொண்டன. நிக்கோலோ நேசோனி (பின்னர் அவரது சீடர் ஃபிகடரோ டி சேயஸ்) 1725 முதல் போர்ட்டோவில் செல்வாக்கு வாய்ந்த கட்டிடக் கலைஞராக விளங்கினார். இவர் எழுப்பிய கட்டிடங்களில் கிளரிகோஸ் தேவாலயம் (1731-1749), ஃபிரிக்சோ, சாவோ—ஜோவோ—நோவோ மாளிகைககள் ஆகியவை முக்கியமானவை.

அந்த நூற்றாண்டின் மத்தியில், போர்ட்டோவுக்கு அருகிலிருந்த பிராகாவில், சோரஸ் என்ற கட்டிடக் கலைஞர் ஃபால்பெரா தேவாலயம் என்ற வரலாற்று சிறப்புவாய்ந்த கட்டிடத்தையும், நகரமண்டபத்தையும், ரேயோ மாளிகையினையும் எழுப்பினார், இந்த மாளிகையின் முகப்புத் தோற்றம், அந்தக் காலத்திய போர்ச்சுகீசிய கட்டிடக்கலை நுட்ப வேலைப்பாடுகள் அனைத்தையும் கொண்டு விளங்கியது.

இதேகாலத்தைச் சேர்ந்த போர்ச்சுகீசிய ஓவியங்களும், சிற்பங்களும் இரண்டாம் தரமானவைதான் என்றாலும், மாஃப்ராவை அழகுபடுத்துவதற்கு ரோமானிய ஓவியர்கள் தீட்டிய இரு ஓவியங்கள் போர்ச்சுகலின் கலைப்படைப்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகப் போற்றப்படுகின்றன. இவ்வாறாக, மாஃப்ராவின் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கற்செதுக்கோவியங்களும், முலாம்பூசிய மரச்செதுக்குச் சித்திரங்களும், ஆயிரக்கணக்கான வண்ணம் பூசிய ஓடுகளும், போர்ச்சுகீசிய புதுமைபாணிக் கலைப்படைப்புகளும் ஐந்தாம் ஜான் மன்னரின் பெருமைக்கும் கலையார்வத்திற்கும் புகழ்பாடி நிற்கின்றன.

தமிழில்: இரா. நடராசன்

ஜோஸ் — அகஸ்டோ ∴பிரான்சா: போர்ச்சுக்கீசிய வரலாற்றறிஞர்; கலைத் திறனாய்வாளர்; லிஸ்பன் புதுப் பல்கலைகழகப் பேராசிரியர்; பாரிஸ் III. பல்கலைக் கழக இணைப் பேராசிரியர்; பன்னாட்டுக் கலைத் திறனாய்வாளர் சங்கத் தலைவர், கலை வரலாற்றுப் பன்னாட்டுக் குழு உறுப்பினர் "உயர் வில தெ ஓர்மியா: லா லிஸ்போன் தெ போம்பால்" (1965) எனும் நூலின் ஆசிரியர்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பெரும் மாயத் தோற்ற ஓவியர்கள்

ஆர்னால்டு பிரஷோன் தெ லா வெர்க்னி

புதுமை பாணிக்கலைக்குப் பல பெயர்கள் உண்டு. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, ''சீர்திருத்த எதிர்ப்புக் கலை'',''இயேசுச் சங்கப் பாணி'' என்பன. செயற்கைப்பாணி மரபினர் கையாண்ட கடுமையான துறவுப் போக்கிற்குப் பிறகு, கொள்கைகள் மாறுதலடைந்தன. கலைஞர்கள் பற்றிய திருச்சபையினரின் மனப் போக்குத் தளர்வடைந்தது. எல்லாக் கலைகளிலும் பொதுவாக ஒரு மறு மலர்ச்சி தோன்றியது. ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்து இடப்பரப்பைக் கையாள்வதற்கான ஒரு புதிய கோட்பாட்டை வழங்கின. கோட்பாடுகளுக்குக் காட்சி வடிவங்கொடுக்கும் ஒரு புதிய பாணி ரோமில் தோன்றியது. இதனை இயேசுச் சங்கத்தினர் பரப்பினர். அவர்களுக்குத் திருச்சபையினர் ஆதரவளித்தனர். ரோமானியத் தேவாலயங்களின் முகடுகள் ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டன. இந்த ஓவியங்கள் அலங்கார வேலைப்பாடுகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.

17ஆம் நூற்றாண்டில் புதியவகை ஓவியக்கலை தோன்றியது. இதன் அடிப்படை அம்சங்களை இத்தாலியத் திறனாய்வாளர் லூய்கி சாலர்னோ இவ்வாறு விவரிக்கிறார்: ''உருவங்கள் இனியும் வெறுங்கோடுகளையும் வண்ணங்களையும் மட்டும் கொண்டவையல்ல. இந்தக் கோடுகளுக்கும் வண்ணங்களுக்கும், காட்சிகளுக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒன்றை உணர்த்த ஓவியர் விரும்புகிறார். அந்த ஏதோ ஒன்றுதான் பார்வையாளர்களின் உணர்ச்சிகளைத் தொட்டு, அவர்களின் கற்பனையைத் தூண்டிவிடுகின்றன'' கற்பனையைத் தூண்டுவதற்காக, ஓவியர், பார்வையாளருக்கும் கலைப் படைப்புக்குமிடையிலான தடையை உடைத்தெறிந்து, தனது ஓவியத்தில் ஒரு ''முடிவிலா'' அம்சத்தை ஊட்டுவதற்கு முயல்கிறார்

அன்னிபால் காராக்கி என்ற போலோனிய ஓவியர், தமது ஓவியங்களிலுள்ள உருவங்களை, பார்வையாளர் நிற்கும இடப்பரப்பிற்கு மிகு அருகில் கொணர முயல்கின்றார்; உண்மையான இடப்பரப்பின் ஒரு நீட்சிதான் தமது ஓவியங்கள் எனற உணர்வை ஏற்படுத்துகின்றார். காரவாகியோ என்ற ஓவியர் அன்றாட வாழ்வுக்குத் தெய்வீகத் தன்மையூட்டி ஒரு புரட்சியினைச் செய்தார். அவருக்குச் சில ஆண்டுகளுக்குப் பின்பு, பெர்னினி என்ற கலைஞர், கலைக்கும் வாழ்வுக்குமிடையிலிருந்த இடைவெளியை அடியோடு ஒழித்தார். ரோமில் விசித்திரமான புதுமை பாணிக்கலையில் மூன்று தலைமுறைகளில், மூன்று கட்டங்களாகக் கலைப் புரட்சி ஏற்பட்டது.

அன்னிபால் காராக்கியும் புதிய பாணியும்: அன்னிபால் காராக்கி (1560-1609) 1595இல் கார்டினல் ஓடோர்டோ ஃபார்னசியின் அழைப்பின் பேரில் ரோமுக்கு வந்தார். அவர் ஏராளமான நிலைச்சட்ட ஓவியங்களைப் படைத்ததுடன், 17ஆம் நூற்றாண்டுக் கலை மிகச் சிறந்த படைப்பாகக் கருதப்படும் ஓவியங்களையும் தீட்டினார். இவை பாலாசோ ஃபார்னசி கலைக்கூடத்தின் முகட்டில் தீட்டப்பட்டன. இந்த ஓவியங்களுக்கு அவர் ''அன்பின் வெற்றி'' ஒன்ற நுதல்பொருளை எடுத்துக் கொண்டார். இவற்றில் புராணக் காட்சிகளை, புதுமையாகவும், உயிர்த்துடிப்போடும், எழில் ததும்ப வரைந்தார். இதன்பிறகு பல தலைமுறைகளுக்கு முகடு அலங்கார வேலைப்பாடுகளுக்கு இவை முன் மாதிரியாக அமைந்தன.

ஹென்ரிக் வால்ஃப்ளின் (1864-1945) என்ற சுவிஸ் கலை வரலாற்றாசிரியர் பண்டையக் கலைப்பாணியிலிருந்து புதுமை பாணிக் கலை ஐந்து அம்சங்களில் வேறுபட்டிருப்பதாகப் பாகுபடுத்திக் காட்டுகிறார்

- பண்டையக் கலைப்பாணி நீள வாக்கில் அமைந்துள்ளது. அதில் சித்தரிக்கப்படும் நுதல்பொருள்கள் வரம்புகளுக்குட்பட்டவை; பின்னணியிலிருந்து தனித்து நிற்பவை. புதுமை பாணிக் கலையில், உருவநேர்த்தி மிகுதி; நுதல்பொருள்கள் பின்னணியுடன் இயல்பான உறவு கொணடிருக்கின்றன.
- பணடையக் கலைப்பாணி சமதளக் கட்டுமானத்தையுடையது. புதுமை பாணிக் கலை ஆழமான கட்டுமானம் உடையது.
- பண்டையக் கலைப்பாணி தனியடக்கமானது; புதுமை பாணிக்

பனித பீட்டரைச் சிலுவையிலறைதல் (1600-1610) காரவாகியோ தீட்டிய இத்திரையோவியம் இன்று ரோமிலுள்ள சாந்த மரியா தெல் பேரப்பலோ ஆலயத்திலுள்ளது. காரவாசியோ (1573-1610) தமது குறுகிய வாழ்நாளில் உணர்ச்சி வேகத்தினாலும், ஒளியையும் இருளையும் பயன்படுத்தியும், சமய காட்சிகளை உள்ளவகறே காட்டியும் புதுமைக்கலை ஒவியத் வழிவகுத்தார்.



ஒளிப்படம் ஸ்காலா; ஃபிளாரன்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

ஒளிப்படம் © ஸ்கலா, ஃப்ளாரன்ஸ

வெனிஸ் ஓவியர் கியோவானி பத்திஸ்தா தியம் போலோவின் காலத்துடன் (1696-1770) பெரும் இத்தாலியப் புதுமைக்கலை ஓவியக் காலம் முடிவடைந்தது. அவரது படைப்பின் எழில், உணர்ச்சி, மென்மை 18 ஆம் நூற்றாண்டின் ஓவியத்தை, சிறப்பாக, அவர் நீண்ட காலம் வாழ்ந்த ஸ்பெயின் நாட்டு ஓவியத்தைப் பாதித்தது. மேலே: 'அந்தோனியும் கிளியோப்பாட்ராவும் சந்தித்தல்: இது வெனிஸிலுள்ள பலாசோ லாபியா சுவரோவியம்.

கலை தடையில்லாதது.

● பண்டையக் கலைப் பாணியில் காணப்படும் ஒற்றுமை, பல்வேறு தனித்த அம்சங்கள் ஒருங்கிணைந்த ஒற்றுமையாகும்; அந்த அம்சங்களைத் தனித்தனியே பாகுபடுத்திக் காணலாம், புதுமை பாணிக் கலையில் காணப்படும் ஒற்றுமை பகுத்தறிந்து காணமுடியாத இரண்டறக் கலந்த ஒற்றுமையாகும்.

● பண்டையக் கலைப்பாணி, உருவங்களின் தெளிவுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. 'ஆனால் 'புதுமை பாணிக் கலை, தனி உருவங்களின் தெளிவுக்கு முக்கியத்துவமளிக்காமல் அவற்றுக்கிடையிலான உறவு நிலைகளுக்கு முக்கியத்துவம்கொடுக்கிறது.

புதுமை பாணிக் கலையைக் 'குறிக்கும் போர்ச்சுகீசியச் சொல் 'பரோக்' என்பது. இதற்கு அலங்கோல்மான வடிவமுள்ள முத்து என்பது பொருள் 17ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரோமில் தோன்றி, பின்னர் மற்ற நாடுகளுக்கும் பரவிய ஒரு வகைக் கட்டிடக் கலைப்பாணியைக் குறிப்பதற்கு இதனைப் பயன்படுத்தினர். நாளடைவில், சிற்பம், ஓவியம், இசை, கவிதை போன்ற மற்றக் கலைகளைக்குறிக்கவும் இது பயன்படுத்தப் படலாயிற்று. இந்தப் பாணிக் கலையின் காலஅளவு நாட்டுக்கு நாடு வேறுபட்ட போதிலும், பொதுவாக 17ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை எனக் கூறலாம்.

இந்தப் புதிய பாணியின் முன்னோடிகளில் ஒருவராக விளங்கியவர் கியோவானி லான்ஃபிராங்கோ (*1582-1647*) ஆவார். காரேகியோவின் (*1494-1534*) சுவரோவியங்களில் காணப்படும் சிதறலான ஒளியமைப்பினால் மனங்கவரப்பட்ட இவர், தமது சொந்தச் சுவரோவியங்களில் சில புதிய பரிசோதனைகளைச் செய்து பார்த்தார். அவற்றில், அவர் ஒளியையும் நிழலையும் மாறிமாறிக் கையாண்டு, அதிக உயிர்த்துடிப்பையும், உயிரோட்டத்தையும் ஏற்படுத்தினார். அவர் ஆண்டிரியாடெல்லாவால் (*1625*) தேவாலயக் கவிகை கூர்ங்கோபுர அலங்கார வேலைப்பாடுகளில் இந்தப் புதிய உத்தியைக் கையாண்டார்.

சீர்த்தியும் போலித்தோற்றமும்: புதுமை பாணிக்கலையின் முதிர்ச்சி: பீட்ரோ டா கோர்ட்டோனா (*1596—1669*) என்பார் உண்மையில் முதலாவது இத்தாலிய புதுமை பாணி ஓவியக் கலைஞர் ஆவார். இவர் பெர்னினியின் பாணியில் ஓவியங்களை வரைந்தார். தேவாலயங்களை அலங்கரிப்பதில் கவனம் செலுத்தினார. இவா

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

17ஆம் நூற்றாண்டின் ரோமானிய ஆலயங்களிலும் அரண்மனைகளிலுமுள்ள அரிய கூரை ஓவியங்கள் புதுமைக்கலை ஓவியர்களின் விசித்திர' மாயத்தோற்ற விழைவுகளைக் காட்டுகின்றன. இடப்புறம்: பசிக்சியா எனப்படும் கியோவானி பத்திஸ்தா காலி ரோமிலுள்ள இயேசு ஆலயத்தின் கூரையில் தீட்டிய 'இயேசுவின் பெயரின் வெற்றி' எனப்படும் சுவரோவியம். செதுக்கப்பெற்ற, தீட்டப்பெற்ற உருவங்கள் பொய்யான, உண்மையான கட்டடக்கலை அமைப்புகளுடன் கலந்திருப்பதால் அரியதொரு மாயத் தோற்றம் காணப்படுகின்றது.

த:பக்தென ஒரு தனிபாணியையும் வகுத்துக்கொண்டார். அந்தப் பாணியைப் பின்னர்வந்த லே பிரன் பின்பற்றினார்.

எட்டாம் போப்பாண்டவர் அர்பன் ரோம் நகரை ஒரு தலைசிறந்த தலைநகராக உருவாக்கும் மாபெரும் திட்டத்தை நிறைவேற்றுவதில் பெர்னினி, கோர்ட்டோனா போன்ற தலைசிறந்த ஓவியர்கள் உட்பட பல புகழ்பெற்ற கலைஞர்கள் பங்கு கொண்டார்கள். கோர்ட்டோனாவின் சிறந்த படைப்புகளில் ஒன்று பார்பெரினி அரண்மனையின் முகடுகளில் சுவரோவியங்களைத் தீட்டியதாயும். இதில் கட்டிடக் கலை அம்சங்களும், சிற்பக் கலைப் பண்பியல்புகளும் ஒருங்கிணைந்திருந்தன.

அடுத்து 15ஆம் நூற்றாண்டு ரோமானிய ஓவியக் கலையின் மூன்று அடிப்படைப் போக்குகள உருவாகின. அவை சீர்மையுடனும், போலித் தோற்றத்துடனும், கண்கவர் வண்ணங்களுடனும், கவர்ச்சிமிகு வடிவங்களுடனும் மேற்பரப்பிடத்தில் வரையறையின்றி இடம் பெறலாயின. இவை பெர்னினியின் மொழியில் நம்முடன் உரையாடுகின்றன. நீல வானத்தைப் பின்னணியாகக் கொண்டு, கட்டிடக் கலைக்கு எடுத்துக்காட்டான பல கட்டிடங்கள் எழுப்பப்பட்டன. 30 ஆண்டுகளுக்குப் பிறகு, கோர்ட்டோனா தமது அலங்கார வேலைப்பாடுகளில் கடைசியாக சீசா நியூவா மைய மண்டபத்தின் கவிகை மாடத்தின் சுவரோவியங்களில் ஒரு புதுவகையான திரியுக் காட்சி வடிவங்களை அமைத்திருக்கிறார். இந்த படைப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் இதனைப் பின்பற்றித்தான் 18ஆம் நூற்றாண்டு முழுவதிலும் ரோமிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தேவாலய மைய மண்டபங்களில் அலங்கார வேலைப்பாடுகள் அமைக்கப்பட்டன. இந்தச் சுவரோவியங்களில் தெய்விக உருவங்கள் மேன்முக இயக்கத்துடன் அன்றாட வாழ்வின் இயல்புடன் சித்திரிக்கப் பட்டுள்ளன அந்த வகையில் இவை ஈடிணையற்றவை, அந்த நூற்றாண்டின் ஓவியர்கள், கற்பனையை இயல்பு நவிற்சியுடன் சித்திரிக்க முயன்றார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

இத்தாலியில் 17ஆம் நூற்றாண்டில் இரண்டாவது மிகப்பெரிய கலை மையமாக விளங்கியது நேப்பிள்ஸ். காராவாகியோ முதல் லூக்கா கியோர்டானோ வரையில் பலதரப்பட்ட அனுபவங்களின் மோதலின் விளைவாகத் தற்பண்பு வாய்ந்த கலப்புப் பாணிகள் உருவாகின. புதுமை பாணிக்கலையின் ஆதிக்கத்திற் கிடையில், கியோர்டானோவின் புத்தமைப்புத்திறன் 18ஆம் நூற்றாண்டு ஐரோப்பிய ஓவியக்கலைக்கு அடித்தளம் அமைத்தது. பொருத்தமான கவிதை நயமான வண்ணக் கீற்றுகளும், ஆடம்பரமற்ற எளிமையான மானுடத் தன்மையும், மற்ற இத்தாலிய அலங்கார வேலைப்பாட்டு ஓவியர்களிடமிருந்து அவரை வேறுபடுத்திக்காட்டின. ஃபிளாரன்சிலுள்ள மெடிசிரிக்கார்டி அரண்மனையின் நூலகக் கலைக்கூடத்தின் சுவரோவியங்கள் அவர் பல பாணிகளை ஒருங்கிணைத்துப் படைத்தலையாகும்.

காலி மற்றும் ஆண்டிரியா போசோ: முழுமைபெற்ற திரிபுக் காட்சி வடிவங்கள். 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் ரோமில் மிக முக்கியமான அலங்கார வேலைப்பாட்டுப் படைப்புகள் உருவாக்கப்பட்டன. கியோவானி பாட்டிஸ்டா காலி *(1639-1709)* என்ற ஜெனோவா ஓவியர், முந்திய நூற்றாண்டில் கியாக்கோமோ டாவிக்னோலாவினால் சீர் திருத்த எதிர்ப்புப் பாணியில் கட்டப்பட்ட இல் ஜெசு என்ற இயேசு சங்க மாதா கோயிலை, தமது மைய மண்டபச் சுவரோவியங்களின் மூலம் ஒரு புதுமை பாணிக் கலை மாதாகோயிலாக மாற்றியமைத்தார்.

பெர்னினியிடமிருந்து அகத்தூண்டல் பெற்ற காலி, பெர்னினியின் புரட்சி ஓவியக் கொள்கைகளை இல் ஜெசு மாதாகோயில் அலங்கார வேலைப்பாடுகளில் பரப்பினார். புதுமை பாணிக்கலை ஓவியர்கள் எப்போதுமே ஒருவகைத் திரிபுக்காட்சியைப் புகுத்துவதில் நாட்டம் கொண்டவர்கள். இல்ஜெசு மாதாகோயிலில் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளைக் காணலாம். இதில் முதன் முறையாகப் பிற்கால புதுமைபாணி கலைப் பண்புகளைக் காணலாம். இவற்றில் உருவங்களின் பரப்பீட்டைவிடக் கருமைப் பகுதிகள் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. சுவர்ச் சிற்ப உருவங்கள் ஓவியமாகத் தீட்டப்பட்டிருப்பதாலும், ஓவியமாக இடம்பெற வேண்டிய உருவங்கள சுவர்ச் சிற்பங்களாக வடிக்கப்பட்டிருப்பதாலும், ஓவியங்களையும் சிற்பங்களையும் வேறுபடுத்திக் காண இயலவில்லை. காலி தமது ஓவியங்களுக்கு திண்மையான செதுக்குச் சித்திர வடிவம் கொடுத்தார். இது பெர்னினியின் சிற்பக் கலையின் செல்வாக்கால் அமைந்ததாகும். இத்துடன் ஒளி, நிழல் இரண்டின் சமநிலையையும் சேர்ந்து; ஜெசு மாதா கோயில் சுவரோவியங்களுக்குத் தெளிவும், எழிலும் ஊட்டுகின்றன. இதனால், அவற்றின் அனுபூதித் தன்மையும், தெய்வீகப் பொலிவும் மிகுதிப்படுகின்றன.

ரோமில் புதுமைபாணிக் கலையில தீவிரமாகப் பணியாற்றிய கலைஞர்களில் தலைசிறந்தவர்கள் வடஇத்தாலியிலிருந்து வந்தவர்கள். டிரெண்டோவைச் சேர்ந்த ஆண்டிரியா போசோ இந்த வரிசையைச் சேர்ந்தவர். போசோ ஓர் சங்கப்பாதிரியர். அவர் 1668இல் புனித இக்னேசியஸ் தேவாலயத்தின் மையமண்டபத்தின் சுவரோவிய வேலைப்பாடுகளைத் தொடங்கினார். இந்தச் சுவரோவியங்கள், இயேசுச் சங்க நிறுவனரின்

(தொடர்ச்சி III பக்கம் பார்க்க)

ஆர்னால்டு பிரஷோன் தெ லாவெர்க்னீ

ஃபிரெஞ்சு கலைத் திறனாய்வாளர்; வரலாற்றறிஞர்; பாரிஸில் லூவர் அருங்காட்சியகக் காப்பாளர்; இவர் புதுமைக் கலை - வியர் பற்றி பல காட்சிகள் அமைத்துள்ளார்; லூவர், பிற ஃபிரெஞ்சு அருங்காட்சியகங்களுக்காகப் பல அட்டவணைகள் எழுதியுள்ளார். 'லா பெய்ன்தியூர் இத்தாலியன் து 17 சியக்லெ" (1979: "இட்டாலியன் பெயிண்டிங் ஆஃப் தி 17த் செஞ்சுரி") எனும் நூலும், பழங்கால, இன்றைய ஓவியர் பற்றியப் பல கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

புதியதொரு தன்வெளிப்பாட்டு வடிவம்

லியோப்போல்டோ ஜியா

"புதுமைப்பாணிக்கலை'' என்பது, வாழ்க்கை, மனிதகுலம் பற்றிய ஒரு தனிவகைக் கோட்பாட்டிலிருந்து தோன்றிய பண்பாட்டு வெளிப்பாட்டின் .வடிவங்களைக் குறிக்கும் ஒரு சொல்லாகும். கிரேக்கத் தொன்மையில் வேரூன்றி, மனிதனைப் பற்றிய கிறித்தவக் கண்ணோட்டத்திலிருந்து வேறுபட்ட மறுமலர்ச்சி இயக்கம், மனிதகுலம் பற்றிய ஒரு புதிய கோட்பாட்டினை உருவாக்கியது. மத்திய கால மனிதன் தன்னை இறைவனின் படைப்பாகவும், இறைவனின் ஊழியனாகவும் கருதினான். இந்தக் கொள்கையை மறுமலர்ச்சிக் கால மனிதன் அடியோடு ஏற்க மறுத்தான். கடந்த காலத்துடன் தனது தொடர்புகள் அனைத்தையும் அறுத்துக்கொள்ள விரும்பினான். புதியதொரு வழியை வகுத்துக்கொள்ள விழைந்தான். ஃபிரெஞ்சுத் தத்துவஞானி ரெனே டேக்கார்ட்டே பின்னாளில் கூறியது போல், மனிதன் தனது தலைவிதியைத் தானே நிருணயித்துக்கொள்ளும் சிற்பியாக இருக்க வேணடும்'' என எண்ணினான்.

எனவே, ஐரோப்பாவில் புதுமைப் பாணிக்கலை ஓரளவுக்கு பகுத்தறிவு வாதத்துடன் தொடர்புடையதாக இருந்தது. அது ஓர் அழகியல் நிகழ்வாக மட்டும் இருக்கவில்லை. இதன் தெள்ளத்தெளிவான வேறுபாடு, கொள்கைகளின் மாறுபாடு, சிக்கலான வடிவங்கள் ஆகியவை, இயேசு சங்கத்துப் பகுத்தறிவு வாதத்துடனும், பல்லுயிரும் தன் பல்வேறுபாடாகக் கொண்டு அவற்றின் பரப்பும் நினைவுத்திறங்களும் தன் பண்புகளாகவுடைய ஓர் எல்லையிலாப் பொருளே இயலுலகின் மூலம் என்னும் ஸ்பைனோசாவின் அடிமூல ஒருமைக் கோட்பாட்டுடனும் இணைவுடைய வாழ்க்கை பற்றிய ஒரு மனப்போக்கினை பிரதிபலித்தன. ஒரு கலை நிகழ்வு என்ற முறையில், இது பல்வேறு வெளிப்பாட்டு வடிவங்கள் தோன்றுவதற்கு வழிவகுத்தது. இவற்றுள், ஸ்பானிய புதுமைப் பாணிக் கலையானது பொதுவாக புதுமைப் பாணிக்கலையின் தோற்றுவாயாக இருக்கும் எனத் தோன்றுகிறது.

கடலுக்கு அப்பால் அமெரிக்கா இருந்தது. ஸ்பானிய அரசர்களின் கணணும் கருத்தும் அதன்மீதே இருந்துவந்தன. 16ஆம் நூற்றாண்டில், சிவப்பிந்தியர்களை மனிதப் பிறவிகளாகச் கருதுவதா, கூடாதா என்ற சர்ச்சை எழுந்தது. அப்போது லத்தீன் அமெரிக்காவில் வாழும் மக்கள் மனிதர்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்றும், அதனால் மனிதகுலத்தில் மிக உயர்ந்தவர்களுக்கு ஊழியர்களாகவும், அடிமைகளாகவும் இருப்பதற்கே அவர்கள் தகுதியுடையவர்கள் என்றும் ஸ்பானிய வரலாற்றாசிரியர் ஜீவான் ஜினஸ் டி செபுல்வெடா எனபவர் கூறிய கருத்தே மேலோங்கியிருந்தது.

இவ்வாறு தாஙகள் மனிதர்கள் என்பதே கேள்விக்குறியாகிவிட்ட நிலையில், ஆதிக்கம் பெற்ற பண்பாட்டினால் தம்மீது திணிக்கப்பட்ட மாதிரிகளை அப்படியே மறுபெயர்ப்பு செய்ய வேண்டிய கட்டாய நிலையிலிருந்த ஐபெரோ - அமெரிக்கக் குடியேற்றங்களின் மக்கள், படிபபடியாகத தங்கள் தற்பண்பினை உணரலானார்கள். ''நான் யார்?''எனக் கேள்வி எழுப்பி, நானும் மனிதன்தான்'' என விடை கூறும் மனத் துணிவினைப் பெற்றார்கள்

16ஆம் நூற்றாண்டில், லத்தீன் அமெரிக்காவில் நிலவிய கலப்பினப் பண்பாடு, பெருநகர முன்மாதிரிகளின் படிவமாகவே இருந்தது.

இடதுபுறம்: 17ஆம் நூற்றாண்டின ஸ்பானிஷ் மொழியின் மாபெரும் புதுமைக் கலைவாணர்களில் ஒருவரான பெண் கவிஞர் ஜுவானா இனஸ் தெ லா க்ரூஜ் (1648 அல்லது 1651)யின் உருவப்படம் இவரது கவிதை மற்றும் நாடகங்கள் சமயச்சார்புடைய, சமயச் சார்பற்றவைகளாகும். அவற்றுள் குறிப்பிடத்தக்க சிறப்புத் தன்மை வாய்ந்தவை காதற் கவிதைகளாகும்.

ஒளிப்படம் © ராஜால மிக்ஸ், பாரிஸ்

படிப்பகம்

www.padippakam.com

ஒளிப்படம் : கால் மூலியர் © செதரி, பாரிஸ்

டெப்போட்ஸோட்லானிலுள்ள இந்த இயேசுசபை ஆலயம்மேலே மெக்ஸிக்க குடியேற்றக் காலப் புதுமைக்கலைக்கு ஓர் அரிய எடுத்துக் காட்டு, 1760-62 இல் இது கட்டப்பெற்றபோது ஒப்பனை அலங்காரம் பெருகிய போதிலும், அங்குள்ள கலைஞரின் உணர்ச்சிப் புதுமை வளம் குறையவில்லை. (டோனான்ட்ஸின்ட்லா மரியன்னையின் ஆலய அலங்காரம் காணப் பின் அட்டை பார்க்க) மேலே வலப்புறம்: டெப்போட்ஸோட்லானில் மியூசியோ டெல்விரை நாட்டோவிலுள்ள கன்னி மரியின் சிலை. இதில் ஸ்வானிய-அமெரிக்க சிற்பத்தின் எழிலைக் காணலாம்.

அடுத்த நூற்றாண்டில் ஐபீரியத் தீபகற்பத்திலிருந்து முன்மாதிரிகள் வந்து கொண்டிருந்தன. புதுமைப் பாணிக்கலைதான் அந்த மாதிரியாகும். அதில் ஸ்பானிய உயிரோட்டம் வெளிப்பட்டது. மாறுபட்ட பண்பியல்புகள் கொண்ட இந்த வகைக் கலை வெளிப்பாடு, லத்தீன் அமெரிக்க மக்கள், தங்களை அறியாமலே, தங்களுடைய தற்பண்பினை வெளிப்படுத்துவதற்கு உதவியாக இருந்தது. இவ்வாறாக, லத்தீன் அமெரிக்காவின் அற்புதமான புதுமைப் பாணிக்கலை தோன்றியது. அது அதைத் தோற்றுவித்த மக்களின் தற்பண்பினையும் பிரதிபலித்தது. இந்தக் கலைக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது, மெக்சிக்கோவில் பியூப்லாவிலுள்ள டோனாண்ட்சிண்ட்லாவிலிருக்கும் குட்டித் தேவாலயமாகும். இதில். தெய்வக் குழந்தைகளும், புனிதர்களும் சிவப்பிந்தியர்களின் முகங்களுடன், கைகளில் மலர்களும், காணிக்கைப் பொருள்களும் ஏந்தியவாறு சித்திரிக்கப்பட்டுள்ளனர், லத்தீன் அமெரிக்கா முழுவதிலும் காணப்படும் மற்ற புதுமைப்பாணிக் கலை வேலைப்பாடுகளிலும் இதனைக் காணலாம்.

ஆனால் இந்தக் கலைப் படைப்புகளின் உண்மையான தகுநிலை என்ன? இவை புதுமைப்பாணிக்கலையின் அச்சுப்படிவமாக இல்லை என்பதால், இவற்றை மட்டமான படிவங்கள் என்று கருதிவிடலாமா?

இவை, மூலமாதிரியைப்போல் அப்படியே அமையவில்லை, அதிலிருந்து மாறுபட்டிருக்கிறது என்ற காரணத்தாலேயே மட்டமான படிவங்களாகக் கருதப்படுகின்றன. அப்படிப் படியெடுத்தவர்கள் அதற்குப் பெரும்பாடுபட்டிருந்துங்கூட இவை முன்மாதிரியின் திரிபு வடிவம் எனக் கருதப்படுகின்றன. மூலமாதிரியைக் கலைஞர்கள் அப்படியே படியெடுக்கவில்லை என்ற காரணத்தால், அவர்களுடைய படைப்புகள் குடியேற்றப் பண்பாட்டிற்குப் புறம்பானதாகவும், அதனைக் சீர்குலைப்பதாகவும் கருதப்பட்டன.

லத்தீன் அமெரிக்காவில் பொது மக்களிடம் பண்பாட்டினைக் கொண்டு சேர்க்கும் ஒரே ஊடமாக விளங்கியது தேவாலயம். திருச்சபையினர் அடக்குமுறைப் போக்குடன் நடந்துகொண்டபோதிலும், அந்தப் பகுதி மக்களின் இயல்பினையும் உண்மை நிலையினையும் ஆராய்ந்தறிவதில் ஆர்வங்காட்டினர். 16ஆம் நூற்றாண்டு ஃபிரான்சிஸ்கன் மடத் துறவிகளைப் போலவே, 17ஆம் நூற்றாண்டு முதற்கொண்டு இயேசு சங்கத்தினரும் லத்தீன் அமெரிக்க மக்களின் இயல்புகளையும், அவர்களின் சுற்றுப்புறச் சூழல்களையும் பிரதிபலிக்கும் கலை வடிவங்களை ஆராய முற்பட்டனர்.

(தொடர்ச்சி IIIஆம் பக்கம் பார்க்க)

லியோப்போல்டோ ஜியா மெக்ஸிக்க தத்துவ அறிஞர்; கட்டுரையாளர்; மெக்ஸிக்கோ நகரிலுள்ள தன்னா சித் தேசியப் பல்கலைக்கழகத்தில் தத்துவரலாற்றிலும், அமெரிக்க கருத்துகளின் வரலாற்றிலும் பேராசிரியர்; லத்தீன் அமெரிக்கப் பண்பாட்டின் ஆராய்ச்சியையும் வரலாற்றையும் பற்றிப் பல நூல்கள் எழுதியுள்ளார், தி லாட்டின் அமெரிக்கன் மைண்டு' (1963), 'லாட்டின் அமெரிக்கா அண்டு தி வேர்ல்டு (1969) இவருடைய ஆங்கில நூல்களுள் சில. இவை இரண்டையும் ஒக்லஹோமா பல்கலைககழக அச்சகம் வெளியிட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

துப்பாக்கி ஏந்திய வானதூதன்

மிகேல் ரோஜாஸ் மிக்ஸ்

பகட்டான தேவதைபோன்ற உருவம்; இருபுறமும் அன்னத்தின் இறகுகள்; தோகை செருகிய அகன்ற விளிம்புடைய தொப்பி. இது, லத்தீன் அமெரிக்க புதுமைப்பாணிக் கலையில் அடிக்கடிச் சித்திரிக்கப்படும் ஒரு வடிவம். அது தங்கத்திலும், வெள்ளியிலும் இழைக்கப்பட்ட அலங்கார ஆடைகளை அணிந்திருக்கும்; கையில் ஒரு பழங்காலத் துப்பாக்கியை ஏந்தி நிற்கும்.

இந்தத் ''துப்பாக்கி ஏந்திய தேவதை''யை ஆண்டீயன் ஓவியங்களில் தான் காண்கிறோம் என்றாலும், இதனை லத்தீன் அமெரிக்காவின் புதுமைப்பாணிக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகக் கருதலாம். இது அற்புத நாடகக் கலையின் ஒரு வடிவம். ஆண்டவன், அரசன் இருவரின் ஆதிக்கத்தைச் சிவப்பிந்தியர்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்யவும், சமயத்தாலும், ஆயுத வலிமையாலும் குடியேற்ற ஆதிக்கச் சமுதாயத்தின் ஓர் அங்கமாக இந்த உருவத்தை ஒருங்கிணைக்கவும் செய்யும் நோக்கத்துடன் இது உருவாக்கப்பட்டது.

மனித இனங்களின் கலப்பு இந்தப் பாணிக் கலையின் முக்கியமான நுதல்பொருளாகும். இதில் மக்கள், அவர்களின் தோற்றம், நிறம் ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றனர்.

லத்தீன் அமெரிக்க புதுமைப்

படிப்பகம்

www.padippakam.com



பொலீயாவில் லா பாசிலுள்ள புனித ∴பிரான்சிஸ்குவின் ஆலயம்; ஆண்டீஸ் பகுதி புதுமைக் கலைக்கோர் எடுத்துக்காட்டு; 1743இல் எழுப்பப் பெற்றது. மனித, விலங்கு உருவ வேலைப்பாடுகள் இந்த லத்தீன் அமெரிக்க கட்டடக்கலையில் காணப் படும். மேலே: ஈக்வடாரில் குயிட்டோ விலுள்ள லா காம்பானியா எனப்படும் இயேசு சபை ஆலய முகப்பு. 1765இல் முடிக்கப்பெற்ற இவ்வாலயத்தில் நிருகிய தூண்களும், பிற ஸ்பானிய, இத்தாலிய இயல்புகளும் உள்ளன. உட்புறம் வட்டாரக் கலையியல்புடன் அரிய பொன்மயமான மரச் செதுக் கோவியங்கள் உள்ளன.

பாணிக்கலை. தனிநபர்களிடமும், வரலாற்றின் போக்கிலும் அழிக்க முடியாத முத்திரைகளைப் பதித்துச் சென்றிருக்கிறது. இன்றுங்கூட பல எழுத்தாளர்கள், தங்களை புதுமைப் பாணிக் கலைச் சார்பு எழுத்தாளர்களாகக் கூறிக்கொள்கிறார்கள். உண்மையில், புதுமைப்பாணிக் கலை என்பது, புதிய உலகின் கலையேயாகும். ஓர் அரபுச் சாயல் வாய்ந்த ஐபீரிய அம்சமும், சிவப்பிந்திய மற்றும் கறுப்பர் அம்சங்களும் ஒருங்கிணைந்து, இந்தோ-ஹிஸ்பானிக் பாணி என்ற புதிய தனிவகைப் பாணியாக உருவெடுத்தது. இதனை வட்டார பண்புகளுடன் ''ஆண்டீயன் புதுமைப் பாணிக்கலை'' அல்லது ''பாப்லானோ புதுமைப் பாணிக்கலை'' என்றும் அழைப்பர்,

இந்த பாணிக்கலை சமயச்சார்புடையது. இதனை ''ஏழைகளின் விவிலியம்'' என்றும் கூறுவர். இந்தக் கலையின் வாயிலாக, சிவப்பிந்தியர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் விவிலியம் சித்திர உருவங்களாகச் சித்திரித்துக்காட்டப்பட்டுள்ளன. புராட்டஸ்டெண்டுகள் எளிமையினையும், ஒழுக்கத்தையும் வலியுறுத்தியதால், அவர்கள் சித்திர உருவங்களைப் பயன்படுத்தவில்லை. ஓவியக்கலையைச் சமயப் பிரச்சாரத்திற்குக் கையாள அவர்கள் முயலவில்லை. வழிபாட்டுத் திருச்சபையினர் (1545-1563) புறச்சமய உருவங்களை எதிர்த்தனர்; இறுதிலிருந்து, கன்னிமேரி, போப்பாண்டவர் ஆகியோரின் உருவங்களை வரைவதை ஆதரித்தனர். புனிதர்களின் உருவங்களை ஓவியமாகத் தீட்டிச் சமயப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துவதை ஆதரித்தனர். புனிதர்களை அவர்களுடைய தியாகச் செயல்களைச் சித்திரிக்கும் வகையில் சித்திரிக்கவேண்டும் என அவர்கள் விதிமுறைகள் வகுத்தனர். 1782 வரையில்கூட ஓவியர்களுக்கு இது பற்றிய ஆணைகள் பிறப்பிக்கப் பட்டுவந்தன. இவையெல்லாம் வழிபாட்டுத் திருச்சபையினரின் விதிமுறைகளை அடியொட்டியே அமைந்திருந்தன,

சிவப்பிந்தியர்கள்' தங்களுடைய புதிய சூழ்நிலையை ஏற்கும்படி செய்வதற்குப்புதுமைபாணிக்கலை சிறந்த சாதனமாக விளங்கியது. பண்டையக் கலை மிதமானது; சமநிலை வாய்ந்தது; பொதுவிதி முறைகளை அடிப்படையாகக் கொண்டது; உலகளாவிய நோக்கில் அமைந்தது; அதில் உருவங்கள் பகட்டாரவார நோக்கில் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஆனால், புதுமைப்பாணிக்கலை இதற்கு நேர் மாறானது. ஒழுங்கமைதியும், நிதானமும் சித்திரிக்க முடியாத, உணர்வுகளையும், சோகங்களையும், பரவசங்களையும், நம்பிக்கைகளையும் இது சித்திரிக்க வல்லது. அனுபூதியுணர்வுகளை இது சித்திரிப்பது, அன்றாட வாழ்வுடன் வெகுவாக ஒத்திருக்கிறது. அது உண்மை வாழ்விலிருந்தே தனது மாதிரிகளை எடுத்துக்கொள்கிறது. அதில் சித்திரிக்கப்படும் இயேசுவின் உருவங்கள் மானுடச் சோக நாடகத்தின் புனித நடிகர்களாகக் காணப்படுகின்றன. மரத்தில் செதுக்கப்பட்டுள்ள இயேசு வடிவங்களில் மனித உடலின் இயல்பான வண்ணமே பூசப்பட்டுள்ளது. அந்த உருவங்களின் தலை முடியும், கண்களும், இமைகளும், புருவங்களும், ஆடைஅணிகளும் ஓர் இயல்பான மனிதனுடையதைப் போல்வே உள்ளன. ''துயரங்களின் கிறிஸ்து'' என்ற ஓவியத்தில், சோகத்தின் முழு வடிவமாகவே இயேசு தீட்டப்பட்டுள்ளார். உருவம் இரத்தத்தில் தோய்ந்திருக்கிறது. அதைப் பார்க்கும் போது, இயேசுவின் உடலில் பட்ட காயங்கள் தங்கள் உடலில்பட்டுள்ளது போன்ற வேதனையைப் பார்ப்பவர்கள் உணர்கிறார்கள். உடலும், முகமும் ஆழ்ந்த வேதனையில் திரிபடைந்து காணப்படுகின்றன. அத்துணை இயல்பாக வேதனை சித்திரிக்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் வேதனையுடன் ஒப்பிடும் போதும் தங்களுடைய வேதனை அற்பமானது என்று சிவப்பிந்தியர்கள் நினைக்கும்படி செய்யும் நோக்குடன் இவ்வாறு தீட்டப்பட்டுள்ளது.

லத்தீன் அமெரிக்க புதுமைப் பாணிக்கலை தொடக்கக்காலத்தில் முற்றிலும் ஐரோப்பியப்பண்புகளுடனேயே அமைந்திருந்தது. 16, 17ஆம் நூற்றாண்டு ஓவியங்களில் பெரும்பாலானவை, புதிய உலகுக்காக ஐரோப்பிய ஓவியர்களால் தீட்டப்பட்டவை அல்லது ஐரோப்பாவிலிருந்து கொணரப்பட்ட செதுக்குருவங்களின் படிகள். எனினும், இவற்றில்கூட சில பாணிகளின் கலவையினைக் காணலாம். தேவாலயங்களுக்கான வடிவமைப்புகள் ரோமானிய அல்லது ஸ்பானிய முறையில் அமைந்திருந்தன. எனினும், அவை கட்டிட வடிவில் உருவாக்கப்பட்ட போது, பெரும் மாற்றங்களுக்குள்ளாயின. ''ஸ்பானிய மறுமலர்ச்சி பாணி'' என்பது ஒரு கலவைப்பாணியேயாகும்.

உள்நாட்டு ஓவியர்கள் தோன்றி லத்தீன் அமெரிக்க புதுமைப்பாணிக் கலையின் இரண்டாம் கட்டத்தைத் தொடங்கிவைத்தார்கள். இந்தக் கலைக்கான எண்ணங்களும், படைப்புகளும் தொடர்ந்து இறக்குமதியாகி வந்த போதிலும் சில குறிப்பிட்ட நுதல்பொருள்களில் செய்யப்பட்ட மாறுதல்களும், அளிக்கப்பட்ட முக்கியத்துவமும் இக்கலை தற்சார்பு

படிப்பகம்

www.padippakam.com

ஒளிப்படம் © செல்வட் எடிட்டோரியாளா, எல் ஏ குயிட்டோ

பெரு, ஈக்வடார், பொலீவியா ஆகிய நாடுகளின் ஆண்டீஸ் சிற்பங்களில் ஸ்பானிய சமய இயல்புகளுடன் வட்டாரக் கருத்துகளும் இடம்பெறுகின்றன. மேலே: ஈக்வடாரில் குவென்காவிலுள்ள மாசற்ற உற்பவ மடாலயத்தில் கஸ்பார் தெ சாங்குரியா செய்த சிலுவை ஸ்பானிய சிற்ப இயல்புக்கேற்ப கிறிஸ்து பெருமானின் விலாவிலிருந்து குருதி பாய்வதுபோல இது செய்யப்பட்டுள்ளது. வலப்புறம்: குழந்தை இயேசுவின் பெரு நாட்டுச் சிலை; இது தொப்பியும் மேலாடையும் அணிந்து இந்திய உடையில் காணப்படுகின்றது.

ஒளிப்படம் © ரோஜர், லிமா

பெற்றுவந்ததை வெளிப்படுத்தின. உள்ளத்தை உருக்கக்கூடிய கதையை ஒருவகைக் கற்பனை கலந்து சித்திரிக்கும் ஓவியங்களில் இந்தக் காலத்தில் ஆர்வம் இருந்தமையால், இந்தக்கால அளவுக்குரிய கலையை ''பழம் பாணிக் கலை'' என்று அழைத்தனர். இக்கால மரச்செதுக்குச் சித்திரங்கள் சிவப்பிந்தியர்களின் உணர்வு நயத்தைப் புலப்படுத்துகின்றன. இந்தச் செதுக்கோவியங்களில், இயல்புநவிற்சியும், மறைபொருளும் கொலம்பசுக்கு முந்தியகாலக் கொள்கைகள் தொடர்ந்து நீடித்து வந்ததைக் காட்டுகின்றன.

கறுப்புக் கலைஞர்களின் உணர்வு நயம் காரணமாக உருவ ஆய்வியலும் மாற்றியமைக்கப்பட்டது. புதுமைப் பாணிக்கலை (முக்கியமாக மிகுஒப்பனைப் பாணிக்கலை), கறுப்பர்களை ஓர் அலங்கார அம்சமாகப் பயன்படுத்தியது. ஐரோப்பாவில், கறுப்பர் உருவம் ஓர் விளக்கினை ஏந்திநிற்கிறவாறு அல்லது திரையோவியங்களில் குதிரையின் கடிவாளங்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறவாறு சித்திரிக்கப்பட்டன. லத்தீன் அமெரிக்காவில், முதலில் ஆடம்பர உடையணிந்த ஊழியர்களாக அல்லது பல வண்ணக்கோமாளி உடையணிந்த உருவங்களாகக் கறுப்பர்கள் சித்திரிக்கப்பட்டனர். இரு நேர்வுகளிலுமே அந்த உருவங்கள் வனப்பினை மிகைப்படுத்தின. உணர்வு நயம் என்பது தற்பூசனையின் ஒரு வடிவம் தற்பூசனை என்பது ஓர் ஆஃப்ரிக்க அம்சம். பாமர உருக்காட்சிக்கு ஒரு கண்ணியத்தைச் சேர்ப்பதற்கு இந்த அம்சத்தை லத்தீன் அமெரிக்கக் கலையில் புகுத்த வேண்டியதாயிற்று. லத்தீன் அமெரிக்கக் கலைஞர்கள் ஆஃப்ரிக்கர்களாகவோ கலப்பினத்தவராகவோ இருந்தனர். எனவே, அவர்கள் இதனைச் செய்யாமலிருந்திருந்தால், அது சுயமறுதலிப்பாக அமைந்திருக்கும். இவ்வாறாக ஆஃப்ரிக்கக் கடவுளர்கள் மறைமுகமாகப் புனிதர்கள். வழிபாட்டில் புகுத்தப்பட்டார்கள் அப்புனிதர்களின் நிறம் மெல்ல மெல்ல கருநிறமாக சித்திரிக்கப்படலாயிற்று.

எனினும், புதுமைப்பாணிக் கலையில் காணப்படும் லத்தீன் அமெரிக்க அம்சம், மாற்றமைவினாலே, மட்டும் ஏற்பட்டு விடவில்லை கடுந்தீவிர நவீன புதுமைப்பாணிக்கலை லத்தீன் அமெரிக்காவில், முக்கியமாக மெக்சிக்கோவில், பகட்டான நேர்த்தியின் உச்சநிலையை எட்டியது. ஆனால், புதிய உலகில் ஓவியர்கள் பயன்படுத்திய பல கலைப்பண்புகள் அடிப்படையில் வேறுபட்டிருந்தன.

(தொடர்ச்சி III ஆம் பக்கம் பார்க்க)

மிகேல் ரோஜாஸ் மிக்ஸ். சிலி நாட்டவர்; சிலி நாட்டு லத்தீன் அமெரிக்க கலை நிலை நிறுவனமும் முன்னாள் இயக்குநருமாவார். ஃசார்போனின் முன்னாள் பேராசிரியரான இவர் இன்று பாரிஸில் வின்செண் பல்கலைக் கழகப் பேராசிரியர், 'லெரா ஹிஸ்தோரியா நாத்துரல் தெ இந்தியா'' (''இ ட்ரு நேக்சுரல் ஹிஸ்டரி ஆஃப் தி இன்டீஸ்'') எனும் நூலும் சிறுவருக்கான லத்தீன் அமெரிக்க வரலாறும்' வேறு பல நூல்களும் எழுதியுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

ஓ அலெயாதினோவின் வெற்றி

அகஸ்டோ சி. டாசில்வா டெல்லஸ்

பிரேசிலில் 16, 17 ஆகிய நூற்றாண்டுகளில் நிலவிய அல்லது ஐரோப்பாவிலிருந்து அங்கு இறக்குமதியாகிய கட்டிடக் கலையும், மற்றக் கலைகளும், போர்ச்சுகலில் கையாளப்பட்டுவந்த கலை வடிவங்களின் படிவங்களேயாகும். பெர்னாம்புக்கோ மாநிலத்தில் ஆலிண்டாவிலுள்ள மடாலயத்தேவாலயமும், அதே நகரிலுள்ள இயேசுச் சங்க கிரேஸ் தேவாலயமும், பல்வேறு சமய இல்லங்களும், திருச்சபைக் கட்டிடங்களும், கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் போர்ச்சுக்கீசிய பாணி முகப்புகளையும், கலை நுட்ப வேலைப்பாடுகளையும், மற்றக் கட்டிடக் கலை அலங்காரங்களையும் பின்பற்றி அமைக்கப்பட்டன. இந்த அம்சங்கள், 17ஆம் நூற்றாண்டுக் கட்டிடக் கலைகளிலும், கட்டிடங்களிலும் காணப்படுகின்றன. அந்தக் கால அளவின்போது, பிரேசிலின் வட பகுதியை டச்சுக்காரர்கள் ஆக்கிரமித்திருந்த போதிலும் (1630-1653) போர்ச்சுகீசியக் கலை அம்சங்கள் மேலோங்கியே இருந்தன. அந்த நூற்றாண்டின் பிற்பகுதியில், சுருள் வடிவக் கோபுரங்களும், கூர்ங்கோபுரங்களும், மற்ற அலங்கார வேலைப்பாடுகளும், முகமண்டபங்களிலும், பலகணிகளிலும், மணிக்கோபுரங்களிலும் இடம் பெறலாயின. இவை போர்ச்சுக்கீசிய புதுமைப்பாணிக் கலையின் வருகைக்குக் கட்டியங் கூறின. ஆலிண்டாவிலும், இகாரசுவிலும் உள்ள ஃபிரான்சிஸ்கன் மடாலயங்களிலும், சால்வடோரிலுள்ள இயேசுச் சங்கக் கல்லூரித் தேவாலயத்திலும் இதற்கு எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

ஆனால் பிரேசிலுள்ள போர்ச்சுக்கீசிய புதுமைப்பாணிக் கலைக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது "தல்ஹா" என்ற முலாமிட்ட மரச்செதுக்குச் சித்திரங்களாகும். இவை மாதாகோயில்கள், தேவாலயங்கள் ஆகியவற்றின் பலிமேடைகளையும், உயர்ந்த பலிமேடைகளின் முகடுகளையும், சுவர்களையும் அலங்கரிக்கின்றன.

17ஆம் நூற்றாண்டின் இறுதி வாக்கில் முதலாவது போர்ச்சுக்கீசிய புதுமைப்பாணி செதுக்குச் சித்திரங்கள பிரேசிலில் தோன்றின. ஒரே மையமுள்ள கமான்களின் தூண்கள்



மேலே: பிரேசில் குடியேற்ற நாட்டுக் காலக் கலையின் முக்கிய மையமான சால்வடோரில் (பாஹியா மாநிலம்) பெலூரின்ஹோ மாவட்டத்திலுள்ள கார்மல் சமய ஆலய முகப்பு. (இது யுனெஸ்கோவின் உலகமரபுச்செல்வப் பட்டியலில் இன்று இணைக்கப்பட்டுள்ளது). இடப்புறம்: கோயாஸ் மாநிலத்தில் பெர்சப்போலிஸிலுள்ள செபமாலை அன்னை ஆலய மரக் கூரையில் தீட்டப்பெற்ற ஓவியம்.

படிப்பகம்

www.padippakam.com

**பிரேசிலின் மினாஸ் ஜெராய்ஸ் மாநிலத்
திலுள்ள (இன்று யுனெஸ்கோவின்
உலக மரபுச்செல்வப் பட்டியலில்
சேர்க்கப்பட்டுள்ள) ஊரோ ப்ரேட்டோ
எனும் பழைய நகரம் பிரேசிலின் புது
மைக் கலையின் காட்சிப் பெட்டியா
கும். இந்நகர புதுமைக்கலைச் சின்
னங்களுள் புனித அசிசி ஃபிரான்சிஸ்
ஆலயம் சிறப்பு வாய்ந்தது. ஊரோ
ப்ரேட்டோவில் பிறந்த ஓ அலெயாதி
னோ எனப்படும் கலப்பினச் சிற்பியும்
கட்டடக் கலைஞருமான அண்டோனி
யோ ஃபிரான்சிஸ்கோ லிஸ்போவா
(1730—1814) இதைக் கட்டினார்.
வலப்புறம்: நடுப்பகுதியின் தோற்றம்:
வலக்கோடி: மினாஸ் ஜெராயில்
கொங்கோனாஸ் தோ காம்போவி
லுள்ள போம் ஜீசஸ் தெ மாத்தோசின்
ஹாஸ் ஆலயு முகப்பும், மேடையும்,
படிக்கட்டும். இஃது அலெயாதினோ
வின் அரும்படைப்பாகும். 1796—
1799இல் கட்டப்பெற்ற இவ்வாலயத்
திற்கென இவர் இறுதி இரவு உண
வையும், சிலுவைப் பாதைக் காட்சி
களையும் காட்டும் பல்வண்ண மரச்
சிற்பங்களையும் (23ஆம் பக்க வண்
ணப்படத்தில் திருடனின் தலை)
காண்க.**

சுருள்வடிவில் அமைக்கப்பட்டு,
கொடிமுந்திரி இலைகள், தேவதை
கள் உருவங்களால் அலங்கரிக்கப்
பட்டன சுவர்களும், முகடுகளும்
வண்ண ஓவியங்களால் அல்லது
புடைப்புச் சித்திரங்களால் அழகு
படுத்தப்பட்டன. சாவோ பெண்டோ
மடாலயம் (ரியோ டி ஜானிரோ)
சால்வடார் பன்முகத்தேவாலயம்,
ரெசிஃபே புனித ஃபிரான்சிஸ்
தேவாலயம் ஆகியவற்றின் செதுக்
குச் சித்திரங்கள் இவற்றுக்குச்சான்று
கள்.

எனினும், 1730களில், தேவாலயங்
களின் பலி மேடைகளிலும் மற்றப்
பகுதிகளிலும் அலங்காரச் செதுக்குச்
சித்திர வேலைப்பாடுகளில் முக்கிய
மாற்றங்கள் ஏற்பட்டன. கோடு
களையும், மேற் பரப்புகளையும்
இடைமறித்துப் புடைபெயர்ச்சித்
தோற்றத்தை உருவாக்கும் நோக்கத்
துடன் இந்த மாறுதல்கள் அமைந்
தன. ரியோ டி ஜெனீரோவிலுள்ள
சாவோ ஃபிரான்சிஸ்கோ தேவால
யத்திலுள்ள மேல்விதானங்களும்,
மாபெரும் செதுக்குருவங்களும் திருகு
சுவர்களும் இவற்றுக்கு எடுத்துக்
காட்டாகும்.

அது முதற்கொண்டு, போர்ச்சு
கலைப் போலவே, பிரேசிலிலும்
இத்தாலியக் கட்டிடக் கலைஞர்
போரோமியோவின் பாணியைப்
பின்பற்றி கட்டிடங்களின் வடி
வமைப்பும் வடிவளவும் அமைய
லாயின. நீள்கூரான பலகோண
வடிவங்களும், முட்டை வடிவங்
களும் சுவர்களை அலங்கரிப்பதற்கும்,
முகப்புகளை அழகுபடுத்த செங்குத்
தான வடிவங்களும் பயன்படுத்தப்பட
லாயின.

இந்தப் பாணியில் கட்டப்பட்ட
தேவாலயங்களில் கிளோரியாடி
ஊட்டிரோ (ரியோ டி ஜெனீரோ)
முக்கியமானதாகும். இது விரிகுடா
வின் அருகிலுள்ள ஒரு குன்றின் உச்சி
யில் கட்டப்பட்டுள்ளது. இது நீள்
கூரான இரு எணகோண வடிவங்



படிப்பகம்

www.padippakam.com



ஒளிப்படங்கள் பெத்ரோ லோபோ, ஃபாபா, ரியோ டி ஜெனீரோ

களில் அமைந்துள்ளது. ரெசிஃபே யிலுள்ள சாவோ பீட்ரோ தேவாலயமும், சால்வடாரிலுள்ள கான்சிகாவோ டி பிராயா தேவாலயமும் இவ்வகையைச் சேர்ந்தவை. ஊரோ பிரிட்டோவிலுள்ள அவர் லேடி பில்லர் தேவாலயம் இன்னொருவகையில் சிறப்புடையது. இதிலுள்ள பல கோண மரச் செதுக்கு வடிவங்கள் தனியாக உருவாக்கப்பட்டு செவ்வகக் கட்டிடத்தினுள் செருகப்பட்டுள்ளன

சால்வடோரில் 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்ட புனித ஃபிரான்சிஸ் தேவாலயம் போர்ச்சுகீசிய புதுமை பாணிக் கலைக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாகும். இதன் முகப்பு முற்றிலும் மணற்கல் செதுக்குச் சித்திரங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டிடக்கலையும், மரச்செதுக்குச் சித்திர வேலைப்பாடும், மிகுஒப்பனைக் கலைப்பாணியில் அமையலாயின. பாகியா, ரியோ டி ஜெனீரோ மாநிலங்களில், மிக அழகிய வேலைப்பாடுடைய முலாமிட்ட செதுக்குச் சித்திரங்களில் மிகு ஒப்பனைக் கலைப் பாணியைக் காணலாம். காய்சோய்ராவிலுள்ள கார்மலிட்டிஸ் தேவாலயம், சால்வடாரிலுள்ள கார்மலைட் தேவாலயம், சாண்டிஸ்மோ சாக்ரமெண்டோ மாதாகோயில்கள் ஆகியவற்றிலுள்ள சிற்பங்கள் இவற்றுக்கு எடுத்துக்காட்டு.

வடகிழக்கில், ரெசிஃபோ, ஆலிண்டா ஆகியவற்றைச் சுற்றி, முகப்பு மண்டபங்களின் கட்டுமானத்தில், புதுமைக் கலைப்பாணி, மிகுஒப்பனைக் கலைப்பாணி ஆகியவற்றின் செல்வாக்கினால், உயிர்த்துடிப்பு புகுத்தப்பட்டது. வடகிழக்குப் பிரேசிலில் இந்தக் காலத்திய கட்டிடக் கலைக்கு ஆலிண்டா சாவோ பெண்டோ மடாலயத் தேவாலயமும், ரெசிஃபேயிலுள்ள கார்மலைட் தேவாலயமும், இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்

ஆனால், மினாஸ் ஜெராய்ஸ் மாநிலத்தில்தான் புதுமைக் கலைப் பாணியும், மிகுஒப்பனைக் கலைப் பாணியும் கட்டிடக்கலையில் விரிவான பாதிப்பினை உண்டாக்கின. முக்கியமாக, தேவாலய முகப்பு மண்டபங்கள், வடிவமைப்புகள், வடிவளவுகள், செதுக்குச்சித்திரங்கள், இடைவெளிப்பயன்பாடுகள் ஆகியவற்றில் "ஓ அலெயாதினோ" என அழைக்கப்படும் சிறந்த கட்டிடக் கலைஞரும் சிற்பியுமான அண்டோனியோ ஃபிரான்சிஸ்கோ லிஸ்போ (1730-1814) என்பார், இந்தப்பாணிகளை விரிவாகக் கையாண்டார். இந்தப் பகுதியின் நிலவியல் அமைப்பு காரணமாக, இங்கு போர்ச்சுக்கீசியச் செல்வாக்கு அதிகமாகப் பரவவில்லை. அதனால், இங்கு தேவாலய, மடாலயக் கட்டிடக்கலைகள் போர்ச்சுக்கீசியச் செல்வாக்கின்றி ஓரளவுக்குத் தற்பண்புடன் மலர்ந்தன.

ஊரோ பிரீட்டோவிலும், சாவோ ஜாவோ டெல் ரேயிலுமுள்ள ஃபிரான்சிஸ்கன் தேவாலயங்களும், ஊரோ பிரீட்டோவிலுள்ள கார்மலைட்டு தேவாலயமும் இந்த காலத்தைச் சேர்ந்தவைகளில் தனிச்சிறப்பு வாய்ந்தனவாகும். இந்தக் கட்டிடங்களில் சில பொதுவான அம்சங்களைக் காணலாம். இவற்றின் வடிவமைப்புகள் பல வளைவுகளையும் நேர்கோடுகளையும் கொண்டவை. இவை வரிசையாக அமையாமல். நீண்ட முனைகளைக் கொண்டிருக்கின்றன.

(தொடர்ச்சி IVஆம் பக்கம் பார்க்க)

அகஸ்டோ சி. டாசில்வா டெல்லஸ்: பிரேசில் நாட்டுக் கட்டடக கலைஞரும வரலாற்றறிஞருமாவார், ரியோ டி ஜெனீரேவில் மத்திய பல்கலைக் கழகத்தில் கட்டடக்கலை, நகரமைப்புத் துறைப் பேராசிரியர்; பிரேசிலின் தேசிய வரலாற்று, கலை மரபுச்செலவ அமைச்சின் தொழில்நுட்ப அறிவுரையாளர்; பன்னாட்டுச் சின்னங்களின் அவைத் துணைத் தலைவர், பண்பாட்டுச் சொத்தைப்பேணிப் புதுப்பிக்கும் பன்னாட்டு ஆய்வு நிலைய (ரோம்) அறிவுரையாளர்; பிரேசிலின் வரலாற்று கலை சின்னங்களின் நிலப்பட ஏடும், பிரேசில் போர்ச்சுக்கீசிய இதழ்களில் வெளிவந்துள்ள. பல கட்டுரைகளும் இவருடைய படைப்புகளில் சில.

படிப்பகம்

www.padippakam.com

ஆர்வமூட்டும் கலை

கிறிஸ்டியன் நார்பெர்க் ஷுல்ஸ்

கத்தோலிக்க மத்திய ஐரோப்பாவில் 18ஆம் நூற்றாண்டின்போது, இயற்கைக் காட்சிக் கலைகள் சமயச் சின்னங்களால் நிறைவு பெற்றிருந்தன. சாலையோரச் சிலுவை இயேசு உருவங்கள், ஜான் நெப்போமக் என்ற புனிதரின் சிலைகள், சிலுவைக் காட்சிகள், புனிதப்பயணத் தேவாலயங்கள், ஏராளமான புதிய மடாலயங்கள் இவற்றில் மிகுதியும் இடம் பெற்றன. இவ்வாறு, இக்காலத்திய கட்டிடக்கலை அன்றைச் சுற்றுப்புறச் சூழலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. ''உண்மைச் சமயத்தை'' மனிதருக்கு உணர்த்தும் ''புனித இயற்கைக் காட்சி''களாகக் கட்டிடங்களை மாற்றுவது இக்கலையின் நோக்கமாயிற்று.

இந்த நோக்கத்திற்கேற்ப, இவ்வகைக் கலை மற்றும் கட்டிடக்கலையின் படைப்புகள், உணர்ச்சிப்பெருக்கும், சமயத் தூண்டுதலும் உடையனவாக அமைந்தன. சமயப் பரவசத்தின் மெய்ப்பாடுகள், தேவாலயங்களின் தீப்பிழம்பு போன்ற கோபுரங்களிலும், உட்கவிகை மாடங்களிலும் மிகத் தெளிவாகச் சித்திரிக்கப்பட்டன. மேட்டுக் குடியினரின் அரண்மனைகளிலும் இத்தகைய வேலைப்பாடுகளைக் காணலாம். அரசர்கள் ''ஆண்டவன் அருளால்'' அரச பதவி பெற்றவர்கள் என்பதால், அடிப்படைச் சமய நெறிகளுக்கு அவர்களும் அடிபணிந்து நடக்க வேண்டியிருந்தது.

பொதுவாக, புதுமைப் பாணிக் கலையும், கட்டிடக்கலையும் எதிர் சீர்திருத்த இயக்கத்தினால் தோன்றியது எனலாம். காரண காரிய முறையான ஒருசில மாற்றமுடியாத சமயக் கோட்பாடுகளிலிருந்து உய்த்துணரக் கூடிய ஓர் அமைப்பாக உலகைக் கருதவேண்டும் என்று 17ஆம் நூற்றாண்டில் நிலவிய மனப்போக்கு இதற்கு அடிப்படையாக அமைந்தது. எதிர் சீர்திருத்த இயக்கக் கொள்கையின்படி, இந்தச் சமயக்கோட்பாடுகள், இயன்ற அளவுக்குத் தெளிவாகச் சித்திரிக்கப்பட வேண்டும். திருச்சபைக் கொள்கை நடைமுறை வகுப்பும் பேரவைக் கூட்டத்தில். ''ஓவியங்களிலும். மற்றக் கலைகளிலும் சித்திரிக்கப்படும் நமது மீட்டளிப்பு மர்மக் கதைகளின் வாயிலாக, நமது சமய நெறிமுறைகள் மக்கள் மனதில் என்றும் சுழன்றுகொண்டே இருக்குமாறு செய்தல் வேண்டும். இவ்வகைச் சமய போதனையை மேற்றிராணியர் மிகக் கவனமாகக் கையாள வேண்டும்'' என முடிவெடுத்தது.

இவ்வாறாக, சமயத்தில் பங்கு பெறச் செய்வதற்கு அடிப்படை வழிமுறையாகச் சமயத்தூண்டல் அமைந்தது. இந்த அணுகுமுறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டினைப் புனித இக்னேசியஸ் லயோலாவின் ''ஆன்மீகப் பயிற்சிகளில்'' காணலாம். கற்பனை தொலையுணர்வு வாயிலாக இயேசுவை உருவகித்துக் காட்டுவது இதன் நோக்கமாகும். புதுமை பாணிக் கலையைப் பரப்புவதில் இயேசுச் சங்கத்தினர் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு வழிமுறை என்ற வகையில் கற்பனை மூலமாக இந்த உலகம் ஒரு நாடகமேடையாக மாற்றப்படுகிறது; அதில் தேவாலயங்களே காட்சி அரங்குகள்; அவற்றில் சமய நெறிமுறைகள் காட்சிகளாக நடிக்கப்படுகின்றன. இவ்வாறு, புதுமைப் பாணிக் கலையின் உருவ மற்றும் அருவத்தன்மை வெளிப்படுத்தப்படுகிறது. திருச்சபைப் பேரவை வகுத்த நெறிமுறைகளுக்கிணங்க, கத்தோலிக்கத் திருச்சபை மையமாகிய ரோமில் புதுமை பாணிக் கலையும் கட்டிடக் கலையில் இரு பாணிகளை வேறுபடுத்திக் காணலாம். ஒன்று, உண்மையான நாடக பாணியில் அமைந்தது. இதனைப் பெர்னினி

படிப்பகம்

www.padippakam.com

இடப்புறம்: செக்கோஸ்லாவியாவில் பிராக் நகரிலுள்ள புனித நிக்கொலாஸ் ஆலய உட்பகுதியும் கவிகை மாடமும் 1703இல் கிறிஸ்டோ∴ப் டீன்சென் ஹோ∴பர் எனும் கட்டடக் கலைஞரால் தொடங்கப்பெற்று பிறகு அவருடைய மகன் கிளியான் இக்னாஸால் முடிக்கப்பெற்று. இது ''ஐரோப்பாவிலுள்ள எழில்மிக்க ஆலயங்களுள் ஒன்றாக''க் கருதப்படுகின்றது.

கீழே: வியன்னாவிலுள்ள (ஆஸ்திரியா) புனித சார்ல்ஸ் ஆலயத்தின் முகப்பு. ஜோஹான் பெர்ன்ஹார்டு ∴பிஷர் வான் எர்லாக் எனும் கட்டடக் கலைஞர் இதை 1715-1737இல் கட்டினார். மத்திய ஐரோப்பிய புதுமைக்கலை முகிழ்த்து பரவுவதில் ஆஸ்திரியா முக்கிய பங்குபெற்றது.

தோற்றுவித்தார். இதில், ஓவியம், சிற்பம் மூலம் கூறப்படும் கதைகளுக்குக் கட்டிடக்கலை அற்புதப் பின்னணியாக அமைக்கப்படுகிறது. இன்னொன்று, கட்டிடக் கலைப் பாணியில் அமைந்தது. இதனைக் கண்டுபிடித்தவர் போரோமினி. இதில், இடப்பரப்பே உணர்ச்சி வெளிப்பாட்டுச் சாதனமாக அமைகிறது.

எதிர் சீர்திருத்த இயக்கத்தின் வெளிப்பாடு என்ற முறையில், மத்திய ஐரோப்பிய புதுமை பாணிக் கலை இருமுக நோக்குடையதாக விளங்குகிறது. முதலாவதாக, அது மக்களை சமய நம்பிக்கைக்குத் தூண்டுகிறது. இதற்குத் தொடக்கமாக, அது உள்ளூர் மரபுகளையும் நம்பிக்கைகளையும் அன்றாட வாழ்க்கையுலகின் அங்கமாக இணைத்துக் கொண்டுள்ளது. சமயத்தின் காப்பாளர்களான மேற்றிராணியர், அரசர்கள் ஆகியோரின் அதிகாரத்தையும் அது நிலைநாட்ட வேண்டியிருந்தது. இவ்விருவரும், மத்திய ஐரோப்பாவில் ஒருவராகவே இருந்தனர். எனவே, மத்திய ஐரோப்பிய புதுமை பாணிக்கலை மக்களைக் கவரக்கூடியதாகவும், அதேசமயம் நேர்த்தி மிக்கதாகவும் எல்லோருடனும் உரையாடும் தன்மை வாய்ந்ததாகவும் விளங்கியது.

எதிர் சீர்திருத்த இயக்கக் கட்டிடக் கலையை, இயேசு சங்கத்தினர் 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் மத்திய ஐரோப்பாவில் அறிமுகப்படுத்தினர். எனினும், முப்பதாண்டுப் போருக்குப் *(1618-1648)* பின்னர்தான், கட்டிடம் கட்டும் பணி முழுஅளவில் தீவிரமடைந்தது. மத்திய ஐரோப்பிய புதுமைபாணிக் கட்டிடக்கலைப் படைப்புகளின் புகழ்வாய்ந்தவை, 18ஆம் நூற்றாண்டிலிருந்து எழுந்தன. லுராகோ, காரட்டி, கார்லோன், மார்ட்டினெல்லி, ஜுக்காலி, அல்லிப்பிராண்டி, புரோகியோ, சாண்டினி போன்ற இத்தாலியக் கட்டிடக் கலைஞர்கள் நாடுவிட்டு நாடு சென்று, கட்டிடக்கலை வரலாற்றில் அழியாப் படைப்புகளை உருவாக்கினார்கள். விரைவிலேயே, ஓரால்பர்க் போன்ற உள்ளூர்க் கட்டிடக் கலைஞர்கள் தோன்றி, உள்ளூர் பாணியையும் இத்தாலியப் பாணியையும் ஒருங்கிணைத்துச் சொந்தப் படைப்புகளைத் தோற்றுவிக்கலானார்கள். உள்நாட்டுக் கலையில் வேரூன்றிய ஒரு கலையை விரும்

படிப்பகம்

www.padippakam.com

ஒளிப்படம் சி. நாபக்ர்ஷுல்ஸ் ஆல் லோ

பிய எதிர் சீர்திருத்த இயக்கத்தினர் இக்கலைஞர்களுக்கு ஆதரவளித்தனர்.

1683 இல் வியன்னா அருகே துருக்கியர்கள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அரசியலில் ஆஸ்திரியாவின் ஆதிக்கம் மேலோங்கியது. அதையொட்டி, மத்திய ஐரோப்பிய புதுமைபாணிக் கலையின் வளர்ச்சியில் ஆஸ்திரியா முக்கியப்பங்கு பெற்றது. இதில் இத்தாலியில் நிலவிய பெர்னினிபாணி, போரோமினிபாணி இரண்டுமே இடம்பெற்றன. வியன்னாவில் எழுப்பப்பட்ட கார்ல்ஸ் கிர்ஷி தேவாலயம் (*1715-1737*) இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இதில் உண்மையிலேயே நாடக பாணி'' கட்டிடக்கலையில் அமைந்தது. ஜோகான் பெர்ன்ஹார்டு பிஷர்வான் எர்லாக் (*1656-1723*) பெர்னினிபாணிக் கட்டிடக் கலையைக் கையாண்டார். ஜோகான் லூக்காஸ்வான் ஹில்டர்பிராண்ட் (*1668-1745*) போலோமினி பாணியைப் பரப்பினார். இவருடைய படைப்புக்கு, துருக்கியரைத் தோற்கடித்த இளவரசர் சாவாய்யூஜினுக்காக வியன்னாவில் இவர் எழுப்பிய அரண்மனை (*1714-1722*) எடுத்துக்காட்டு.

இதற்கிடையில், பவேரியாவிலிருந்து *1686*இல் பிரேசில் குடியேறிய கிறிஸ்டோப் (*1655-1722*), அவரது மகன் கிளியன் இக்னாஸ் (*1689-1751*) இருவரும் பொகிமியாவில் பாமர மக்களைக் கவர்ந்த ஒரு புதுமை பாணிக் கட்டிடக்கலையை உருவாக்கினர். இவர்கள் பெரும்பாலும் சமயக் கட்டிடங்களையே எழுப்பினர். பிரேசிலுள்ள புனித நிக்கோலஸ் தேவாலயம் இவர்களுடைய படைப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டு, இந்தத் தேவாலயத்தை *1703*இல் கிறிஸ்டோப் தொடங்கினார்; அவருடைய மகன் கிளியன் இதனைக் கட்டிமுடித்தார் (*1737-1753*).

கிறிஸ்டோப்பின் தம்பியாகிய ஜோகன் (*1673-1726*) பொகிமிய புதுமைபாணிக் கலையை ஃபிராங்கோனியாவுக்குக் கொணர்ந்தார். பான்ஸ் மடாலயத் தேவாலயம் (*1710-1719*) ஜோகனின் படைப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. மத்திய ஐரோப்பிய புதுமைபாணிக் கட்டிடக் கலைஞர்களின் மிக முக்கியமானவராகப் போற்றப்பட்ட ஜோகன் பால்தசார் நியூமன் (*1687-1753*), ஜோகனிடமிருந்து அகத்தூண்டல் பெற்றவராவார். சமயம் சார்ந்த, சமயச் சார்பற்ற, இராணுவக் கட்டிடங்களில் நியூமன் ஆர்வங்காட்டினார். வியன்சலிகன் தேவாலயமும் (*1742*), நெரஷைம் தேவாலயமும் இவரது படைப்புகளில் சிறந்தவை.

புதுமைபாணிக் கலையின் பிந்திய படைப்புகளில், ஜோகன் மைக்கேல் பிஷர் *1691-1766*), டொமினிக்கஸ் சிம்மர்மான் (*1685-1766*) ஆகியோரின் படைப்புக்கள் புகழ் வாய்ந்தவை வியசில் சிம்மர்மான் எழுப்பிய புனிதப் பயணத் தேவாலயம் (*1744-1754*) மத்திய ஐரோப்பிய புதுமைபாணிக் கலையின் ''வேலைப்பாடுகள் அனைத்தையும் முழுமையாகக் கொண்டது.

(தொடர்ச்சி IV பக்கம் பார்க்க)

மேலே: பவேரியாவில் (ஜெர்மானிய கூட்டாட்சி குடியரசு) வீஸிலுள்ள டொமினிக்கஸ் ஸிம்மர்மான் திருத்தலத்தின் (1744-1754) உட்பகுதி. இது மத்திய ஐரோப்பிய புதுமைக்கலைக்கோர் அரிய எடுத்துக்காட்டு. வலப்புறம்: ''வாழ்வு மர'' வடிவிலுள்ள இந்நடுப் பலிபீடத்தை பர்த்த லோமோஸ் ஸ்டைன்ல் என்பார் ஸ்டாம்ஸ் மடலாயத்திற்காக அமைத்தார்.

கிறிஸ்டியன் நார்பர்க்-ஷுல்ஸ்: *நார்வே நாட்டு கட்டிடக் கலைஞர்; கலைத் திறனாய்வாளர்; நார்வேயில் ஆஸ்லோ கட்டடக்கலைப் பள்ளித் தலைவர்; முக்கிய ஐரோப்பிய, அமெரிக்க, ஜப்பானிய பல் கலைக்கழகங்களில் விரிவுரையாற்றியுள்ளார்; பல நாடுகளில் கல்விச் சங்கங்களின் உறுப்பினர். 'லேட் பரோக் அண்டு ரோக்கோக்கோ ஆர்கிடெக்சா'' (ஃபேபர் அண்டு ஃபேபர், லண்டன், 1980), ' மீனிங் இன் வெஸ்டர்ன் ஆர்கிடெக்சர்'': (ரிசோலி பன்னாட்டுப் பதிப்பகம், நியூயார்க், 1980), ''ஆர்கிடெக்சர்: மீனிங் அண்டு பிளேஸ்'' (நியூயார்க், 1987) இவருடைய ஆங்கில நூல்களுள் சில.*

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

ஸ்லாவ் நாடுகளில் புதுமைக்கலை

ஜார்ஜ் டி. காட்சேவ்

இடப்புறம்: ரஷ்யக் கவிஞர் சைமன் போலோட்ஸ்கியின் (1629-1680) இக் கையெழுத்துச் சித்திரத்தில் புதுமைக் கலை உணர்வைக் காணலாம், 'ரஷ்யக் கழுகு'' எனும் தலைப்புடன் இருதய வடிவிலுள்ள இக்கவிதை அலெக்ஸிஸ் மன்னரின் 30ஆம் பிறந்தநாளின் போது அவருக்கு அர்ப்பணிக்கப் பெற்றது.

ஒளிப்படம் 'லே பரோக் தான் லெ சிவிலிசாசியோன் ஸ்லாவ்' (மாஸ்கோ, 1982) எனும் நூலிலுள்ளது. ©நோவ்கா பதிப்பகம்.

நாடுவிட்டு நாடு செல்லும் கலைஞர்கள், கைவினைஞர்கள் வாயிலாக புதுமைப் பாணிக் கலை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குப் பரவியது. இதற்கு ரஷ்யாவும் விதிவிலக்கன்று. ரஷியாவில் பணியாற்றிய புதுமைப்பாணிக் கலைஞர்களில் எட்டியன் மாரிஸ் ஃபால்கோனட் என்ற ஃபிரெஞ்சுச் சிற்பியும் ஒருவர். இவர், லெனின்கிராடில் மகாபீட்டரின் சிலையை வடித்தார். பார்த்தலோமியோ ஃபிரான்சிஸ்கோ ராஸ்டிரேலி என்ற இத்தாலியக் கட்டிடக் கலைஞர், ரஷ்யாவின் தலைசிறந்த புதுமைபாணிக் கட்டிடக்கலைஞராக விளங்கினார். உக்ரேனிலும், லத்தீன் அமெரிக்காவிலும் எழுப்பப்பட்ட பல தேவாலயங்கள், ரோமிலிருந்த இயேசு சங்கத் தேவாலயத்தை முன் மாதிரியாகக்கொண்டு அமைக்கப்பட்டன.

17ஆம் நூற்றாண்டில் கணிதக் கண்டுபிடிப்புகளும், இன்று அறிவியல் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளும் நாடுகளின் எல்லைகளைக் கடந்து பன்னாடுகளுக்கும் பரவியதைப் போலவே, புதுமைப் பாணிக் கலையும் பிற நாடுகளில் பரவியது.

படைப்புத்திறனைப் பொறுத்த வரையில், ஐரோப்பிய புதுமைப் பாணிக் கலையில் நுண்கலைகளை விட இலக்கியத்தில் ஸ்லாவியர்களின் தொண்டு மிகுதியாகக் காணப்படுகிறது. 16ஆம் நூற்றாண்டில், மிக்கோலாய் சார்சின்ஸ்கி *(1550—1581)* என்ற போலந்துக் கவிஞர், உலகில் மனிதனின் தனிமைச் சோகத்தினையும், சீர்திருத்த இயக்கத்திற்கும், சீர்திருத்த எதிர்ப்பு இயக்கத்திற்குமிடையிலான போராட்டத்தினால் விளைந்த ஆன்மிகத் தேர்வுக்கான தேவையினையும் வெளிப்படுத்தினார்

ஐவன் குண்டலிக் *(1589—1638)* என்ற குரோஷியக் கவிஞர் இயற்றிய 'ஆஸ்மான்' என்ற காப்பியம், இயலுலகினை முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் நோக்கியது. புறஉலக உருக்காட்சிகளின் வாயிலாக கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையிலான பண்பாட்டு சமயப் போராட்டங்களை இது சித்திரித்துக் காட்டியது.

போலந்து உயர்குடிப் பெருமக்களில் பெரும்பாலோரிடம் பொதுவாகக் காணப்பட்ட ஒரு புதுமைப் பாணிக் கலை அம்சம் ''சார்மேஷியப் பண்பு'' என அழைக்கப்பெற்றது. இது, அங்கேரி, ருமேனியா, உக்ரேன் பகுதிகளிலும் எதிரொலித்தது. போர்கள், வாணிகம் மூலமாகத் துருக்கியர்களுடனும், கிரைமிய டார்ட்டார்களுடனும், பாரசீகர்களுடனும் போலந்து மக்கள் கொண்ட தொடர்பு காரணமாகக் கிழக்கு, மேற்கு அம்சங்கள் ஒருங்கிணைவதற்கு வழி ஏற்பட்டது. இதனை, உள்முக அலங்காரங்கள், ஆடையணிகள், பழக்கவழக்கங்கள், பேச்சுக்கலை ஆகியவற்றில் காணலாம். அரசவை நாடக அரங்குகளிலும் புதுமைப் பாணிக் கலையின் செல்வாக்கு ஏற்பட்டது.

பைலோ ரஷியாவிலும், உக்ரேனிலும் தோன்றிய சிறந்த ஓவியங்களில், 17, 18ஆம் நூற்றாண்டுகளில் தீட்டப்பெற்ற ஓவியங்கள் குறிப்பிடத்தக்கவை. புதுமைப்பாணி ஓவியர்களுக்கு விருப்பமான சில உத்திகளை இந்த ஓவியர்கள் கையாண்டபோதிலும், ஓவியம் தீட்டும் பொருள்களை தெய்விகமாகச் சித்திரிக்க இவர்கள் மறுத்தனர். அழகுப்பகுதிகள், காயங்கள், உருத்திரிபுகள் ஆகியவற்றை இவர்கள் முனைப்பாக வரைந்தனர். பூவுடல் மண்ணோடு மண்ணாகிப் போகக்கூடியதாயினும், அழியாத ஆன்மாவின் இருப்பிடம் என்பதால் அந்த உடலை தெய்விகமாகச் சித்திரித்துக்காட்ட அவர்கள் விழைந்தனர்.

தமிழில்: இரா. நடராசன்

ஜார்ஜி ட்மிட்ரிவிட்ச் காட்சேவ் சோவியத் வரலாற்றறிஞர்; கலைத் திறனாய்வாளர்; ரஷ்ய அறிவியல் கழகத்தின ஸலவானிய, பால்கன இயல் நிலைய ஆராய்ச்சியாளர்; "கிரியேஷன், லைஃப், ஆர்ட்'' (1980) ''தி இமேஜ் இன் ரஷ்யன் ஆர்ட்டிஸ்டிக் கல்ச்சர்'' (1981) இவருடைய நூல்களுள் சில.

யுனெஸ்கோ கூரியர், அக்டோபர்- நவம்பர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப் படுகிறது அக்டோபர்-நவம்பரில் ஒரே இதழாக வெளிவரும் [ஆண்டுக்கு 11 இதழ்கள் பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும் கட்டுரைகளையும் 'யுனெஸ்கோ' கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும் போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும் பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

துணை தலைமை ஆசிரியர்: ஓல்கா ரோடல்
நிர்வாக ஆசிரியர்கள்:
ஆங்கிலம்: ஹோவார்ட் ப்ராபின் (பாரிஸ்)
ஸ்பானிஷ்: ஃபெர்னான்டெஸ்-ஸாண்டேஸ் (பாரிஸ்)
ரஷ்யன்: விக்டர் கோ லியச்கோவ்
ஜெர்மன்: வெர்னர் மெர்க்லி (பெர்ன்)
அராபிக்: அப்தல் மேனீம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ்: கஸுவோ அகஸோ (டோக்கியோ)
இத்தலியன்: மரியோ கெய்டேட்டி (ரோம்)
ஹிந்தி: கிருஷ்ண கோபால் (டெல்லி)
ஹீப்ரு அலெக்ஸாண்டர் ப்ரோய்டே (டெல்-அவிவ்
பெர்சியன்: சமத் நௌரினஜத் (டெஹ்ரான்
டச்சு: பல் மோரென் (அண்ட்வெர்ப்)
போர்த்துக்கீஸ்: பெனடிக்டோ சில்வா (ரியோ டி ஜெனீரோ)
துர்க்கியஸ்: மெஃப்ர இல்கசர் (இஸ்தாம்புல்)
உருது: ஹக்கீம் முஹம்மது சையத் (கராச்சி)
கட்டலான்: ஜோன் கார்ரெராஸ் மார்ட்டி (பார்சிலோனு
மலேசியா: பகதூர் ஷா (கோலலம்பூர்)
கொரியன்: லீ குவாங் யங் (சியோல்)
சுவாஹிலி: டெமிஞே ருத்தாயேபெசிப்வா (தார்-எஸ். ஸலாம்)
ஃபிரெய்லி: ஃப்ரெடிரிக் போட்டர் (பாரிஸ்)
கிரேரடோ-செர்ப், மாசிடோனியன், செர் போகிராட்
ஸ்லோவேன்: புனிசாபாவ்லோவிக் (பெல்கிரேட்,
சீனம்: ஷென் குவேஃபென் (பீகிங்)
பல்கேரியன்: பவல் பிஷரெவ் சோஃபிய
கிரீக்: அல்கிஸ் ஆஞ்செலோ
சிங்களம்: எஸ். ஜே. சுமனசேகரா பண்டா (கொழும்பு
ஃபின்னிஷ்; மார்ஜட்டா அக்சனன் (ஹெல்சிங்கி
அமைப்பு வடிவம்: ராபர்ட் ஜாகுமின்
எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியரிக்கே எழுதப்படவேண்டும்.

Edited and Published by M. Mohammed Mustafa for the Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras - 600 031 and Printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras - 600 026.

படிப்பகம்

www.padippakam.com

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமின்றி மணி, நிமிடம், நொடி என கணக்கிலும் கணக்கிட உதவின. காலங்கழிவது கண்டு அஞ்சிய 17 ஆம் நூற்றாண்டு மக்களுக்கு இந்தக் கண்டுபிடிப்புகள் அதிர்ச்சியைக் கொடுத்தன. அந்த அதிர்ச்சியைப் போக்குவது எழுத்தாளர்களின் முக்கிய கடமையாக அமைந்தது.

நாளடைவில் காலத்திடமிருந்த அச்சம் நீங்கியது. காலங்காட்டுங் கருவிகளை வைத்திருப்பதை ஒரு பெருமையாக மக்கள் கருதலானார்கள் இம்மையுலகப் பொருள்களை மதித்துப் போற்றும் மனப்பக்குவம் ஏற்பட்டது. உலகவாழ்வு நிலையற்றதாயினும், வாழும் நாட்களை மகிழ்ச்சியாகக் கழிக்க வேண்டும் என்ற மனப்பான்மை தோன்றியது. அலங்காரக் கல்லறைகள் அவர்கள் வருகையை எதிர்நோக்கியிருக்கும் அதேசமயத்தில், மக்கள் வாழ்நாளை மகிழ்ச்சியோடு கழிக்கக்கற்றுக் கொண்டார்கள். இந்நிலையில்தான் பூவுலகப் பொருள்களையெல்லாம் போற்றிப் புகழும் இலக்கியப்படைப்புகளை புதுமைக்கலை பாணிக் தோற்றுவித்தது. கவிதைகளும், நாடகங்களும், புதினங்களும் படைக்கப்பட்டன. அவற்றின் உட்பொருளைப் புரிந்துகொண்டதால் தான் இந்த உண்மை புலனாகும்.

புதுமை பாணிக்கலை நாடகங்களையும் நாட்டிய நாடகங்களையும் நடித்துக்காட்டும் பொழுதுதான், அதன் ஒளியும், ஒலியும், இசையும் நம் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திடக் காணலாம். ஆனால் இந்த நாடகங்கள் மிக அரிதாகவே நடத்தப்படுகின்றன. நூல்களில் படித்தும், ஒலிப்பதிவுகளில் கேட்டும் நேயர்கள் தங்கள் கற்பனைகளில் தான் அவற்றின் சிறப்பினை அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. மேற்கு ஐரோப்பா முழுவதும் காணப்படும்புதுமைப் பாணித் தேவாலயங்களையும், அரண்மனைகளையும் நேரில் பார்க்கும்போதுதான் அந்தக் கலையின் ஆற்றலும், ஆளுமையும் நமக்குப் புலனாகின்றன.

இவற்றுள் பெரும்பாலானவை போலியானவை என இன்றைய வாசகர்களும், பார்வையாளர்களும் கருதக்கூடும். புதுமைபாணிக்கலைஞர்கள் மற்றும் கவிஞர்களின் படைப்புகள் மிகைப்படுத்தப்பட்டவை எனத் தோன்றக்கூடும்.எனினும், 300 ஆண்டுகளுக்கு முந்திய ஐரோப்பிய உலகின் அதிசயங்களையும், அற்புதங்களையும், இன்பதுன்பங்களையும், இவை வெளிப்படுத்தக்கூடியவை என்பதில் ஐயமில்லை

தமிழில்: இரா. நடராசன்

(பதினேழாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டிடக்கலை அழகும் ஆழ்ந்த புனிதத்தன்மையும் கொண்டு விளங்கின.

வேலன்டியன் பள்ளி ஓவியர்கள் நேபிள்ஸுடன் அடிக்கடி, கடல்வழித் தொடர்பு கொண்டிருந்ததால் அவர்களிடையே இத்தாலிய பதிப்பு இருந்தது. ஃபிரான்சிஸ்கோ ரிபால்டா **(1551-1628)** மற்றும் எஸ்பனுலெடோ என்று அழைக்கப்பட்ட ஜோஸ் டி ரிபெரா **(1591-1652)**—ஆகியோரைக் குறிப்பாகச் சொல்லலாம். இவர்கள் இத்தாலியில் வாழப்போவதாக எண்ணினர்—ஆனால் அங்கே இறந்துவிட்டனர். ஸ்பெயின் முழுவதும் வலுவான யதார்த்தம், அழகிய வண்ணம் ஆகியவை கொண்ட இவரது படைப்புக்கள் ஸ்பெயின் முழுவதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. அவர், புனிதர்கள் மதத் தியாகிகளின் சிறந்த ஓவியங்களைப் படைத்து ஸ்பெயினுக்கு அனுப்பினார். அவரது மாணவர் பாசிகோ டியாகோ வெலக்வெஸ் *(1599-1660)* இவரை அடுத்த தலைமுறையில் பின்பற்றி நான்காம் பிலிப்பின் ஓவியரானார். 'மானம்மிக்க மங்கையர்'' ''நூல் நூற்போர்'' ஆகிய இவரது படைப்புகளில் முற்றிலும் புதிய ஒப்பற்ற நுட்பத்தையும் ஒளி, ஆழ்நிலை அமைப்பையும் அமைத்தார். அவருடைய மட்ரிட் பள்ளியிலிருந்து வந்தவர்கள் அவரது மாணவரான மஜோ, கார்ரெனோ, ரிஸி, கிளாடியோ கோயெல்லோ ஆகியோர், எனினும், ஏறக்குறைய அவரைப் போன்றே நெருங்கியவர் என்று அவரது நண்பர் அலோன்ஸோ கானாவைக் குறிப்பிடலாம், அவர் தலைசிறந்த ஓவியரும் கட்டிடக் கலைஞரும் ஆவார். இந்த இரு பரோக் கலைஞர்களும் மிகையான நோக்குகளையும், அதிக அசைவுகளையும் தவிர்த்து அமைதியான, நுண்ணிய நேர்த்தியை மேற்கொண்டனர். தூரிகை வேலையின் துணிவிலும், ஒளி அமைப்பிலும் இவர்களிடையே குறைவில்லை.

செவில்லைச் சார்ந்த பர்தலோமே எஸ்தபான் முரில்லோ *(1617-1682)* கார்டோபாவைச் சேர்ந்த யுவான் டி வால்டே லீல் *(1622-1690)* ஆகிய இரு மேதைக் கலைஞர்கள் ஸ்பானிஷ் பரோக் பாணிக்கு முற்றுப்புள்ளி வைத்தனர். இருவரும் சமகாலத்தவர் என்றும் இவர்களது அணுகுமுறைகள் வேறுபட்டவை. முரில்லோவிடம் இயல்பான எழில் நேர்த்தி இருந்தது. புனிதர்களைத் தம் காலத்திற்கு ஏற்ப படைக்க விரும்பினார். அவரது படைப்புக்கள் எளிமையாகக் காட்சியளித்தாலும் அவரிடம் நுண்ணிய ஆற்றல் மிக அதிகமாயிருந்தது, இது வால்டெஸ் லீல் படைப்புகளில் காணப்படும் மிகையான அசைவுகள், வீச்சுகள், அழுத்தம் இவற்றுக்கு மாறுபட்டவை. வால்டெஸ் லீலின் ''எலியாஸ் ரதம்'' என்ற ஓவியம்—கார்டோபாவில் உள்ள கார்மலிடாஸ் கல்ஸோடாஸ் துறவி மடத்தில் உள்ளது. இந்த ஓவியம், டெலக்ராயிக்ஸ் — கற்பனையை ஒத்திருக்கிறது.

தமிழில்: எஸ். சம்பத்குமார்

(முப்பத்திமூன்றாம் பக்கத் தொடர்ச்சி)

பெருமையைப் பறைசாற்றுகின்றன. இந்தத் தேவாலயத்தின் முக்கியக் கட்டிடக்கலை அம்சங்களை வடிவமைத்துடன், அந்த மாபெருங் கோயிலின் சுவர்களிலும் கவான்களிலும் தெய்வீக உருவங்களையும் புராணக் கதைகளையும் அற்புத ஓவியங்களாகத் தீட்டினார். காலியின் ஓவியங்களைக் கொண்ட இல் ஜெசு மாதாகோயிலும், இந்தத் தேவாலயமும் 17 ஆம் நூற்றாண்டின் புதுமை பாணிக் கலைக்கு சிறந்த எடுத்துக் காட்டாவன.

காலியும் போசோவும் உருவாக்கிய திரிபுக்காட்சி, ஓவிய இடப்பரப்பும், உண்மை இடப்பரப்பும் ஒருங்கிணைய வழிசெய்தன. காலி ஓவியமாகத் தீட்டிய உருவங்கள் பார்வையாளர் நிற்கும் தேவாலயத்தின் உண்மை இடப்பரப்புக்கு நீட்டப்பட்டிருக்கின்றன. போசோ, இடப்பரப்பை ஓவியமாகத் தீட்டி, தேவாலயத்தின் உண்மை இடப்பரப்பை இரட்டிப்பாக்கினார். போசோவின் சுவரோவியத்தின் மையத்தில் எல்லா இணைவரைகளும் சென்று மறைவதாகத் தோன்றும் புள்ளி ஒன்று அமைந்து, அதைச் சுற்றிலும் முகடு அமைக்கப்பட்டது. அவருடைய இந்தப் புதிய உத்தியின் காரணமாக, ஓவியத்தின் விளைவுகள் கட்டிடக் கலையுடன் ஒருங்கிணைகின்றன. காலியைப் பொறுத்தவரையில், அவருக்குச் சிற்பக்கலை கைகொடுத்தது. ஓவியக்கலையும், சிற்பக்கலையும் இணைந்து 18ஆம் நூற்றாண்டில் வெற்றிக்கொடி நாட்டின. அற்புத வண்ணக் கலவையும், கலைப் பண்புகளும் சேர்ந்து, பார்வையாளரின் கண்ணுக்கு பெருமிதத்தோற்றத்தைக் காட்டுகின்றன ஆனால் அவை, ஆன்மாவில் எவ்வித உணர்ச்சியினையும் தூண்டவில்லை. இவை அழகிய ஓவியங்கள்; தொழில்நுட்பத்தில் மனங்கவர்பவை. ஆனால் அவை, மனத்தைத் தியானத்திற்கு வழிப்படுத்தவில்லை. ஓவியங்கள் கண்ணுக்கு விருந்தளிகின்றன. அவற்றில் இயல்பு நவிற்சியின் எழில் வெளிப்படுகிறது. ஆனால், ஆன்மாவின் இரகசிய அவலக்குரல் வெளிப்படவில்லை.

(முப்பத்தைந்தாம் பக்கத்தொடர்ச்சி)

18ஆம் நூற்றாண்டில், இறக்குமதியான கலை வடிவங்களையும் ஒருங்கிணைத்துச் ஒரு புதிய பகுத்தறிவுப் பாணியை உருவாக்கபுதுமைப்பாணி கலை முயன்றது. ஆதிக்கப் பண்பாட்டினையும், அதற்கு அடிமைப்பட்ட மக்களின் குறிப்பிட்ட சிறப்பியல்புகளையும் ஒருங்கிணைத்துப் பண்பாட்டு வெளிப்பாட்டுக்கான புதிய வடிவங்களைத்தோற்றுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த இணக்க மனப்பான்மையும் அணுகுமுறையும் பழைய குடியேற்ற ஆதிக்கவாதிகளை இக்கட்டான சூழ்நிலையில் தள்ளியது 18ஆம் நூற்றாண்டுக் குடியேற்ற ஆதிக்கவாதிதங்களை மறுமலர்ச்சியாளர்கள் எனக் கூறிக் கொண்டனர். அவர்கள் தங்கள் ஆதிக்கப் பிடியை கைநழுவ விட விரும்பவில்லையென்றாலும் எல்லா மக்களும் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டும் என்ற புதிய கோட்பாட்டிற்கேற்ப லத்தீன் அமெரிக்க மக்களும் வழிச செலுத்தப்படுதல் வேண்டும் என விரும்பினர்.

இத்தாலியில் நாடு கடந்துவாழ்ந்து வந்த மெக்சிக்கோவைச் சேர்ந்த ஒரு இயேசு சங்கக் குழுவினர் பொதுவாக மெக்சிக்கோவிலும், லத்தீன் அமெரிக்காவிலும் இருந்த நிலையை ஆராய்ந்தனர். இதன் பலனாக, பயனற்றவையென ஒதுக்கப்பட்டு வந்த அந்த மண்டலத்தும் பண்பியல்புகள், புதியதொரு தன் வெளிப்பாட்டு வடிவத்

படிப்பகம்

www.padippakam.com

திற்கு அடிப்படையாகக் கருதப்படலாயின. அயல்நாட்டுப் பண்பாட்டுக் கொள்கை அப்படியே பின்பற்றாமல் தங்கள் சொந்தப் பண்பியல்புகளைப் பேணிக் காப்பதற்குச் சில மக்கள் குழுமங்களுக்குள்ள உரிமைகளையும் அவர்கள் உணர்த்தினார்கள். சீர்குலைவுச் செயல் ஒரு புதிய நடவடிக்கையாயிற்று. தீண்டாதவர்களாகக் கருதப்பட்டவர்கள் தீவிரவாதிகளாகப் போற்றப்பட்டனர்-

''மட்டமான படியெடுப்பு'', தன் வெளிப்பாட்டுக்கான ஒரு வழிமுறையாகியது. இதை லத்தீன் அமெரிக்க மக்கள் உணரத்தொடங்கியதும், அவர்கள் தங்கள் தற்பண்பினை வடிவமைத்துக்கொள்ளலாயினர். அப்போதுதான், இணக்கப்படுத்தமுடியாதவை எனக் கருதப்பட்டவற்றை இணக்கப்படுத்த அவர்கள் முயன்றனா. ''நாங்கள் யார்? ஸ்பானியர்களா, சிவப்பிந்தியர்களா?'' என்ற கேள்விக்குச் சைமன்பொலீவார் வாயிலாக அவர்கள் ''நாங்கள் அமெரிக்கர்கள்!'' என்று விடையளித்நார்கள்.

யுனெஸ்கோ கூரியர்

அடுத்த டிசம்பர் 87 இதழ்

மனிதனும் உயிர் மண்டலமும்

பல்வேறு வழிகளாலும் மாசுபடுத்தப்பட்டுவரும் உலகில், மக்கள் எதிர்கொண்டுள்ள மாசுபாட்டுப் பிரச்சினைகளை, உலக அறிவியல் ஆராய்ச்சி வல்லுநர்களைக் கொண்டு ஆயும் இதழாக வெளிவருகிறது.

மற்றும்

சோவியத் உக்ரேனியன் நாடகக் கலை நிறுவனர் லெ குர்பாசின் 100-வது ஆண்டு நிறைவு விழா, ஜியார்ஜியன் எழுத்தாளரும் கவிஞருமான சாவ் சவாட்ஸின் 150-வது ஆண்டு நிறைவு விழாக் கட்டுரைகளும் இவ்விதழில் இடம் பெறுகின்றன.

(முப்பத்தெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

அவை அலங்கார முகமூடிகள், பறவைகள், குரங்குகள் போன்ற உருவங்கள் அமைந்த செதுக்கோவியங்கள், பப்பாளி, அன்னாசி, வாழை போன்ற மரங்களின் வடிவங்கள் போன்ற அணிவேலைப்பாடுகளாகப் பயன்படுத்தப்பட்டன. இந்த அலங்கார வேலைப்பாடுகள், மேனாட்டுக் கலையின் கனபரிமாணங்களுடன் இல்லாமல், தட்டையான அமைப்புடன் அமைந்தன.

லத்தீன் அமெரிக்க புதுமைப் பாணிக்கலையின் மற்ற முக்கிய அம்சங்களில் ஒன்று திரையோவியங்கள். இவை புதிய உலகத்தேவாலயங்களை அலங்கரிப்பதற்கான தனிச் சிறப்பான அம்சங்களுடன் விளங்கின' இவை பண்டையச் சரிகைச் சித்திர வேலைப்பாடுகளுடனும், துப்பாக்கி ஏந்திய தேவதைகள், கலப்பினப் புனிதர்களின் உருவங்களுடனும் அமைந்தன. சிற்பங்களில் மூர்களுக்குப் பதிலாகச் சிவப்பிந்தியர்களின் உருவங்களே சித்திரிக்கப்பட்டன. அரசர்களைச் சித்திரிக்கும்போது அரசன் கறுப்பு உருவத்திலேயே சித்திரிக்கப்பட்டான். சில சமயங்களில் சிவப்பிந்தியர்களின் உருவத்திலும் மன்னர்களின் வடிவங்கள் அமைந்தன, டிட்டிக்காக் கா ஏரியின் கரையிலுள்ள சான் ஜுவான் தேவாலயத்தில் காணப்படும் குழந்தை இயேசுவின் உருவம், 'ஆய்மாரா' என்ற சிவப்பிந்தியக் குழுவினரின் குழந்தையின் வடிவத்தில், அவர்களுடைய ஆடையணிகளுடன் சித்திரிக்கப்பட்டுள்ளது. இது இயேசுதானா என்ற ஐயத்தைப் போக்கும் வகையில் ''நான்தான் இயேசு'' என்று அதில் எழுத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது. பல சுவரோவியங்களில் இன்கா சிவப்பிந்திய உருவங்கள் பகட்டான ஆடைகளுடன் சித்திரிக்கப்பட்டுள்ளன. குடியேற்ற ஆதிகக கால மக்கள் பண்புகளைச் சித்திரிக்கும் படைப்புகளும் உள்ளன. இவற்றுள், ரோசா-டி லிமா (1586-1617) என்ற புனிதரின் ஓவியங்களும், 'நில நடுக்க இயேசு' என்ற ஓவியமும் குறிப்பிடத்தக்கவை. எப்போதும் இயற்கையினால் அச்சுறுத்தப்பட்டு வரும் மக்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் இந்த ஓவியங்கள் அமைந்துள்ளன.

லத்தீன் அமெரிக்காவில் காணப்படும் புதுமை பாணிக்கலை ஸ்பானிய அல்லது போர்ச்சுகீசிய கலையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவைதான் என்று கருதிவிடமுடியாது. அது ஒரு கலப்புக்கலை. அதில் இரண்டுக்கும் மேற்பட்ட பண்பாடுகள் கலந்துள்ளன. ஸ்பானிய மரபுகளும், அரபுப் பாரம்பரியமும், சிவப்பிந்தியப் பண்பாடுகளும், கறுப்பு மக்களின் சிறப்பியல்புகளும் அவற்றில் ஒருங்கிணைந்துள்ளன. இத்துணை செல்வாக்குகளும் சீராக ஒருங்கிணைந்து ''லத்தீன் அமெரிக்க புதுமைபாணிக் கலை'' என்னும் அற்புதக் கலைப்பாணியாக உருவாகியுள்ளது.

(நாற்பத்தியோராம் பக்கத் தொடர்ச்சி)

மாக்கல்லில் செதுக்கப்பட்ட முகப்பு மண்டப வாயில்கள் முகப்புக்கு உயிர்த்துடிப்பை அளிக்கின்றன.

ஊரோ பிரிட்டோவிலுள்ள ஃபிரான்சிஸ்கன் தேவாலயத்தில், மாக்கல்லில் செதுக்கப்பட்ட சமய உரைமேடைகளுடன் கூடிய திருக்கோயில் புடைச்சிறைகள் உயர்ந்த பலி மேடையில் தொடங்கி, வில் வளைவான கூரை, பக்கச்சுவர்களுடன் ஒருங்கிணைந்து ஒருமுகப்படுகின்றன.

பிரேசிலிய புதுமைக்கலைப் பாணிக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது அலெயாதினோவின் மிகச் சிறந்த படைப்பாகிய பாம் ஜேசஸ் டி மாடோசின்ஹோஸ் கோயில்திருவிடம் ஆகும். இது மினாஸ் ஜெராய்சில் அமைந்துள்ளது. கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை ஆகியவற்றுக்கு அற்புத எடுத்துக்காட்டாக விளங்கும் இந்தக் கோயில் திருவிடம், யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது. பரந்த பள்ளத்தாக்குகளை நோக்கி ஒரு குன்றின் உச்சியில் நிற்கும் இந்தத் தேவாலயத்தில் மாடிக்குச் செல்லும் படிக்கட்டின் இருபக்கச் சுவர்களிலும் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ள பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் பன்னிருவரின் முழுஉருவச் சிற்பங்கள் மாக்கல்லில் அமைந்தவை. இவை அற்புதமான ஒரு சீர்மையும் உயிர்த்துடிப்பும் உடையவை. தேவாலயத்தின் முன்புறமுள்ள சரிவில் பல்வண்ணக்கலை வேலைப்பாடுடைய மரச்செதுக்குருவங்கள் அமைந்துள்ளன. இவை அலெயாதினோவாவால் வடிக்கப்பட்டவை. இதனைச் ''சிலுவைக்கு வழி'' என்றும் அழைப்பர். கிறிஸ்துவின் மிக அற்புதமான ஏழு உருவச் சிலைகளும் இதில் அடங்கும்.

(நாற்பத்திநான்காம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய ஐரோப்பிய புதுமை பாணிக் கலை சமயத்தை ஆற்றலுடன் வெளிப்படுத்திய பிறகு, மறுமலர்ச்சி இயக்கம் மேலோங்கியது. ஐரோப்பிய வரலாற்றில் புதிய யுகம் பிறந்தது. உண்மையினை ஒருங்கிணைத்துப் பார்ப்பதைவிட பகுப்பாய்வு செய்து பார்க்கும் நோக்கம் தோன்றியது.

எனினும் இன்று, புதுமைபாணிக் கலையில் தீவிர ஆர்வம் மீண்டும் தோன்றியுள்ளது. அதன் ''சுதந்திரமான'', இயக்காற்றல் வாய்ந்த வடிவங்கள் நவீனபாணிக் கலையுடன் அடிப்படையில் ஒத்திருக்கிறது. கற்பனையைவிட நடைமுறை நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அதன் போக்கு, இன்றைய வாழ்வின் சில அம்சங்களுடன் தொடர்புடையதாக விளங்குகிறது. அதன் 'நோக்கங்களும், சமூகப் பின்னணியும் வேறுபட்டிருந்தாலும், புதுமைபாணிக் கலையிலிருந்து நாம் நிறையக் கற்றுகொள்ளமுடியும். முக்கியமாக, போரோமினி பாணிப் படைப்புகள், இன்றையக் கட்டிடக்கலைஞர்கள் பலருக்கு ஒருவகை விடுதலையுணர்வை அளித்துள்ளன.

தமிழில்: இரா. நடராசன்

படிப்பகம்

www.padippakam.com

புதுமைக்கலை பற்றிய தொகுப்பு

புதுமைக்கலைபற்றிய கருத்துகள்

'பரோக்' (புதுமைக்கலை) எனும் சொல் 'கரடுமுரடான' முதிராத முத்தைக் குறிக்கும் 'பரோக்கோ' எனும் போர்ச்சுக்கீசிய சொல்லி லிருந்து பெறப்பட்டது என்பது ஒரு கருத்தாகும். 18ஆம் நூற்றாண்டில் அது கட்டடக் கலையில் ''இயல்பு கடந்த விறைப்பு'' அல்லது ''மடமையின் உச்சி'' என்றும், இசையில் ''முரண்பாட்டுச் செறிவு'' (ஷான் ஷாக் ருசோ) என்றும் கூறப்பட்டது. பொதுவாக அதை ''பொருத்த விதிகளைப் பின்பற்றாமல், கலைஞனின் மனப்போக்கிலே வெளிப்படுப்'' கலை என்றனர் (பெர்னட்டி, ''திக்சியோனேர் போர்த்தாத்திஃப் தெ பெய்ந்தியூர், ஸ்கல்ப்தியூர் எ கிராவியூர்,'' பாரிஸ் 1757).

''புதுமைக்கலைக் காலக் கட்டடக்கலை, மறுமலர்ச்சிக்கால மொழியே பேசியபோதிலும் சாட்டுமிராண்டியின் பேச்சுவழக்கில் பேசுகிறது'' (ஜேக்கப் பர்க்ஹார்ட், ''இல் சிசரோன்'', 1860).

''கிராம அடிப்படையுள்ள சிறந்த கலை; நிலாக்கிழார் உருவாக்கிய கலை. இது நடுத்தர வகுப்பார் படைத்த பண்டைய கலைக்கு முரணானது'' (வி.எல். தாப்பியே ''பரோக் எச்கிளாசிசம்'' 1957)

''உயர்குடியும் நடுத்தர வகுப்பும் கலந்த கதம்தாலிக்க, முடியரசுச் சமூக மேட்டுக்குடி, நகர்புறக் கலை'' (ஜி. பேசின் ''தெஸ்தின் த்யூ பரோக்'' 1970).

''கலையின் வரலாறு முழுவதும் தோற்றத்தில் தொடர்ந்து மாறி வரும் உணர்வு நயத்தின் நிலையான கூறே புதுமைக்கலை'' (இ. தோர், ''லோ பரோக்கோ'' 1930).

மேலும் படிக்கவேண்டியவை

- 'ரினேசான்ஸ் அண்டு பரோக்' எச். உல்ஃப்ளின், கோர்னல் பல்கலைக்கழக அச்சகம், அமெரிக்கா, 19ₙ7, காலின்ஸ் பதிப்பகம், லண்டன், 1984
- 'பிரின்சிப் பிள்ஸ் ஆஃப் ஆர்ட் ஹிஸ்டரி' எச். உல்ஃப்ளின், டோவர் பதிப்பகம், நியூயார்க், 1949.
- 'டெர் பரோக் ஆல்ஸ் குன்ஸ்ட் தெ ஷெஷென்ர ஃபோர்மாசியோன்' (1921; 'பரோக், தி ஆர்ட் ஆஃப் தி கவுண்டர்-ரெஃபர்மேஷன்'), டபிள்யூ, வெய்ஸ்பாக்.
- 'லார் பரோக்' ஒய். போத்தினோ, மாசினோத் பதிப்பகம், பாரிஸ் 1936.
- 'தி ஸ்டோரி ஆஃப் ஆர்ட்' இ. எச். காம்பிரிச், ஃபைதன் அச்சகம், லண்டன், 1957.
- (பரோக். தி ஏஜ் ஆஃப் எக்ஸாபரன்ஸ்' டி. ஸ்காரிஸ்பிரிக் ஓர்பிஸ் பதிப்பகம், லண்டன் 1973.
- 'பில்டிங் தி எஸ்கோரியல்' ஜி. கூப்ளர், பிரின்ஸ்டவுன் பல்கலைக்கழக அச்சகம். அமெரிக்கா, 198..
- 'பரோச் அண்டு ரொக்கோகோ இன் லாட்டின் அமெரிக்கா' (2 தொகுதி). பி. கெலமன், டோவர் பதிப்பகம், நியூயார்க், 1951, 1967.
- 'தி ஸ்டோரி ஆஃப் ஆர்கிடெக்சர் இன் மெக்ஸிக்கோ' டி. இ. சான் ஃபோர்டு, டபிள்யூ. டபிள்யூ, நார்ட்டன் அண்டு கம்பெனி, நியூயார்க், 1947.
- 'தி ஆர்ட் அண்டு ஆர்கிடெக்சர் இன் ரஷ்யா' ஜி. எச். ஹாமில்டன் (பெலிக்கான் ஹிஸ்டரி ஆஃப் ஆர்ட்) பெங்குவின் புக்ஸ், ஹார்மண்ட்ஸ் வொர்த், பிரிட்டன், 1954.
- 'ஆர்ட் அண்டு ஆர்கிடெக்சர் இன ஃபிரான்ஸ் 1500-1700' எ. பிளண்ட் (பெலிக்கான் ஹிஸ்டரி ஆஃப் ஆர்ட்) பெங்குவின் புக்ஸ், ஹார்மண்ட்ஸ் வொர்த், பிரிட்டன 1953, 1981.

சில புதுமைக்கலை அரும் படைப்புகள்

முகப்புகள்; எஸ் கார்லே ஆல் குவாதரோ ஃபோத்தேன், ரோம் பரோமினி, பளாசோ காரிஞானோ, தூரின், குவாரினி.

சிற்பம் : 'புனித தெரசாவின பரவசம்' மரியா டெல்லா விட்டோரியா, ரோம் பெர்னினி 'சிலுவைப் பாதை' வரிசை. அலெயாதினோ, போம் ஜீசஸ் தெ மாட்டோசின் ஹாஸ் ஆலயம், கொங்கோன்ஹாஸ் தோ காம்போ, பிரேசில்

அணி அலங்காரம்: 'ஒளி ஊடுருவல்' நார்சிசோடோமே (டோலடோ பேராலயம், ஸ்பெயின்)! புனித ஃபிரான்சிஸ் ஆலய முகப்பு, மெக்ஸிக்கோ; ஆலய உட்பகுதிகள்; புனித ஜான் நெப்போமுக் ஆலயம், மியூனிக், சாவ் டொமிங்கோ ஆலயம், சால்வடோர், பிரேசில்; 'கன்னிமரியின் விண்ணேற்றம்' இ க்யூ ஆசாம், ரோர் மடாலயம், ஜெரமானிய கூட்டாட்சிக் குடியரசு (அலங்காரச் சிற்பம்); சாந்தா மரியா டோனாட்ஸின்ட்லா ஆலயக் கூரை மெக்ஸிக்கோ.

மாளிகைகளும் அரண்களும் : நிம்ஃபன்பர்க், உர்ஸ்பர்க் (பவேரியா, ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசு), ஸ்டுப்பினிகி (பீட்மாண்ட் இத்தாலி).

ஓவியம் கூரைச் சுவரோவியம், பார்பரினி மாளிகை, ரோம்; பியத்ரோ தா கோர்த்தோனா; சேசுவின் மாடம்; ரோமில் மற்றொன்று காவ்லி.

''தினலயில்லா'' கட்டடக்கலை: பாரிஸிலுள்ள சான்-ஷெர்மேல ஊற்றுச் சதுக்க வெற்றி வளைவு. இது ஆகஸ்ட் 26, 1660இல் ஃபிரெஞ்சு மன்னர் 14 ஆம் லூயி மன்னரின் துணைவியார் ஆஸ்திரிய நாட்டு மரிய தெரசா வருகைக்காக கட்டப் பெற்றது.

படிப்பகம்

www.padippakam.com

No. M 8276

படிப்பகம்